கல்கி



KALKI செப்டம்பர் 25,1955 4 அணா








லைப்பாய் சோப்

தினசரித் தொல்லையான அழுக் கிலிருக்கும் கிருமிகளிலிருந்து உங்களைப் பாதுகாக்கிறது.



இந்தியாவில் தயாரித்தது.

L. 252-50 TM

மலர் 15
இதழ் 8


கல்கி

மன்மத ஸ்ரீ
புரட்டாசி 9

பொருளடக்கம்

1955 செப்டம்பர் 25

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


பிரஷ் - கிர்லோஸ்கர்
BRUSH
KIRLOSKAR
ELECTRIC MOTORS
மோட்டார்கள் 350 H. P. வரையில்
மேலே உள்ளது போன்ற TB டைப் மோட்டார்கள் 1500 RPM.ல் 100 HP. வரை தயாரிக்கப்படுகிறது. ஸ்குரல் கேஜ் மற்றும் ஸ்லிப்ரிங் டிசைன்களிலும் கிடைக்கும்.
ஈரமான அல்லது தூசி, தும்புகள் அதிகம் சேரக் கூடியதாக உள்ள பௌண்டரிகள், கல் உடைக்கும் இடங்கள், சிமெண்ட், பேப்பர், இரும்பு அல்லது மாவு அரைக்கும் தொழிற்சாலைகளில் எந்தக் கடினமான வேலைகளுக்கும் பிரஷ் கிர்லோஸ்கர் மோட்டார்களுக்கு ஈடு வேறு கிடையாது.
விற்பனைக்குப் பிறகு சேவை அளிப்பது
ஓர் விசேஷ அம்சம்
KIRLOSKAR KE ELECTRIC
KIRLOSKAR ELECTRIC COMPANY LIMITED, BANGALORE-3.
சோல் ஏஜன்டுகள்
PARRY & CO. LIMITED
மதராஸ் : தபால் பெட்டி நெ. 12
பம்பாய் : தபால் பெட்டி நெ. 508
கல்கத்தா : தபால் பெட்டி நெ. 208
நியூடெல்லி : தபால்பெட்டி நெ.172



மலர் 15 | தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற | மன்மத ௵
இதழ் 8 | தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | புரட்டாசி 9

மற்றொரு நல்ல சகுனம்

உலகில் சாந்தியும் சமாதானமும் நிலவுவதற்குப் பல அறிகுறிகள், சுப சகுனங்கள் தோன்றத் தொடங்கி யிருக்கின்றன. பண்டித நேரு ரஷ்யாவுக்கு விஜயம் செய்ய ஒப்புக் கொண்டதிலிருந்தே இச் சூசகங்கள் தோன்றத் தொடங்கின. ஜினிவாவில் வல்லரசுத் தலைவர்கள் கூடிச் சமுகமாகப் பிரிந்தார்கள். கம்யூனிஸ்ட் சீனாவிலிருந்து சில அமெரிக்கக் கைதிகள் விடுதலையானார்கள். இப்பொழுது மேற்கு ஜெர்மனியின் பிரதம மந்திரி டாக்டர் அடினார் ரஷ்யாவுக்கு விஜயம் செய்து விட்டு வந்திருப்பதும் உலகுக்கு ஓரளவு நம்பிக்கை யூட்டுவதாகவே இருக்கிறது.

ஜெர்மனியும் ரஷ்யாவும் சென்ற யுத்தத்தில் பகை நாடுகளாக இருந்தன. ரஷ்யா ஜெர்மனியைத் தோற்கடித்தது. ஜெர்மனியின் படையெடுப்பினால் ரஷ்யா அடைந்த கஷ்ட நஷ்டங்கள் கொஞ்சமல்ல. அதேபோல் ஜெர்மனி ரஷ்யாவிடம் பெருந் தோல்வியடைந்துள்ளது. ரஷ்யா மட்டும் பகை நாடாகத் திரும்பாதிருந்தால் சரித்திரமே வேறு விதமாக இருந்திருக்கும். அதனால் ஜெர்மனிக்கு ரஷ்யாவின்மீது இன்னும் ஆத்திரம் இருக்கத்தான் செய்யும்.

ஆகவே இத்தகைய நிலையிலிருக்கும் இரு நாடுகளின் தலைவர்கள் சமுகமாகப் பேசி நல்லபடி திரும்பி யிருக்கிறார்கள் என்பதே சமாதானத்துக்கு மகத்தான அறிகுறி என்று கருத வேண்டும். அதற்கு மேலும், இரண்டு விஷயங்களில் இருநாடுகளும் ஒரு நல்ல முடிவுக்கு வந்திருக்கின்றன.

ரஷ்யாவில் மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த ஒன்பதினாயிரம் யுத்தக் கைதிகள் இருக்கிறார்கள். அதாவது மேற்கு ஜெர்மனியிலுள்ள ஒவ்வொரு நகரத்தையும் ஜில்லாவையும் சேர்ந்த யுத்த வீரர்கள் நீண்ட நாட்களாக ரஷ்யாவில் கைதிகளாக இருக்கிறார்கள். ஆகவே அடினார் இப் பிரச்னை சம்பந்தமாக ரஷ்யாவுடன் பேச்சு வார்த்தை நடத்தும்படி ஏற்பட்டது.

மேற்கு வல்லரசுகள் யுத்தக் கைதிகள் விஷயமாக யாதொன்றும் பேச வேண்டாம் என்று அடினாருக்குப் பாடம் சொல்லி அனுப்பியிருந்தும் அடினாரினால் பேசாமல் இருக்க முடியவில்லை. தனது நாட்டு மக்களின் உள்ளத்தில் மேலோங்கி நிற்கும் பிரச்னை — பெருங் கவலை - சம்பந்தமாகப் பேசாது திரும்புவது அடினாருக்கு மிகவும் அவமானகரமாக இருக்குமல்லவா? இது விஷயமாக அவர் பேச வேண்டியதாகி விட்டது. ரஷ்யாவும் அந்த ஒன்பதினாயிரம் கைதிகளையும் விடுதலை செய்வதாக ஒப்புக் கொண்டது. அதுமட்டுமல்ல, ''ஐயா, அடினாரே, நீங்கள் இங்கிருந்து உங்கள் பான் நகரத்துக்குத் திரும்பிப் போய்ச் சேருவதற்குள் உம்முடைய தேசக் கைதிகளை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்படும்'' என்று வேறு ரஷ்யப் பிரதமர் புல்கானின் கூறினாராம்.

அதுமட்டுமல்ல, மேற்கு ஜெர்மனியின் தலைநகரான பானில் ரஷ்யத் தூதர் காரியாலயமும், இரு நாடுகளிடையே கலாச்சார உறவும் ஏற்படுத்திக் கொள்ள முயல வேண்டும் என்று வேறு ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

மற்றப் பல பிரச்னைகளில் எதிர்பார்த்தபடி ஒரு முடிவுக்கு அவர்கள் வரவில்லை. ஆயினும் மேற்கண்ட இரு முடிவுகளும் உலகம் மகிழ்ச்சியுடன் வரவேற்க வேண்டிய முடிவுகளாகும். மேற்கு வல்லரசுகளாகிய பிரிட்டனும் அமெரிக்காவும் 'ஐயோ, அடினார் இப்படிக் குட்டையைக் குழப்பி விட்டு வந்து விட்டாரே! நாமொன்று நினைக்க வேறொன்று நடந்து விட்டதே' என்னும் மனோபாவனையில்

சந்தோஷப் படுவதா துக்கப்படுவதா என்று தெரியாமல் தவிக்கிறார்கள்.

ஆனால் நமது பாரதப் பிரதமர் நேரு இவ்விஷயத்தில் சரியான நிலையை வெகு தெளிவாகச் சென்ற வாரம் இந்திய மக்கள் சபையில் எடுத்துக் கூறியிருக்கிறார்.

"மேற்கு ஜெர்மனிக்கும் ரஷ்யாவுக்கும் சமீபத்தில் கையெழுத்தான ஒப்பந்தம் பூரணமானதாக இருக்கவில்லை என்றாலும், ஜெர்மன் பிரச்னை விஷயத்தில் 'மோதல்களை'த் தவிர்த்திருக்கிறது. அது ஒன்றே மகத்தான பலனாகும்" என்றார்.

ஆம், தோல்வியுற்ற நாடும், வெற்றி பெற்ற நாடும் சம அந்தஸ்திலிருந்து இவ்வளவு தூரம் சுமுகமான உறவு ஏற்படுத்திக்கொண்டிருப்பது மகத்தான பலன் என்பதில் என்ன சந்தேகம்?

ருஷ்யாவின் போக்கு

சமீப காலத்தில் ரஷ்யாவின் போக்கில் பல மாறுதல்கள் காண்கின்றன. அதாவது ரஷ்யா உலக நாடுகளுடன் நல்லுறவையும் நட்பையும் வளர்த்துக் கொள்ள விரும்புவதாக அடிக்கடி பிரகடனப்படுத்தி வருகிறது. நேருஜிக்கு அளித்த வரவேற்பு, மார்ஷல் டிட்டோவுடன் நடத்திய பேச்சு வார்த்தைகள், மேற்கு ஜெர்மன் பிரதமருடன் செய்து கொண்ட ஒப்பந்தம், இப்படிப் பல சம்பவங்கள் உலக மக்களிடையே ரஷ்யாவின் போக்கில் பெரு மாறுதல் உண்டாகியிருப்பதன் காரணங்களைப் பற்றிச் சர்ச்சை எழுப்பியிருக்கிறது. இதைப் பார்த்து, பலர் ரஷ்யாவிலேயே கம்யூனிஸக் கொள்கைக்கு ஆட்டம் கண்டு விட்டது என்று எண்ணவும் பேசவும் தொடங்கியிருக்கிறார்கள்.

ஆனால் சென்ற திங்கட்கிழமை பத்திரிகையில் வெளியான ருஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின் காரியதரிசி குருஷேவ் பேச்சில், "எங்களுக்கு கம்யூனிஸக் கொள்கையில் நம்பிக்கை குறையவில்லை" என்று கூறியிருக்கிறார். ஆனால் மற்ற அரசாங்க முறைகளையும், அதாவது முதலாளித்துவ அடிப்படையில் இயங்கும் மற்ற அரசாங்கங்களையும் தாங்கள் அங்கீகரிக்கத் தொடங்கியிருப்பதாகவும், இரு நாடுகள் வெவ்வேறு கொள்கைகள் கடைப்பிடித்தாலும் நட்புறவு பூண்டு நேசமாக வாழலாம் என்பதைத் தாங்கள் நம்புவதாகவும் கூறியிருக்கிறார்.

இதுதான் பாரதப் பிரதமர் உலகுக்கு அளித்த புதுக் கொள்கை. சமாதானத்துக்குக் காட்டிய வழி. குருஷேவின் இம்மொழிகளே போதும், நேருஜியின் ரஷ்ய விஜயம் எவ்வளவு வெற்றி அளித்திருக்கிறது என்பதை நிரூபிப்பதற்கு.

இன்றைய ரஷ்யப் போக்கின் உண்மை என்ன என்பதை நமது அருமைத் தலைவர் ராஜாஜி சில நாட்களுக்கு முன் கூறியதை இங்கு நினைவுபடுத்த விரும்புகிறோம்: "இதுவரையில் கம்யூனிஸ்ட் நாடுகளில் உள்ள மக்களுக்கு உலகத்தில் நண்பர்களே இல்லாமல் இருந்தது. எப்பொழுதுமே மனிதப் பிறவிக்கு நட்பு என்பது ஒரு அவசியமான மகிழ்ச்சி. இந்த மகிழ்ச்சியை நாடுவதும் அது இல்லாவிடில் சங்கடப்படுவதும் மனித இயற்கை............நேருஜியின் ஒவ்வொரு செயலிலும் முகத்திலும் களங்கமற்ற அன்பு பிரகாசித்தது. இது ருஷ்ய மக்களின் மனத்தை அவர்களையும் அறியாமல் கவர்ந்தது."

ருஷ்யாவின் போக்கில் ஏற்பட்ட இந்த நல்ல முன்னேற்றம், பாரதத்தின் வெற்றி மட்டுமல்ல; அன்பின் வெற்றி என்றே சொல்ல வேண்டும்.

பாடப் புத்தகங்கள் படும் பாடு!

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்பார்கள். நம் நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் எண், எழுத்து வாசனையின்றியே இருக்கிறார்கள். அதாவது கண்ணிருந்தும் எண், எழுத்து என்ற கண்கள் அற்றவர்களாக இருக்கிறார்கள். இந்த இழிநிலையைப் போக்கி நாட்டின் கல்வியறிவைப் பெருக்க எத்தனையோ வகையில் ராஜ்ய சர்க்காரும், மத்திய சர்க்காரும் முயல்கிறார்கள். அதில் ஒன்று, நிறையப் பள்ளிக் கூடங்கள் திறப்பதாகும்.

'ஓராசிரியர் பள்ளிக்கூடம்' என்று வேறு ஒரு புது வகைப் பள்ளிக்கூடங்கள் பல ஊர்களில் திறந்து வைத்திருக்கிறார்கள்.

பள்ளிக்கூடம் திறந்து வைத்தால் மட்டும் போதுமா! அங்கே படிக்கப் பிள்ளைகள் வர வேண்டும் அல்லவா! பள்ளிக்கூடம் என்றால் கூடவே புஸ்தகம், சிலேட், நோட்டு என்று சில்லறைச் செலவுகள் ஏராளம். இதற்கு எல்லாம்கூட, செலவழிக்க முடியாத நிலையில்தான் நமது மக்களில் பெரும்பாலோர் இருக்கிறார்கள்.

ஆனாலும் பள்ளிக்கூடங்கள் அதிகமாகத் திறக்கத் திறக்கப் பள்ளிக்கூடப் பாடப்புத்தகங்களின் பாடுதான் யோகமாகி விடுகிறது. நாட்டில் பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்கள் பிரசுரிக்கும் பிரசுராலயத்தாரும் அதிகமாகி விடுகிறார்கள்.

முன்பெல்லாம் பள்ளிக்கூடங்களில் பாடப் புத்தகங்கள் மூன்று முதல் ஐந்து ஆண்டுகள் வரை மாறா. அதனால் மேல்வகுப்புக்குச் சென்றுவிட்ட மாணவனிடமிருந்து கீழ் வகுப்பிலிருக்கும் மாணவன் புத்தகங்கள் அரை விலைக்கும், கால் விலைக்கும், ஏன், இலவசமாகக்கூட வாங்கிக் கொள்ள முடிந்தது. ஆனால் இப்பொழுது ஆண்டுதோறும் புத்தகங்கள் மாற்றப்படுகின்றன. அப்படி மாற்றப்படும் புத்தகங்களாவது விசேஷமான மாறுதலுடன் இருக்கின்றனவோ என்று கேட்டால் 'இல்லை' என்றுதான் சொல்ல வேண்டியிருக்கும். சென்ற வருடத்து முதல் வகுப்புப் புத்தகம் 'அணில், ஆடு' என்று ஆரம்பமாகியிருந்தால், இந்த வருஷத்துப் புத்தகம் 'அரம், ஆடு' என்று மாறித் தொடரும். மற்றப்படி அதிக மாறுதல் ஒன்றும் இராது. இந்தப் புத்தகங்களும் பத்து வருஷங்களுக்கு முன்பிருந்ததைவிட இரண்டு மடங்கு விலை அதிகமாகி இருக்கின்றன. அதனால் ஏழை நடுத்தர வகுப்பைச் சேர்ந்த பெற்றோர்கள் இந்தப் புத்தகங்களை ஆண்டுதோறும் வாங்க முடியாது கஷ்டப்படுகிறார்கள்.

இங்கிலையில் நமது மந்திரி திரு பக்தவத்சலம் அவர்கள் ஆரம்பப் பாடசாலைகளுக்கான புத்தகங்களைச் சர்க்காரே வெளியிடத் தீவிரமாக ஆலோசித்து வருவதாகக் கூறியிருப்பது மகிழ்ச்சி தரக்கூடிய விஷயம்.

ஆனால் சர்க்கார் வெளியிடும் புத்தகங்களை ஏழை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கிவிட்டு மற்றவர்கள் இப்பொழுது விற்பதைவிட இரண்டு மடங்கு விலை கொடுக்கும்படியாக இருந்துவிடக் கூடாது. மேலும் சர்க்கார் பிரசுரிக்கும் புத்தகங்கள் வெகு அழகாக இருக்க வேண்டும். பல வருஷங்கள் பள்ளி மாணவர்கள் உபயோகிக்கக்கூடிய நல்ல உயர்ந்த தாளில் வெளியிட வேண்டும்.

இப்படியெல்லாம் செய்தால், பெருவாரியான ஏழை மக்களுக்குச் சர்க்கார் நல்ல தொண்டு செய்தவர்களாவார்கள். ஆனால் எல்லாக் காரியங்களும் சர்க்காரே மேற்கொண்டு நடத்துவதாக ஏற்பட்டுவிட்ட சகாப்தம் இது. அந்த முறையில் இல்லாமல், எந்தப் புத்தகங்களைச் சர்க்கார் வெளியிடலாம், எவற்றைப் பிரசுரகர்த்தர்களுக்கு விடலாம் என்பதை ஒன்று கலந்து ஆலோசிப்பதும் அவசியமாகும்.

நாடு செழிக்க வழி

தனி ஆந்திர மாகாணம் ஏற்படுவதற்குத் தமிழ் நாட்டு மக்கள் எக்காலத்தும் இடையூறாக நின்றதில்லை. அவ்விஷயமாகத் தமிழ்ப் பெருமக்கள் அதிக அக்கறை காட்டியதால்தான், அந்த மகத்தான காரியத்தை அதிகச் சிக்கலின்றிக் குறுகிய காலத்தில் நிறைவேற்ற முடிந்தது. அதன் சம்பந்தமாக எழுந்துள்ள சில சில்லறைப் பிரச்னைகள் இன்னும் தீராமல் இருக்கின்றன என்பது உண்மையே. எனினும் அவை ஆந்திரர்களுக்கும் தமிழர்களுக்கும் உள்ள நட்பையும் நல்லுறவையும் சிறிதும் பாதிக்கவில்லை என்பது சில தினங்களுக்கு முன் வெளியாயிற்று.

சென்ற வாரத்தில் சென்னை முதல் மந்திரி ஸ்ரீ காமராஜ நாடார் ஆந்திர ராஜ்யத்தைச் சேர்ந்த சில இடங்களுக்கு விஜயம் செய்தபோது, சென்னை முதல் மந்திரிக்கு அவர்கள் காட்டிய மரியாதை தமிழ் நாட்டு மக்களுக்குக் காட்டிய மரியாதையே என்பதில் ஐயமில்லை.

சென்னை முதல் மந்திரியுடன் ராஜமகேந்திரத்துக்குச் சென்ற ஆந்திர உதவி முதன் மந்திரி ஸ்ரீ என். சஞ்சீவி ரெட்டி தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடிய ஒரு செய்தியை வெளியிட்டார். அதாவது, யாருக்கும் உபயோகமின்றிக் கடலில் சென்று கலக்கும் கிருஷ்ணா, கோதாவரி, துங்கபத்ரா முதலிய நதிகளின் நீரைத் தமிழ் நாட்டின் பாசனத்துக்குப் பயன்படுத்திக் கொள்வதில் தங்களுக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று குறிப்பிட்டார். ஆந்திரர்களுக்குக் கஷ்டமோ, நஷ்டமோ எதுவுமின்றித் தென்னிந்தியாவையே தான்யக் களஞ்சியமாக மாற்றக்கூடிய மேற்படி அற்புத யோசனையை வரவேற்காதவர்கள் இருக்க முடியாது.

வரவேற்கத் தகுந்த இந்த யோசனை, யோசனையின் வடிவிலேயே நின்றுவிடாமல் விரைவில் காரியமாக நிறைவேறுவதற்குரிய நிலை உண்டாகும் என்று எதிர்பார்ப்போமாக!

அட்டைப்பட விளக்கம்

கோலமிடும் கையே!

"கோல மிகும் கையே —
குனிந்து தலைவாசல் நிதம்
கோல மிடும் கையே —"

என்று அழகாகப் பாடினார், காலம் சென்ற நமது அருமைக் கவிஞர் "நிபன்".


வீட்டு வாசலிலே உள்ள துளசி மாடமும், அந்த முற்றத்தை மெழுகி அழகாக இடும் கோலமும், புனிதமும் எழிலும் நிரம்பிய தமிழ் நாட்டுக் காட்சிகள். குனிந்து கோலம் இடுகிற தமிழ் நாட்டு நங்கை நமது பண்பாட்டின் எழில் உருவம்.

வர்ணச் சேர்க்கையிலும், ஓவியக் கோடுகளிலும் மனோபாவத்துக்கு முக்கியம் கொடுத்து வரையப்படுகிற அஜந்தாச் சித்திரங்களை நேயர்கள் அறிவார்கள். கற்பனை வளத்தோடு கூடிய இந்தச் சித்திர வகையில் ஓவியர் எஸ். ராஜம் மூவர்ணங்களிலே கோலக் காட்சியை வழங்குகிறார்.

என்ன சேதி?

மூன்றே கால்

திருப்பாப்புலியூரிலிருந்தும் கடலூரிலிருந்தும் பி. வி. ஜிச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. எந்தச் செய்திகள் வந்தாலும்சமாதானங்களுக்குக் குறைவு இராது. சில முயல்களுக்கு மூன்றே கால்!



கதர் உண்டிகள்

அன்று காந்தி மகான் அன்னிய சர்க்காரின் சட்டத்தை மீறி 'உப்பு எடு' என்றார். பலர் உப்பை எடுத்தார்கள்.

நீதி மன்றங்களையும், கல்லூரிகளையும், சர்க்கார் காரியாலயங்களையும் பகிஷ்கரித்துச் சிறை செல்லுங்கள் என்றார். நம்மில் பலர் சிறை சென்றார்கள்.

அன்னியத் துணியை எரித்து நாட்டுத் துணியாகிய கதர்த் துணியைக் கட்டுங்கள் என்றார். நம்மில் பலர் கட்டினார்கள்.

ஆம், அவர்களையெல்லாம் ஏன் இந்தக் காரியங்களையெல்லாம் செய்கிறீர்கள் என்று கேட்டால் அவர்கள் கூறக் கூடிய பதில் ஒன்றுதான். அதாவது காந்தி சொன்னார், செய்தோம் என்பதுதான்.

ஆனால் காந்திமகானோ நீண்ட ஆலோசனைக்குப் பிறகே மக்களை இதைச் செய்யுங்கள். அதைச் செய்யுங்கள் என்றார். அதில் முக்கியமானதொன்று கதர்.

பாரதநாட்டு ஏழை மக்களின் வறுமையைத் தீர்ப்பது கதர் என்பது அறிந்து கதர் உடுத்துங்கள் என்றார். பஞ்சிலிருந்து கொட்டை பிரிக்கும் ஏழை முதல் கடைத் தெருவில் துணி விற்பவர் வரை பலருக்குச் சோறிடுவது கதர் என்று கண்டார் காந்தி மகான்.

நாட்டில் கிராமங்களின் தொழில் வளத்தைப் பெருக்கி வறுமையை விரட்ட முடிவு கட்டிக்கொண்டிருக்கும் சர்க்கார், கதர் பிரசாரத்துக்குத் தங்களால் இயன்ற உதவியைச் செய்ய முன் வந்திருப்பது மகிழ்ச்சியளிக்கும் விஷயமாகும்.

இந்த வருஷமும் காதி போர்டார் கதர் உண்டிகள் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த உண்டிகள் சர்க்கார் தபால் நிலையங்கள் மூலம் விற்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். தேசத்திலுள்ள 40,000 தபாலாபீசுகளில் இந்தக் கதர் உண்டிகள் கிடைக்கும். மக்கள் தங்கள் தேவைக்கு வேண்டிய உண்டிகள் பெற்றுக் கொண்டு சமயம் நேர்ந்த போது கதர்த் துணி வாங்கிக் கொள்ளலாம். இம் முறையினால் கதர் போர்டார் நூல் நூற்கும் பெண்களுக்கு முன் பணம் கொடுத்து உதவவும், நூல், துணி முதலியவை சேமித்துக் கொள்ளவும் இன்னும் பல வகையிலும் பயன்படும். சென்ற ஆண்டு எழுபது லட்சத்துக்குக் கதர் உண்டிகள் விற்பனையாயின. இவ்வாண்டும் பொது மக்கள் கதர் உண்டிகள் வாங்கி நாட்டு மக்களுக்கு உதவ வேண்டும் என்று காதி போர்டின் தலைவர் ஸ்ரீ வைகுந்த மேத்தா கோருகிறார். இந்தக் கோரிக்கைக்கு மக்கள் அனைவரும் முழு ஆதரவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

மூன்று தமிழ்ப் பெரியார்கள்


மூன்றுக்கும் தமிழுக்கும் மிகப் பொருத்தம் என்று தோன்றுகிறது. தமிழ் மக்கள் 'தமிழ்' என்ற வார்த்தையிலேயே மூன்று எழுத்துக்களை அமைத்திருக்கிறார்கள். அந்தத் தமிழ் மொழியை மூன்று குல மன்னர்கள் போற்றி வளர்த்தார்கள். முச் சங்கம் அமைத்தார்கள். தமிழும் முத்தமிழாக வளர்ந்தது. முக் கனிகளைப் போல் தனித் தனிச் சுவையுடன் அமிழ்தினும் இனிய தமிழ் விளங்கியது.

இது போல் மூன்று விதத்தில் தமிழ் வளர்த்த பெரியார்கள் மூவருக்கு மூன்று கழகங்கள் சேர்ந்து விழா எடுத்தன. சென்னை மாணவர் மன்றம், சென்னைத் தமிழாசிரியர் கழகம், பெத்துநாயக்கன் பேட்டைத் தாய்மார்க் கழகம் ஆகிய மூன்று கழகங்களும் திரு வி. க., மறைமலையடிகள், பாரதியார் ஆகிய மூன்று தமிழ்ப் பெரியார்களுக்கும் மிகச் சிறந்த முறையில் விழா கொண்டாடினார்கள்.


தமிழ் நாட்டில் தமிழ்ப் பற்று குறைந்திருந்த அந்தக் காலத்தில் தமிழ்ப் பற்றை உண்டாக்கி வளர்த்தவர்களில் இந்த மூன்று தமிழ்ப் பெரியார்களும் முக்கியமானவர்கள். தேச விடுதலையில் ஆர்வம் கொண்டிருந்தது போலவே அவர்கள் சமூக சீர்திருத்தங்களிலும் தீவிரவாதிகளாக இருந்தார்கள். சமூகத்தின் அர்த்தமற்ற குருட்டுப் பழக்க வழக்கங்கள் பலவற்றை எதிர்த்துப் போராடினார்கள். தங்கள் வாழ்க்கையிலேயே சமூக சீர்திருத்தங்களை நிறைவேற்றி இலட்சிய புருஷர்களாக வாழ்ந்தார்கள்.

இத்தகைய உத்தமப் பெரியார்களுக்குச் சென்ற 18வ. குருசாமி முதலியார் தொண்டை மண்டலத் துளுவ வேளாள

எதிர்பார்க்கலாமா ?



''கடந்த ஆறு மாதங்களில் சர்வதேச நிலைமை மிகவும் அபிவிருத்தி அடைந்திருக்கிறது. துப்பாக்கியில் இன்னும் தோட்டா பூட்டப்பட்டிருக்கிறது என்றாலும் அதன் விசைமீது விரல்கள் இல்லை......'' என்று நேருஜி டில்லி மக்கள் சபையில் கூறினார். அந்த விரல்கள் சமாதானத் தம்புரா மீது இயங்குமா?



ஒரு வருஷ அஸ்திவாரப் படிப்பு, மூன்று வருஷ பி. ஏ. படிப்பு என்ற புதிய திட்டத்தைச் சென்னை சர்வகலாசாலைச் சபை அங்கீகரித்துள்ளது.

உயர்நிலைப் பள்ளி மண்டபத்தில் திரு பரலி சு. நெல்லையப்பர் தலைமையில் விழா நடைபெற்றது. விழாவில் திரு சச்சிதானந்தம் பிள்ளை, திரு இராசாக் கண்ணனார், பாலூர் திரு து. கண்ணப்ப முதலியார், திரு ந. சஞ்சீவி, திரு பகீரதன் ஆகியோர் கலந்து கொண்டு மூன்று தமிழ்ப் பெரியார்களைப் பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

பேச்சுகளுக்கு இடையில் ஆடல் பாடலும் நடந்தன. தமிழ் நாட்டையும் தமிழையும் உயர்த்தும் முறையில் இந்தக் காலச் சூழ்நிலைக்கு ஏற்ற வண்ணம் அமைந்திருந்த அருமையான பல பாடல்களுக்குத் தாய்மார் கழகத்தைச் சேர்ந்த சின்னஞ்சிறு குழந்தைகள் ஆடியும், பாடியும் சபையோரை மகிழ்வித்தனர்.

ஸ்ரீமதி தாமரைக் கண்ணியாரும், இன்னும் பல தாய்மார்களும் கடவுள் வாழ்த்தும், பாரதியார் பாடலும் பாடினார்கள்.

இந்தத் தமிழ்ப் பெரியார் திருவிழாவை இவ்வளவு கோலாகலமாகக் கொண்டாடுவதற்கு முயற்சி செய்து வெற்றி பெற்ற திரு பயிலை சிவமுத்து அவர்களைப் பாராட்டுகிறோம்.

மொத்தத்தில் தமிழ் நாட்டுக்கும் தமிழர்களுக்கும் பெரிய அதிர்ஷ்டம் பிறந்திருக்கிறது. நல்ல காலம் பிறந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. தமிழ் மக்கள் தமிழ் வளர்த்த பெரியார்களை மறக்க மாட்டார்கள். நன்றியுடன் விழா கொண்டாடி, அவர்கள் புகழ் பாடிப் புகழ் அடைவார்கள் என்பதை நிரூபித்து விட்டார்கள். இதைவிட மகிழ்ச்சி அளிக்கும் விஷயம் வேறு என்ன வேண்டும்?

வாழிய செந்தமிழ்! வாழ்க தமிழ் நாடு!! வாழ்க தமிழ் மக்கள்!!!



ஆத்தன்குடி திரு பெ. லெ. இலக்குமணன் செட்டியார் மகள் செல்வி இந்திராளுக்கும் கோனாபட்டு திரு ராம. சு. லெ. சின்ன சுப்பிரமணியன் செட்டியார் மகன் செல்வன் இலக்குமணனுக்கும் (காரைக்குடி அழகப்பா கல்லூரி மாணவர்) செப்டம்பர் 5-ந் தேதி திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மணமக்களுக்கு அன்புப் பரிசுகளும் வாழ்த்துக்களும் வழங்கப் பெற்றன. கடல் கடந்த அன்பர்களிடமிருந்து ஏராளமான வாழ்த்துச் செய்திகளும் வந்தன.

வாழ்க, இந்திராள் — இலக்குமணன்

குழந்தை நாடகங்கள்

நம் நாடு சுதந்திரம் பெற்றபின் பல விதத்திலும் கலைகள் வளர்ந்துவருகின்றன. ஆய கலைகள் அறுபத்தி நான்கில் நாடகக் கலை மிக முக்கியமானது. வளர்ந்து வரும் அந்த நாடகக் கலையில் குழந்தைகள் நாடகக் கலையும் ஒன்றாக விளங்க வேண்டும் என்ற நோக்குடன் குழந்தை எழுத்தாளர் சங்கம் சில முயற்சிகள் செய்து வருகின்றது. அந்த முயற்சிகளுள் ஒன்றாகவே நடந்த மார்ச் மாதம் சென்னையில் குழந்தைகள் நாடகவிழா ராஜாஜி அவர்களால் துவக்கி வைக்கப் பெற்றுத் தொடர்ந்தாற்போல் மூன்று நாட்கள் நடைபெற்றது.

அந்த நாடக விழாவுக்குப் பிறகு, தமிழ் நாட்டின் பல பாகங்களிலும், தமிழர்கள் வாழும் வெளியிடங்களிலும் உள்ள பள்ளிக்கூடங்கள், குழந்தைச் சங்கங்கள் முதலியவற்றிலிருந்து குழந்தைகளுக்கான நாடகங்கள் வேண்டுமென விரும்புகிறார்களாம். நாடகக் கலையின் வளர்ச்சிக்கு இந்த ஆர்வம் தக்க சான்று. நல்ல நாடகங்கள் இன்னும் அதிகமாக எழுதப்பட்டால் இந்தக் கலை வெகு விரைவில் முன்னேற்றமடையும் என்பதில் ஐயமில்லை.

ஆகையால் குழந்தைகளுக் கேற்ற நாடகங்களை எழுதப் பலரும் முன் வர வேண்டும் என்ற நோக்கத்துடன், குழந்தைகள் ரசிக்கும் வகையில் குழந்தைகள் சூழ்நிலையை வைத்துக் குழந்தைகளே நடிக்கும் படியான நல்ல நாடகங்களை எழுதி அனுப்புவோருக்குச் சிறந்த முறையில் சன்மானம் வழங்கக் குழந்தை எழுத்தாளர் சங்கத்தார் முடிவு செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு நாடகமும் சுமார் ஒரு மணி நேரத்துக்கு இருக்கலாம் என்றும் குழந்தை எழுத்தாளர் சங்கத்தார் அறிவித்திருக்கிறார்கள்.

குழந்தைகளுக்கு நாடகங்கள் எழுத விரும்பும் எழுத்தாளர்கள் அது சம்பந்தமான மேலும் விவரங்களுக்குத் திரு அழ. வள்ளியப்பா, தலைவர், குழந்தை எழுத்தாளர் சங்கம், சென்னை-17 என்ற விலாசத்துக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

தமிழ் கூறும் நல்லுலகம்

பாரதியின் நினைவு நாளைத் தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் வெகு சிறப்பாகக் கொண்டாடியிருக்கிறார்கள்.

ஜமால்பூர் தமிழ்ச் சங்கத்தார் செப்டம்பர் 11-ம் தேதியன்று பாரதி விழாவைத் திரு கே. ஜகந்நாதன் தலைமையில் விமரிசையாகக் கொண்டாடினர். திரு கா. முத்தையா சாதி பேதமற்ற சமதர்மம் நிலவும் சமுதாயத்தை அமைக்கப் பாரதி காட்டிய பாதையைப் பின்பற்றிச் செல்ல வேண்டும் என்று பேசினார்.

பங்களூரில் இளைஞர் நல மன்றத்தின் சார்பில் நடந்த அமரகவி பாரதி தினத்தில் திரு எம். அந்தோனி தலைமை வகித்தார். பாரதி திருநாளை யொட்டி ஒரு கால் பந்தாட்டப் போட்டியும் நடத்தினர்.

ஆந்திர நாட்டில் தமிழ்ப் பணி ஆற்றி வரும் குந்தக்கல் தமிழ்ச் சங்கத்தாரும் பாரதியாரின் திருநாளைக் கோலாகலமாகக் கொண்டாடி மகிழ்ந்தார்கள். இவ் விழாவுக்குத் திரு எம். முனிரத்தினம் தலைமை தாங்கிச் சிறப்பித்தார். 'பாரதி காட்டும் உவமைகள்' என்னும் பொருள் பற்றித் திரு கே. சுந்தரராமனும், 'பாரதியும் கடவுள் பக்தியும்' என்ற தலைப்பில் திரு பா. ராமச்சந்திரனும், மற்றும் பல அறிஞர்களும் சொற்பொழி வாற்றினர். திரு நி. யாத்ருபூதம் பாரதிபாடலை இசையுடன் பாடினார்.

பம்பாய் தென்னிந்திய ஆதி திராவிட மகாஜன சங்கமும் தேசியகவி சுப்ரமணிய பாரதியாரின் நினைவு நாளை மிகச் சிறப்பாகக் கொண்டாடியது. சங்கத் தலைவர் திரு கு. ப. வேல் மேஸ்திரியார் தலைமை உரையாற்றினார். பம்பாய் நகரசபை தென்னிந்திய பாடசாலைகளின் கண்காணிப்பாளர் திரு எஸ். நடராஜன் பாரதியாரின் திருவுருவத்தைத் திறந்து வைத்தார். பல பாரதி அன்பர்கள் பாரதி கண்ட சமதர்ம பாணி சமுதாயத்தைப் பற்றிச் சொற்பொழிவாற்றினர். இறுதியாகத் திரு டி. பி. பத்மநாபன் குழுவினரால் நடத்தப்பட்ட கட்டபொம்மன் வில்லுப் பாட்டு நிகழ்ச்சியை மக்கள் மிகவும் ரஸித்துப் பாராட்டினர்.

பம்பாயிலே கல்யாண் பகுதியிலுள்ள வாணி வித்தியாசாலையிலும் பாரதியின் அமரதினம் அபாரமாக நடந்தேறியது. விழாவுக்குத் தலைமை வகித்த பிரின்சிபல் திரு எஸ். சீனிவாசய்யர் பாரதியின் இலக்கிய மேதையை வியந்து எடுத்துரைத்தார். மாணவர்கள் பாஞ்சாலி சபதத்தை வில்லுப் பாட்டில் அமைத்துப் பாடிச் சபையோரை மகிழ்வித்தனர்.

மைசூர் தமிழ்ச் சங்கத்தார் பாரதியாரின் அமர தினத்தையும், திருவாசகத்தின் பெருமையையும் செப்டம்பர் 14-ம் தேதி நினைவு கூர்ந்தார்கள். டாக்டர் திரு வி. சுப்ரமணியம் அவர்கள் தலைமையில் நிகழ்ந்த இந்த நினைவு தினத்தில் வித்வான் எஸ். உருத்திரபதி திருவாசகத்தின் கவி நயத்தையும் பாரதியின் கவிதையையும் பற்றி அழகாக எடுத்துரைத்தார்.

புனாவிலுள்ள கலா மந்திரத்தின் ஆதரவிலும் பாரதி விழா சிறப்பாக நடந்தேறியது. மேஜர் உமாபதீச்வரன் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

புதுமை மொழியிலே புரட்சிக் கவிதை இயற்றிப் புத்துலகு படைத்த பாரதியின் நினைவைப் பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தார் போற்றிப் பணிந்தனர். தென்னிந்திய பஜனை சமாஜத்தில் நிகழ்ந்த இவ்விழாவுக்கு ஸ்ரீ வி. சுப்பராயர் அவர்கள் தலைமை தாங்கினார். பாரதியின் பெருமையைப் பல அறிஞர்கள் விரித்துரைத்தார்கள். "பாரதியில் நவரசங்கள்" என்னும் இசை நிகழ்ச்சியை நடத்திய குமாரி ஆர். சரோஜாவையும், குமாரி ஏ. வி. விஜயலக்ஷ்மியையும் அனைவரும் பாராட்டினர்.

ஹௌராவிலுள்ள திருவள்ளுவர் கலை மன்றம் பாரதியார் திருநாளைக் கோலாகலமாகக் கொண்டாடியது. திரு க. செந்தியப்பன் அவர்கள் தலைமையில் நிகழ்ந்த இவ் விழாவில், திரு ப. ந. தியாகராஜன் பாரதியாரின் பெருமையைச் சுவைபட எடுத்தியம்பினார். இவ்விழாவில் ஆங்கரை திரு ஜயராமனின் வில்லுப் பாட்டுக் கச்சேரியும் நடைபெற்றது.

காரைக்கால் திருவள்ளுவர் மாணவர் மன்றத்தார் பிரஞ்சிந்தியா விடுதலைபெற்ற இந்த ஆண்டில் பாரதி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். எந்தப் பிரஞ்சிந்தியாவில் பாரதியார் அஞ்ஞாதவாசம் புரிந்தாரோ, அதே பிரஞ்சிந்தியாவில் பாரதி விழா கொண்டாடினார்கள். விழாவுக்குக் கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு ஆர். மீனாட்சிசுந்தரம் தலைமை வகித்தார். திரு ப. ஜீவானந்தம் எம். எல். ஏ., அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு எஸ். வைத்தியலிங்கம், சென்னை தமிழ்ப் பேராசிரியர் திரு கு. ராஜவேலு முதலியவர்கள் விழாவில் சொற்பொழிவாற்றிச் சிறப்பித்தனர்.

தேமதுரத் தமிழோசை வட இந்தியாவிலும், புதிய சுதந்திர பிரஞ்சிந்தியாவிலும் பரப்பி வரும் இச் சங்கங்களின் சேவையைப் பாராட்டுகிறோம்.

மும்மூர்த்திகள் ஞாபகச் சின்னம்

சங்கீத மும்மூர்த்திகள் பிறந்த திருவாரூரில் அவர்களுக்கு ஞாபகச் சின்னம் ஏற்படுத்த வேண்டும் என்னும் யோசனைக்குப் பிரமாதமாக ஆதரவு கிடைத்திருப்பதை நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

கவியரசர் பாரதியார் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன் பாடினார் :

"..................................எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே"

என்று பெருமிதத்துடன் கூறினார்.

தமிழ் நாட்டுக் கர்நாடக சங்கீதத்துக்கு உயிரும் உணர்ச்சியும் ஊட்டிய சங்கீத மும்மூர்த்திகளைத் தமிழ் மக்கள் மறக்கலாமா? மறப்பார்களா?

ஒரு நாளும் மறக்க மாட்டார்கள் என்பது மும்மூர்த்தி ஞாபகச் சின்ன விஷயமாகக் கிடைத்து வரும் ஆதரவுகளில் இருந்து தெரிய வருகிறது.

இவற்றுள் இந்த வாரத்தில் விசேஷமாகக் குறிப்பிடக் கூடியது, சென்னை கவர்னர் கனம் ஸ்ரீபிரகாசா அவர்களிடமிருந்தும், சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஸ்ரீ டி. எல். வெங்கடராமய்யர் அவர்களிடமிருந்தும் கிடைத்துள்ள ஆசிச் செய்திகளாகும்.

சங்கீத மும்மூர்த்திகளுக்கான ஞாபகச் சின்ன முயற்சிக்கு அவர்கள் அளித்துள்ள ஆதரவு நிறைந்த ஆசிச் செய்திகளை மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம்.

* * *

கர்நாடக சங்கீதத்தின் மும்மூர்த்திகளுக்கு நினைவு மண்டபம் எழுப்ப ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருப்பதாகவும் இம் மூவரும் பிறந்த ஊராகிய திருவாரூரிலே அவர்களுடைய உயர்ந்த சங்கீத சம்பிரதாயத்தைப் பேணிப் போற்றி வளர்க்கத் திட்ட மிட்டிருப்பதாகவும் அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

எனக்குச் சங்கீதம் அவ்வளவாகத் தெரியும் என்று சொல்லிக் கொள்ள விட்டாலும் இந்த மகத்தான ராஜ்யத்துடன் சென்ற மூன்று வருஷங்களுக்கு மேலாக நெருங்கிய தொடர்பு கொண்டதினால், பரிபூரண அழகுடன் சிதையாத உருவில் ஆச்சரியமான முறையில் காப்பாற்றப்பட்டு வந்துள்ள தென்னாட்டுச் சங்கீதத்தையும் நாட்டியத்தையும் அனுபவிக்கும் அளவுக்கு என் இதயத்தில் காதல் எழுப்பியிருக்கிறது.

சுதந்திரம் வந்த பிறகு நமது கலைகளுக்கும் மறுமலர்ச்சி ஏற்பட்டது. நமது தேசத்தின் பல துறைகளில், அதன் கீர்த்தியில், சாதனைகளில் பெரும் பங்கு கொண்டு அரும் காரியங்கள் புரிந்து சென்ற பெரியார்களை நினைவு கூர்ந்து மரியாதை செலுத்துவது சரியான தோர் காரியமே. மகான்களாகிய தியாகராஜரும், முத்துசாமி தீக்ஷிதரும், சியாம சாஸ்திரிகளும் ஒரே காலத்தவராக இருந்ததோடு மட்டுமின்றி, ஒரே ஊரிலேயே பிறந்தார்கள் என்பது ஒரு தனி விசேஷம். அந்த ஊரும், அவர்கள் வாழ்ந்த காலமும் தனிப் பிரகாசம் பெற்றுத் திகழ்கிறது. இது ஏதோ சாதாரணப் பொருத்தம் என்று எண்ணி விடுவதற்கில்லை.

எனவே திருவாரூரோடு இயைந்த முறையில் அவர்களுக்கு ஒரு நினைவுச் சின்னம் காண்பதைவிட, சங்கீத மும்மூர்த்திகளுக்கு நாம் செய்யும் பக்தி அஞ்சலி வேறொன்றும் இருக்க முடியாது. இந்தக் கமிட்டியாரின் பாராட்டத்தக்க இம் முயற்சி வெற்றியடைய வேண்டும் என்று விரும்பி ஆசி கூறுகிறேன். சங்கீத மும்மூர்த்திகளுக்கு ஞாபகார்த்தம் எழுப்பிக் கௌரவிக்கும் போதே, கடந்த காலத்தில் என்னவெல்லாம் சிறப்புகள் உண்டோ அவற்றைப் போற்றிப் பாதுகாப்போம் என்று உறுதி செய்து கொள்வோம். எதற்கு?—அதைவிட மகத்தான எதிர் காலத்தைச் சிருஷ்டிப்பதற்குத்தான்!

ராஜபவனம், சென்னை
14—9—55

ஸ்ரீபிரகாசா

* * *

திருவாரூரில் சங்கீத மும்மூர்த்திகளுக்கு நினைவு மண்டபம் கட்டுவது சம்பந்தமான வேண்டுகோளை நான் அளவுகடந்த மகிழ்ச்சியுடன் வாசித்தேன். தென்னாடு சமயம், இலக்கியம், கலை இம் மூன்று துறைகளிலும் உண்மையாகவே பெருமைப் படக்கூடிய அளவுக்குப் பரம்பரைச் செல்வத்தை அடைந்திருக்கிறது. சங்கீதத் துறையில் நாம் பிறரால் எட்ட முடியாத உயர் நிலையை அடைந்திருக்கிறோம். இதற்குப் பெரிதும் காரணம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நமது பக்த மணிகளாகிய நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாடிய தேவார திவ்விய பிரபந்தங்களும், சமீப காலத்தில் முத்துசாமி தீக்ஷிதர், தியாகராஜர், சியாம சாஸ்திரிகள் ஆகியோர் பாடிய கீர்த்தனங்களுமே யாகும். பின்னால் குறிப்பிடப்பட்ட மூன்று மகான்கள் பிறந்த ஸ்தலம் திருவாரூர். அந்தத் திருவாரூர் சங்கீத அன்பர்கள் அனைவருக்கும் புனித க்ஷேத்திரம் ஆகிவிட்டது. அப் புனித க்ஷேத்திரத்தில் இம் மூவருக்கும் ஞாபகார்த்தம் எழுப்புவது மிகப் பொருத்தமே. சங்கீத அன்பர்கள் யாவரும் இந்த மும்மூர்த்திகளின் நினைவு நிதிக்குத் தாராளமாகக் கொடை வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதில் எனக்கு யாதொருவிதமான சந்தேகமுமில்லை. இந்த நன் முயற்சி வெற்றியடைய அருள் புரியுமாறு இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

புது தில்லி
12—9—55

டி. எல். வெங்கடராமய்யர்



87. "நாளை வா!"

அரமனைக்குள்ளிருந்த ராவணன் வானரர்களுடைய கோஷங்களையும் ஆரவாரத்தையும் கேட்டு ஆச்சரியப் பட்டான். பக்கத்திலிருந்த அரக்கர்களுக்குச் சொன்னான்: "இதுவென்ன வியப்பாக இருக்கிறது! என்ன காரணம் இந்த வானரர்கள் இப்படிச் சந்தோஷப் படுவதற்கு? ராமலக்ஷ்மணர்கள் காயப்பட்டு, பிரக்ஞையற்றுக் கிடக்க இவர்கள் கவலைப்பட்டுக் கலவரப்பட வேண்டிய சமயத்தில் இப்படி உற்சாகமாகக் கூச்சலிடுவதின் காரணம் என்ன? ஏதோ விசேஷம் நடந்திருக்கிறது என்பது நிச்சயம். பார்த்து வாருங்கள்!" என்றான்.

சில ராக்ஷசர்கள் மதிலின் மேல் ஏறிப் பார்த்து ராவணனிடம் திரும்பி வந்து, பயந்து பயந்து சொன்னார்கள்: "அரசனே! சுக்ரீவன் தலைமையில் வானர சேனை மிக உற்சாகமாகக் கோட்டையைத் தாக்குகிறார்கள். ராம லக்ஷ்மணர்கள் உயிருடன் இருக்கிறார்கள். கட்டப்பட்ட யானைகள் கயிற்றை அறுத்துக் கொண்டு வெளியேறிய மாதிரி ராம லக்ஷ்மணர்கள் தங்களைக் கட்டிய நாகபாசங்களையெல்லாம் அறுத்து விட்டுச் சேனையுடன் வந்திருக்கிறார்கள். இளஞ் சிங்கங்களைப் போல் திரிகிறார்கள். இந்திரஜித்து அவர்களைக் கட்டிய பாசங்கள் வீணாயின" என்றார்கள்.

ராவணனுடைய முகம் வாடிற்று. கவலை கொண்டான். "இதுவரையில் எவனும் இந்த பாணங்களினின்று தப்பினது கிடையாது. நீங்கள் சொல்லுவது வியப்பாக இருக்கிறது. இந்த பாணங்களே வீணாயிற்று என்றால் ஆபத்துத்தான்" என்றான்.

பிறகு ரோஷம் மேலிட்டு "ஏய், தூம்ராக்ஷனே! நீ இருக்க நான் ஏன் கவலைப்பட வேண்டும்? வேண்டிய ஆட்களைக் கூட்டிக் கொண்டு உடனே போய் இவர்களை வதம் செய்துவிட்டுத் திரும்புவாய்" என்றான்.

தூம்ராக்ஷன் மகிழ்ச்சியடைந்தான். தனக்கு இந்தக் கௌரவம் அரசன் தந்தானே என்று பெருமைப் பட்டுச் சேனையைக் கூட்டிக் கொண்டு புறப்பட்டான். கோட்டைக்கு வெளியே

சென்று வானரர்களுடன் யுத்தம் செய்தான்.

ஹனுமான் தலைமையில் மேற்கு வாயிலைத் தாக்கிக் கொண்டிருந்த வானரர்களை எதிர்த்தான். அவ்விடம் நடந்த பெரும் யுத்தத்தில் இரு பக்கத்திலும் ஏராளமான உயிர்ச் சேதம் நேர்ந்தது. முடிவில் தூம் ராக்ஷன் மாருதியால் கொல்லப்பட்டான். அரக்கர்களில் சிதறியோடிக் கோட்டைக்குள் புகுந்து தப்பின வர்கள் தவிர பெருந் தொகையினர் மாண்டார்கள்.

இந்தத் தோல்வியை அறிந்து இராவணனுக்கு அடங்காக் கோபம்மேலிட்டது. வாய் பதற வஜ்ரதம்ஷ்ட்ரனை நோக்கி, "வீர சிகாமணியே, உடனே போய், இனி தாமதம் செய்வதற்கில்லை, இந்தத் துஷ்டர்களை நிர்மூலம் செய்து விட்டு மறுவேலை பார்ப்பாய்!" என்று உத்தர விட்டான்.

வஜ்ரதம்ஷ்ட்ரனும் அரசனை பிரதக்ஷிணம்செய்து நமஸ்கரித்து, பெருஞ் சேனையைக் கூட்டிக் கொண்டு தெற்குக் கோட்டை வாசல் வழியாகப் புறப்பட்டான். அங்கே அங்கதனை எதிர்த்தான்.

வஜ்ரதம்ஷ்ட்ரனுடைய தலைமையில் ராக்ஷசர்கள் கோரமான யுத்தம் செய்தார்கள். எண்ணற்ற வானரர்கள் மாண்டனர். ஆயினும் வானர சேனை பின் வாங்கவில்லை. பாறைகளையும் மரங்களையும் பிடுங்கி யெடுத்து வீசி எண்ணற்ற அரக்கர்களைக் கொன்றார்கள். இரு தரப்பிலும் தீவிர முறையில் யுத்தம் நடந்தது. முடிவில் அங்கதனுக்கும் அரக்கத் தலைவனுக்கும் கோர யுத்தம் நெடு நேரம் நடந்தது. வஜ்ரதம்ஷ்ட்ரன் கொல்லப்பட்டான். அரக்கர் சேனை சிதறி ஓடிற்று. அங்கதனைச் சூழ்ந்துகொண்டு வானரர்கள் வீர கர்ஜனை செய்தார்கள்.

* * *

"யுத்தத்தில் நிபுணனாகிய அகம்பனன் பயங்கர ராக்ஷசர்களைப் பொறுக்கி அழைத்துச் சென்று, இந்த வானரப் படையையும் ராமனையும் சுக்ரீவனையும் வதம் செய்து வரச் சொல்வாய். அகம்பனனுடைய வீரமும் சாமர்த்தியமும் வீண் போகாது" என்றான் ராவணன்.

பிரஹஸ்தன் ராவணனுடைய உத்தரவுப்படி அகம்பனன் தலைமையில் சேனையை அனுப்பினான். அகம்பனன் தன் பெயருக்குத் தகுந்தபடியே அசைக்க முடியாத யுத்த சாமர்த்தியம் பெற்றவன். ஆயுதங்கள் எடுத்துப் பெரும் படையுடன் சென்றான். கெட்ட நிமித்தங்கள் தோன்றின. அதை அவனாவது அவன் படையாவது கொஞ்சம்கூட லட்சியம் செய்யவில்லை. அரக்கர்கள் செய்த சிம்மநாதம் கடலைக் கலக்கிற்று.

பெரும் போர் நடந்தது. ரத்த வெள்ளம் ஓடிற்று. ஆகாயம் அளாவச் செந்தூள் கிளம்பிற்று. இருள் மூடிக் கொண்டது. இரு கக்ஷியிலும் கணக்கற்றவர்கள் மாண்டார்கள். வானர வீரர்களாகிய குமுதன், நளன், மயிந்தன், துவிவிதன் இவர்கள் அகம்பனனை எதிர்த்தார்கள். அகம்பனனும் மகா வீரத்துடன் அவர்களை எதிர்த்தான்.

வானர வீரர்கள் பலமாகத் தாக்கப்பட்டு ஓட ஆரம்பித்தார்கள். அப்போது ஹனுமான் வந்து சேர்ந்தான்.



இலங்கை மெத கொடைத் தோட்டம் திரு சி. ரு. துரைசாமி பிள்ளை அவர்கள் குமாரன் செல்வன் **சப்பாணிக்கும்,** கலஹா திரு பெ. மாரியா பிள்ளை அவர்கள் குமாரத்தி செல்வி **பழனியம்மாளுக்கும்** 7—7—55-ல் மணமகன் இல்லத்தில் திருமணம் சிறப்பாக நடந்தேறியது.

வாழ்க சப்பாணி — பழனியம்மாள்

அகம்பனன் சரமாரி பொழிந்தான். ஹனுமான் அதை லட்சியம் செய்யாமல் ஒரு பெரும் பாறையை எடுத்துக் கரகரவென்று சுழற்றி, அகம்பனன் மேல் விட்டெறிந்தான். அரக்கன் தன் பாணங்களால் அதைத் தடுத்துப் பொடி செய்து விட்டான். ஹனுமான் தன் தேகத்தை வளர்த்துக் கொண்டு சூரியனைப்போல் கண் கூசும்படியாகப் பிரகாசித்தான். ஒரு பெரிய மரத்தைப் பிடுங்கி, வீசி எறிந்து அரக்கனைக் கொன்று விட்டான். ராக்ஷச சேனை பூகம்பத்தில் மரங்கள் அசைவதுபோல் நடுங்கி ஓடினார்கள். ஓடும்போது பின்னால் பார்த்துக் கொண்டே ஓடினார்கள். அரக்கர்களில் மாண்டவர்கள் போக எஞ்சியவர்கள் கோட்டைக்குள் புகுந்து கொண்டு தப்பினார்கள். ஹனுமானை வானரர்கள் எல்லாரும் கொண்டாடி ஆரவாரித்தார்கள்.

• • •

அகம்பனன் மாண்டதை யறிந்து ராவணன் முகம் சற்று வாடிற்று. கோபாவேசமாக யோசனை பண்ணினான். மறுபடியும் நகரத்தின் காப்பு நிலையைச் சுற்றிப் பார்த்து விட்டுத் திருப்தி யடைந்து திரும்பினான். சேனாதிபதி பிரஹஸ்தனோடு கலந்து பேசினான் :


“இந்த வானர முற்றுகையை ஒழித்துக் கட்ட வேண்டும். சேனையுடன் வெளிச் சென்று பலமான யுத்தம் செய்து இவர்களுடைய தலைவர்களை வதம் செய்தால்தான் இது முடியும். நான், கும்பகர்ணன், நீ, இந்திரஜித்து நிகும்பன் இந்த ஐவர்களுள் ஒருவர் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு சேனையுடன் கோட்டையை விட்டுப் புறம் சென்று யுத்தம் செய்ய வேண்டும். இந்த வானரர்களைக் கண்டு நாம் இவ்வளவு பயப்படுவதா? நம்முடைய ராக்ஷசர்களின் கர்ஜனையைக் கேட்டாலே இந்தப் பிராணிகள் சிதறியோடும். யுத்த முறையின் அறிவும் பயிற்சியு மில்லாத இவர்களை ஓட்டுவது ஒரு கஷ்டமல்ல.”

பிரஹஸ்தன் இதைக் கேட்டு வினயமாகப் பேசலானான் :

“நாம் முன்பு எதிர்பார்த்தபடியே எல்லாம் நேர்ந்திருக்கின்றது. சீதையைத் திருப்பித் தந்து விடுவதே சரியான முறை, க்ஷேமத்துக்கு வழி, என்று நாம் முந்தியே சொன்னோம். நான் உமக்குக் கடன்பட்டிருக்கிறேன். என் பிராணன், பொருள், குடும்பம் அனைத்தையும் யுத்தத்தில் ஆஹுதியாகப்பெய்து எரித்து விடுவதற்குச் சம்மதம், நான் சேனையுடன் செல்கிறேன்” என்றான்.

பெருஞ் சேனைக்கு உத்தர விட்டான். எல்லாம் தயாராக இருந்தது. நகரத்தில் ஹோமம், சாந்தி பிராம்மண பூஜை எல்லாம் நடத்தப் பட்டன. காற்றெல்லாம் பரிமளம் நிரம்பிற்று. பிறகு பேரிகை கோஷத்துடன் பிரஹஸ்தன் புறப்பட்டான்.

அவலக்ஷண சகுனங்கள் காணப் பட்டன. அவற்றைக் கவனியாமல் சென்றான். பிரஹஸ்தன் தலைமையில் பெருஞ் சேனை கோட்டையை விட்டுக் கிழக்கு வாயிலின் வழி வெளி வந்ததைக் கண்டதும் வானரர்கள் கர்



ஜித்து யுத்தத்துக்குச் சன்னத்தமானார்கள்.

நெருப்பில் பூச்சிகள் ஆவேசமாக விழுவது போல் பிரஹஸ்தன் தலைமையில் ராக்ஷசர்கள் வானர சேனையின் மேல் பாய்ந்தார்கள்.

• • •

"அங்கே வருகிறானே பெருங் கூட்டத்துடன் அந்த ராக்ஷசன் யார்?" என்றான் ராமன்.

"அவன்தான் பிரஹஸ்தன். ராவணனுடைய சேனாபதி. லங்கா சேனைகளில் மூன்றில் ஒரு பாகம் இவன் ஆதிக்கம்" என்றான் விபீஷணன்.

பிறகு மலையும் மரமுமே ஆயுதமாகக் கொண்ட வானரர்களுக்கும், கத்தி, சூலம், ஈட்டி, கோடாலி, தடிகள் முதலிய ஆயுதங்களை எடுத்து வந்த ராக்ஷசப் பெருஞ் சேனைக்கும் கோர யுத்தம் நடந்தது. கல்மாரியும் சரமாரியும் பொழிந்தும் கை கலந்தும் யுத்தம் செய்தார்கள். எண்ணற்ற வானரர்களும் அரக்கர்களும் மாண்டார்கள்.


பிரஹஸ்தனுடைய வீரர்களான நராந்தகன், மகாநாதன், கும்பஹனு முதலியவர்களை துவிவிதன், துர்முகன், ஜாம்பவான் ஆகிய வீரர்கள் எதிர்த்துக் கொன்றார்கள். அதன் மேல் பிரஹஸ்தனுக்கும் நீலனுக்கும் கடும் போர் வெகு நேரம் நடந்தது.

முடிவில் பிரஹஸ்தன் ஒரு இரும்பு உலக்கையை எடுத்துக் கொண்டு நீலன் மேல் பாய்ந்தான். உடனே நீலன் ஒரு பெரிய பாறையைப் பெயர்த்தெடுத்து பிரஹஸ்தன் தலையை நொறுக்கி விட்டான். ராக்ஷச வீரர்கள் மூலைக்கு மூலை ஓடினார்கள். இவ்வாறு பெரும் வெற்றியடைந்த நீலன் ராம லக்ஷ்மணர்கள் இருந்த இடம் சென்று நமஸ்கரித்து நடந்த போரைப் பற்றிச் சொன்னான். ராம லக்ஷ்மணர்களும் நீலனுடைய சௌரியத்தை மிகவும் பாராட்டி உபசரித்தார்கள்.

மகாபாரதம், ராமாயணம் இரண்டிலுமே யுத்த காண்டக் கதை, கவர்ச்சியின்றி நீடித்து ஒரே வித சித்திரம் திரும்பத் திரும்ப வரும். அதை நான் சுருக்கமாகவே சொல்லி முடிக்கிறேன். ஆயினும் சொல்லில் சுருக்கமாக இருப்பதனால் யுத்தம் சுருக்கமாக முடிந்து விட்டதாக எண்ணக் கூடாது. ஆயுதங்களும் காயங்களும் ரத்தப் பிரவாகமும் உயிர்ச் சேதமும் ரகளையும் பிரமாண்டமாகத்தான் இருந்தன.

• • •

அக்கினி புத்திரனான நீலன் பிரஹஸ்தனைக் கொன்று விட்டான் என்ற செய்தியை யுத்தகளத்திலிருந்து சிதறி ஓடினவர்கள் அரக்க அரசனுக்குத் தெரிவித்தார்கள். அவனுடைய கோபம் பொங்கிக் கிளம்பிற்று. "இந்திரனையும் அவன் தேவப் படையையும் ஜெயிக்க வல்ல என் சேனாபதி பிரஹஸ்தன் இந்த வானரர்களால் கொல்லப்பட்டான். இனி அலட்சியம் செய்வதற்கில்லை. இந்த ராம லக்ஷ்மணர்களையும் அவர்களுடைய குரங்குப் படையையும் நிர்மூலம் செய்து விடவேண்டும்" என்று, தானே தேர் ஏறி பூதகணங்களால் சூழப்பட்ட ருத்திரனைப் போல் சென்றான். தகதக வென்று ஜொலித்த தேரில் நகரத்தை விட்டு வெளியேறினதும் அலைகடலைப் போல் சப்தித்துக் கொண்டு நின்ற வானரச் சேனையைக் கண்டான்.



ராவணன் தலைமையில் அரக்கர் படை வந்ததைக் கண்டதும் வான

ர்கள் கையில் மரங்களும் கற்பாறைகளுமாக ஆயத்தமாக நின்றார்கள். வந்த அரக்க வீரர்களைப் பற்றி விபீஷணன் ராமனுக்கு எடுத்துச் சொன்னான். 'அதோ அந்தத் தேரின்மேல் பால சூரியனைப் போல் பிரகாசிக்கிறானே அவனே இந்திரஜித்து' என்று. இவ்வாறு பலரைச் சொல்லி, 'அதோ அந்தப் பெருந் தேரில் சூரிய தேஜஸுடன் நிற்கும் தசமுகன் அவனே ராவணன்' என்றான். ராமனும் ராவணனுடைய வடிவத்தையும் பிரகாசத்தையும் கண்டு வியந்தான். "மகா வீரன், மகா பலவான் என்பதில் சந்தேகமில்லை. பாபியான இவனை ஒழிப்பேன்" என்றான்.

ராவணன் பல வானரர்களைத் தாக்கி, அவர்களை வீழ்த்தினான். நீலன் ராவணனைப் பலவாறு எதிர்த்து இம்சை செய்தான். ராவணனும் முடிவில் அவனை அக்கினி அஸ்திரம் செலுத்தி நினைவு இழந்து விழச் செய்தான். ஹனுமான் ராவணனைப் பலமாக எதிர்த்தான். பெரிய முஷ்டி யுத்தம் நடந்தது. ராவணன் அசையவில்லை. எதிர்த்த வானர வீரர்கள் ராவணனுடைய பாணங்களால் அடிபட்டு பிரக்ஞை இழந்து விழுந்தார்கள்.

பிறகு லக்ஷ்மணனுக்கும் ராவணனுக்கும் போர் நடந்தது. லக்ஷ்மணனும் நினைவு அற்று விழுந்தான். இதைக் கண்ட ஹனுமான் இடையில் புகுந்து லக்ஷ்மணனை எடுத்து ராமனிடம் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டான். பிறகு ராமனே ஹனுமானுடைய தோளின் மேல் ஏறி ராவணனுடன் யுத்தம் செய்தான். ராக்ஷசேந்திரன் பலமாகத் தாக்கப்பட்டான். கிரீடம் உடைந்து, தேரிழந்து, ஆயுதம் இழந்து, ஒன்றும் செய்ய முடியாத நிலையில் நின்றான்.

"இன்று தப்பிப் போ. நன்றாகவே யுத்தம் செய்தாய். திரும்பிப் போய் இளைப்பாறி, நாளை ஆயுதம் எடுத்துக் கொண்டு மறுபடி வா" என்று ராமசந்திரன் சொன்னான். ராவணனும் அவமானப்பட்டு நகரத்துக்குள் திரும்பிச் சென்றான்.



வட இந்திய யாத்திரை 9

நீர்ப்பாசன

"உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்"

என்று கவியரசர் பாரதியார் பாடி உழவுத் தொழிலின் உயர்வையும், இதர தொழில்களின் எழிலையும் தெளிவாக விளக்கி மக்களுக்குக் கூறி யிருக்கிறார்.

ஒரு புல் முளைத்த இடத்தில் இரண்டு புல்கள் முளைக்கும்படி செய்ய வேண்டும். அவ்வாறு செய்பவனே மக்களின் உண்மையான ஊழியன், தேச பக்தியுள்ளவன் என்று ருஷ்ய தேசத்தைச் சேர்ந்த ஞானி ஒருவர் அழுத்தம் திருத்தமாகச் சொல்லி யிருக்கிறார்.

மன்னாதி மன்னர்களானாலும், சகல கலைகளிலும் தேர்ந்த பண்டிதன் ஆனாலும், மிகப் பெரிய வீரனானாலும் மற்ற எவரானாலும் அவர்களுக்கு உயிர் கொடுப்பது உழவுதான்.

அதனால்தான் அதன் பெருமையை விளக்கிக் கவிவாணர்களும், கர்ம யோகிகளும், விஞ்ஞானிகளும், ஏன்! முற்றும் துறந்த ஞானிகளும் கூடப் புகழ்ந்து பாடியிருக்கிறார்கள்.

உணவுப் பயிரை வளர்ப்பவனே உயிரை வளர்ப்பவன் என்று வள்ளுவர் கூறியிருக்கிறார்.

ஒரு நாட்டுக்கு வேண்டிய உயிர் நாடியான தொழிலை இதை விடத் தெளிவாக எடுத்துக் கூறிவிட முடியுமா!

பண்டித ஜவாஹர்லால் நேரு சமீபத்தில் ருஷ்யாவுக்குச் சென்றிருந்தபோது ருஷ்ய சர்க்கார் என்ன என்னவோ விந்தைகளை யெல்லாம் காண்பித்தார்கள். கடைசியில் கண்ணுக்கு எட்டிய தூரம் பசுமை பசுமை பசுமை என்று தோன்றும் கோதுமைப் பயிர் நிலத்தையும் கொண்டு காண்பித்தார்கள். கோதுமைப் பயிர் வளர்வதற்கு அவர்கள் செய்திருக்கும் சாதனைகளையும் எடுத்துக் கூறினார்கள்.

உழவை, அதாவது விவசாயத்தை அலட்சியம்செய்யாத நாடுதான் உலகில் உன்னதநிலைமையில் இருக்க முடியும், சுதந்திரமாக வாழ முடியும் என்பதை அவர்கள் சொல்லாமல் சொல்லி விளக்கி யிருக்கிறார்கள்.

சுதந்திரம் பெற்று விட்ட நாம் சுபிட்சத்தைப் பெற வில்லையானால் சுதந்திரத்தின் பெருமையை அனுபவிக்க முடியுமா!

இந்திய நாட்டில் இப்பொழுது உள்ளதை விட வ்வசாயம் அதிகமாகப் பெருக வேண்டும். விவசாயிகளின் நிலைமையும் மற்றத் தொழிலாளர்களின் நிலைமையும் உயர வேண்டும்.


தொழிலாளர்கள் கஷ்டங்கள் தீர்ந்தால்தான் உழவும் தொழிலும் உயர்வடையும். உழவும் தொழிலும் உயர்வடைந்தால்தான் தேசம் சுபிட்சமடையும்.

இவை போன்ற முக்கிய சீர்திருத்தங்களுக்கெல்லாம் அவசியமாக வேண்டியது என்ன! நீர்ப்பாசன வசதி அல்லவா!

அந்த நீர்ப்பாசன வசதியை எப்படிப் பயன் படுத்துவது என்பதை ஆராய்வதற்காகத்தான் கங்கைக் கால்வாய்க் கரையோரமாகப் பெரிய "நீர்ப்பாசன ஆராய்ச்சிக் கூடம்" அமைத்துச் சேவை செய்து வருகிறார்கள்.

நம் நாட்டில் உள்ள மண் வளம், நீர் வளம் இரண்டையும் எப்படிப் பெருக்கிக் கொள்ள வேண்டும், அதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்ற ஆராய்ச்சிகளைத்தான் அங்கு செய்து வருகிறார்கள். பாரத நாடு மிகப் பெரிய நாடு. உலகத்து நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தியாவின் நிலப் பரப்பு மிகப் பெரியது. இவ்வளவு பெரிய நாட்டுக்கு நீர்ப்பாசன ஆராய்ச்சிக் கூடம் எவ்வளவோ வேண்டும். இந்தியாவில் உள்ள நீர்ப்பாசன ஆராய்ச்சிக் கூடங்களில் புனாவில் உள்ள மத்திய நீர்ப்பாசன ஆராய்ச்சிக்கூடம்தான் முக்கியமானது. இந்த ஒரு ஆராய்ச்சிக் கூடம் மட்டும் போதவே போதாது. இதையும் இன்னும் பெரிதாக்கி இன்னும் பல ஆராய்ச்சிகளை நடத்த வேண்டும் என்று நாட்டு நலத்தில் அக்கறை உள்ள பெரியோர்கள் கூறிவருகிறார்கள்.





ஆராய்ச்சிக் கூடம்

இந்த மத்திய ஆராய்ச்சிக் கூடத்தைத் தவிர ராஜ்யங்களில் ஆங்காங்கு பல ஆராய்ச்சிக் கூடங்கள் இருக்கின்றன. நமது சென்னை ராஜ்யத்தில் பூண்டியில் ஒரு நீர்ப்பாசன ஆராய்ச்சிக் கூடம் இருக்கிறது. இது மிகவும் சிறியது. சென்னை ராஜ்யம் போன்ற ஒரு பெரிய ராஜ்யத்துக்கு இது போதவே போதாது. இது போல உத்தரப் பிரதேசத்தில் உள்ள நீர்ப்பாசன ஆராய்ச்சிக் கூடத்துக்குத் தான் நாம் இப்பொழுது போகப் போகிறோம். ராஜ்யங்களில் உள்ள நீர்ப்பாசன ஆராய்ச்சிக் கூடங்களுக்குள் மிகப் பெரியது ரூர்க்கியில் உள்ள நீர்ப்பாசன ஆராய்ச்சிக் கூடம்.

1935-ம் ஆண்டு லக்னோவில் இந்த ஆராய்ச்சிக்கூடம் ஆரம்பிக்கப் பட்டது. அங்கிருந்து ஆராய்ச்சிகள் செய்வதற்குப் பல அசௌகரியங்கள் ஏற்பட்டன. ஆராய்ச்சிக் கூடத்தை மேலே விஸ்தரிக்க முடியாமல் இருந்தது. ஆகவே 1946-ம் ஆண்டு மேற்படி ஆராய்ச்சிக் கூடத்தை ரூர்க்கிக்கு மாற்றினார்கள். கழகத்தின் பிரதான காரியாலயமும், உத்தரப் பிரதேசத்தில் உள்ள அணைகளின் "மாதிரி"களும் அந்தக் கட்டடத்தில் இருக்கின்றன. நீர்ப்பாசன ஆராய்ச்சிக்கூடம் கங்கைக் கால்வாயின் வலது கரையில் பகத்ராபாத் என்ற இடத்தில் இருக்கிறது. பகத்ராபாத் ரூர்க்கியிலிருந்து பதின்மூன்று மைல் தூரம்.

இன்ஜினீயர், "இதோ பார்த்தீர்களா!" என்று நிருபர்களைப் பார்த்துக் கேட்டார்.

கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் ஏதேதோ சிறு சிறு கால்வாய்களும், அந்தக் கால்வாயில் மதகுகளும், அணைகளும், இன்னும் என்னென்னவோ 'மாதிரி'களில் சின்னஞ்சிறு ஸிமெண்ட் கட்டடைகளும் கட்டப் பட்டிருந்த ஒரு திறந்த வெளியைப் பார்த்தோம்.

"இதுதான் நீர்ப்பாசன ஆராய்ச்சிக் கூடம்" என்றார் இன்ஜினீயர்.

"சரி, ரொம்ப சந்தோஷம்" என்று சொல்லித் திரும்பினார் ஒரு நிருபர்.

"அதற்குள் திரும்பிவிட முடியுமா! யமுனை நதி, கங்கை நதி, சாரதா நதி, அதில் உள்ள கால்வாய், அணைக்கட்டுகள், மின்சார நிலயங்கள் எல்லாவற்றையும் பார்க்க வேண்டாமா!" என்றார்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. "நாம்தான் கீழ்ப்பாக்கத்திலிருந்து வருகிறோம். இவர் பிரசித்தி பெற்ற பிரேனியைச் சேர்ந்தவரோ!" என்று அதிசயப் பட்டேன்.



பகீரதன்

சோதனை அணைகள்

பிறகு இன்ஜினீயர் விஷயத்தை விளக்கிச் சொன்னார். 1946ம் ஆண்டில்தான் இந்த ஆராய்ச்சிக் கூடம் ஆரம்பமாகி யிருக்கிறது. ஆனாலும் இந்தச் சிலவருஷங்களுக்குள்ளாகவே அபாரமான ஆராய்ச்சிகள் எல்லாம் செய்து வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது. முக்கியமான பெரிய அணைக்கட்டுகள், அருவி மின்சார நிலையங்கள், குழாய்க் கிணறுகள், புதிய கால்வாய்கள் வெட்டுவது எல்லாம் இந்த ஆராய்ச்சி நிலையத்தில்தான் செய்கிறார்களாம்.

உதாரணமாக, ஸட்லஜ் நதியில் பக்ரா நங்கல் அணை கட்டுகிறார்கள். இதைக் கட்டி முடிக்கச் சுமார் பல நூறு கோடி ரூபாய் செலவாகும் என்ற விவரங்களை நேயர்கள் படித்திருப்பார்கள். செலவுத் திட்டத்திலிருந்து அது எவ்வளவு பெரிய மகத்தான அணை என்பதை ஒருவாறு ஊகித்துத் தெரிந்து கொள்ளலாம். சட்லஜ் நதி இந்தியாவில் உள்ள ஜீவ நதிகளில் ஒன்று. அதில் வருஷம் முழுவதும் பிரவாகம் இருந்து கொண்டே இருக்கும். அணைக்கட்டு கட்ட வேண்டுமானால் நதியின் மணல் பரப்புக்குக் கீழே பல நூறு அடி ஆழம்தோண்டி அஸ்திவாரம் போட வேண்டும். நதியை இரண்டாகப் பிரித்துத் தண்ணீரை விட்டு மத்தியில் அடைத்து விடவேண்டும். மணலில் அஸ்திவாரம் போடுவதற்கோ பெரிய பெரிய பிரம்மாண்டமான இரும்புக் குழாய்களைப் பூமிக்குள் புதைத்து மண்ணின் தரத்தை ஆராய வேண்டும். அப்பொழுது பூமியி லிருந்து பொங்கி வரும் தண்ணீரை இறைக்கவேண்டும். அப்படித் தண்ணீரை இறைப்பதற்குப் பகீரதப் பிரயத்தனம் செய்தாக வேண்டும். இந்த நிலையில் அணைகட்ட வேண்டும். இது போன்ற பெரிய அணைகளைக் கட்டுவதற்கு முன், மாதிரி அணை கட்டிச் சோதனை செய்து பார்க்கும் காரியங்கள்தான் இங்கு நடந்து வருகின்றன.

சட்லஜ் நதியின் அகலம் இரண்டு மைல்கள் என்றால், இங்கே இரண்டடியாக வைத்துக் கொள்கிறார்கள். அதே மாதிரி கணக்கில் தண்ணீரை விடுகிறார்கள். தண்ணீரின் வேகம் அந்த நதியில் எவ்வளவோ, அதே அளவில் சோதனை நதியிலும் வேண்டிய அளவு தண்ணீரைக் குறைத்து விடுகிறார்கள். இப்படிச் செய்து சோதனை நடத்துகிறார்கள். அதனால் ஏற்படக் கூடிய நன்மை தீமைகளை எல்லாம் உடனுக்குடன் கண்டு பிடிக்கிறார்கள். தீமைகளை விலக்க வழி தேடுகிறார்கள்.

அணைக்கட்டுக்கு எவ்வளவு அஸ்திவாரம் போடவேண்டும்; அணை எவ்வளவு உயரம் கட்டவேண்டும்; அதற்கு எவ்வளவு இரும்பு வேண்டும், சிமெண்ட் வேண்டும் என்றெல்லாம் சோதனை செய்து கண்டு பிடிக்கிறார்கள்.

"இதென்ன, ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவுமா! இப்படிச் சின்ன அளவில் திட்டம் போட்டுச் செய்யும் சோதனைகள் பெரிய அணைகள் கட்டுவதற்கு உதவுமா!" என்றால், கட்டாயம் உதவும் என்று அங்கே நிரூபித்துக் காட்டப்பட்டிருக்கிறது.

மேற்படி ஆராய்ச்சி நிலையத்தில் காதிமா அருவி மின்சார நிலையம் கட்டுவதற்கான திட்டங்கள் இருக்கின்றன. இங்கிருந்துதான் திட்டம் சோதனை செய்யப்பட்டு இப்பொழுது நிலையம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அது போலவே பத்ரி அருவி மின்சார நிலையத்துக்கான திட்டமும் இங்குதான் சோதனை செய்து நிறைவேறி யிருக்கிறது.

மட்டதில்லா அணைத் திட்டச் சோதனையைப் பார்த்தோம். அணைக்கட்டு, மதகு, மதகை அடைக்கும் கதவு, கதவைத் திறந்துவிட்டதும் குபுகுபுவென்று தண்ணீர் பாய்வது எல்லாம் காட்டப்படுகின்றன. இப்படி இன்னும் பல சோதனைகளைப் பார்த்தோம். அதாவது நாற்பது திட்டங்களையும், சோதனைகளையும் பார்த்தோம். நாற்பது ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்தச் சோதனைக் கூடத்தில் இந்தியாவில் உள்ள எல்லா ஜீவ நதிகளையும், அவற்றில் உள்ள அணைகளையும் அமைத்துச் சோதனை செய்து வரும் அதிசயத்தைப் பார்த்தோம்.

நதிப் பாதுகாப்பு

கங்கை நதியும், அதில் நடத்தி வரும் சோதனையும்தான் அதிசயமானவை. பொதுவாக நதிகள் அடிக்கடி தன் போக்கை மாற்றிக் கொண்டு வருவதைப் பார்த்திருக்கலாம். பழைய சரித்திர காலத்தில் நாம் ஒரு இடத்தில் இருந்ததாகப் படித்த நதிகள் எல்லாம் இப்பொழுது வேறு இடத்தில் உருவம் மாறி ஓடி வருவதைப் பார்க்கிறோம். ஒரு காலத்தில் பாலாற்றங் கரையில் எவ்வளவு பசுமை இருந்தது என்பதைப் பழைய காவியங்கள் விரிவாகக் கூறுகின்றன. ஆனால் இன்று பாலாறு பாலாறாகவே இருக்கிறது. அதில் மத்திய பாகத்தில் மட்டும் பால்போலத் தண்ணீர் ஓடுகிறது. மற்ற இடங்களில் எல்லாம் மணல்தான் ஓடுகிறது. இந்த நிலை ஒவ்வொரு நதிக்கும் ஏற்பட்டுக் கொண்டே இருந்தால் இந்திய நாட்டின் பூகோள அமைப்பே மாறவேண்டியதுதான். அப்படிப் பூகோள அமைப்பு மாறும்படி விட்டு விடலாமா! அப்படி மாறாமல் இருப்பதற்கு வேண்டிய சோதனைகளும் இங்கு நடைபெற்று வருகின்றன.

கங்கை நதி இந்திய நதிகளில் உள்ள மிகப் பெரிய ஜீவ நதிகளில் ஒன்றல்லவா! அதன் கரையில் எத்தனை எத்தனையோ புண்ணிய க்ஷேத்திரங்கள் இருக்கின்றன அல்லவா! அதில் மிகவும் முக்கியமானது காசி என்பது இந்திய மக்கள் எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அந்தப் புண்ணிய காசி நகரில் உள்ள பல புனித ஸ்நானக் கட்டங்களையும், ஏன், காசி நகரத்தையுமே அழித்துவிடும் முறையில் கங்கை நதி திரும்பிக் கொண்டிருக்கிறாள். இந்த நிலையை இப்படியே விட்டு விட்டால் காசி நகரத்தின் தோற்றம் மாறி விடும். அதனால் கங்கை நதியின் இந்தச் செயலைத் தடைப்படுத்தும் சோதனை ஒன்றை இங்கு செய்து வருகிறார்கள். கங்கை நதியையே அங்கு அமைத்திருக்கிறார்கள். அது உற்பத்தியாகும் இடத்திலிருந்து கடலில் சங்கமம் ஆகும் இடம் வரையில் உள்ள கங்கை நதியின் அமைப்பை நிர்மாணித்திருக்கிறார்கள். கங்கை நதியில் ஒவ்வொரு இடத்திலும் மண் எப்படி எப்படி எல்லாம் இருக்குமோ அவ்வாறே செய்திருக்கிறார்கள். அது காசி நகரை எவ்வாறு மோதி அழிக்க முயலுகிறது என்பதைக் கவனிக்க ஒரு





மேலே: மட்டதிர்ஸை சோதனை அணையின் தோற்றம்.
கீழே: கங்கை நதியில் காசி நகரம் இருக்கும் இடம்.

சிறு செயற்கைக் காசியையும், அதன் புனித ஸ்நானக் கட்டங்களையும் சோதனைக் கங்கையின் கரையிலே கட்டியிருக்கிறார்கள். அந்த இடத்தில் கங்கையின் போக்கை மாற்றுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று பல சிமெண்ட் கட்டைகளைக் கங்கை நதியில் கட்டி, பிரவாகத்தின் வேகத்தைத் திருப்புகிறார்கள். இந்தத் திட்டம் இன்னும் சோதனையில்தான் இருக்கிறது. சோதனை முடிந்ததும் கடைசியில் கங்கையில் அதை நிறைவேற்றி விடுவார்கள்.

இது போலவே யமுனை நதியையும் அமைத்து அதில் செய்துவரும் அதிசய சோதனையையும் பார்த்தோம்.

சைபன் பாலங்கள்

இன்னொரு சோதனை. ஆற்றில் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. திடீர் என்று ஒரு இடத்தில் பள்ளமாக இருக்கிறது. அதை அப்படியே விட்டால் ஆறு அந்தப் பள்ளத்தில் வேகமாக இறங்கும். அதனால் மேட்டில் உள்ள இடங்களுக்குத் தண்ணீர் போகாது. இப்படி ஏக்கச்சக்கமான நிலையில் உள்ள ஆற்றுக்கு என்ன செய்திருக்கிறார்கள், தெரியுமா! அதற்குப் பல புதிய மதகுகள் கட்டிச் சோதனை செய்கிறார்கள். ஆற்றுத் தண்ணீர் மேட்டுப்பாங்கான இடங்களுக்குப் பாய்வதற்கு எவ்விதத் தடங்கலும் இல்லாமல், பள்ளமான இடத்துக்கும் வேண்டிய அளவு தண்ணீர் செல்லுவதற்காக ஒரு மதகும் கட்டியிருக்கிறார்கள். ஆற்றுத் தண்ணீர் அப்படியே பூமிக்குள் புகுந்து பள்ளமான இடத்துக்குச் செல்லும்படி செய்வது. இப்படி ஒரு சோதனை. ஆற்றில் தண்ணீர் நிறைந்ததும் அதன் மேல் பக்கமாக வழிந்து விழுவது ஒரு சோதனை.

மேல் பக்கமாக வழிந்து விழும் சோதனை மதகுக்கு 'சாடல் சைபன்' என்று பெயர். கீழ்ப் பக்கமாகப் புகுந்து செல்லும் மதகுக்கு 'வால்யூம் சைபன்' என்று பெயர். இந்த மாதிரி சைபன் பாலங்களில் கீழ்ப்பக்கமாகச் செல்லும் பாலத்தைக் கண்டு பிடித்தவர் ஒரு தென் இந்தியர் என்பதில் நாமெல்லாம் பெருமைப் படலாம். வட்டவடிவமான மதகு ஒன்று செய்து அதன்மேல் மூடியும் போட்டிருக்கிறார்கள். இதனால் தண்ணீர் மட்டும் செல்வதற்கு வேண்டிய வசதி உண்டாகிறது. அதாவது தண்ணீருடன் காற்றும் சேர்ந்து செல்லாமல் வேண்டிய அளவு தண்ணீர் மட்டும் 'சைபன்' பாலத்தின் வழியாகச் செல்கிறது. இந்த சைபன் பாலத்தைத் தென்னாட்டிலுள்ள மைசூர் நகரத்தைச் சேர்ந்த திரு கணபதி ஐயர் என்பவர் கண்டு பிடித்திருக்கிறார். இந்தச் சோதனைப் பாலங்களையெல்லாம் பார்க்கும் போது நீர்ப்பாசன ஆராய்ச்சிக்கு என்னென்ன எல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது என்பதை எண்ணி அதிசயித்தோம்.

இன்னும் பல சோதனைகள்

இந்த மாதிரி சோதனை அணைகள், பாலங்கள், மதகுகள் முதலியவைகளுடன் இன்னும் பல ஆராய்ச்சிகளையும் செய்து வருகிறோம் என்று சொல்லி அந்தப் பகுதிக்கு எங்களை அழைத்துச் சென்றார் இஞ்ஜினீயர்.

அங்கு பல மாதிரி மண்கள், சிமெண்ட், சுண்ணாம்பு, களிமண் முதலியவைகள் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. இந்தியாவின் பல பாகங்களில் இருந்தும் கொண்டு வரப்பட்ட மண். இந்த மண்களை ஆராய்கிறார்கள். அதைப் பல விதமாகச் சோதனை செய்கிறார்கள். அந்த மண்ணின் தரம், அந்த மண்ணில் தண்ணீர் எவ்வாறு தங்கி நிற்கிறது! அப்பொழுது மண் எப்படி மாறுதல் அடைகிறது! எந்த எந்த மாதிரி மண்ணுள்ள இடத்தில் எந்தெந்த மாதிரி அணைகள் கட்டலாம்; அந்த அணைகளுக்கு எந்தெந்த முறையில் அஸ்திவாரம் போடலாம்; சிமெண்ட், சுண்ணாம்பு, களிமண் முதலியவற்றைச் சேர்க்கலாம் என்ற அதிசயமான திட்டங்களை எல்லாம் சோதனை செய்கிறார்கள்.

அணை கட்டும் விஷயம் மட்டும் புத்தக அறிவைக் கொண்டு பெற்றுவிட முடியாதாம்.

இதுபோன்ற பல சோதனை அணைகளைக் கட்டி, அந்த அணைகளுடன் சதா தொடர்பு கொண்டு ஆராய்வதன் மூலமாகத்தான் அணை கட்டும் அறிவைப் பெற முடியும் என்பதை இன்ஜினீயர் தெளிவாக விளக்கினார்.

செப்புக் கம்பியில் மின்சாரம் ஓடும் வேகத்தையும், அதன் செயலையும் ஆராய்ந்து ஒரு முடிவு கட்டியிருக்கிறார்கள் அல்லவா! அதே போல பூமிக்கு அடியில் உள்ள நீரோட்டத்தையும் அதன் வேகம், தன்மைகள் எப்படி இருக்கின்றன என்பதையும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். இதனால் குழாய்க் கிணறுகள் இறக்கி வேண்டிய அளவு தண்ணீர் பெற முடியும். இந்தச் சோதனை இன்னமும் சோதனையில்தான் இருக்கிறது.

இந்த மாதிரி ஆராய்ச்சிகள் செய்வதற்கு வேண்டிய பல அதிசயமான வசதிகள் அந்தச் சோதனைக் கூடத்தில் இருக்கின்றன. இருநூறு கன அடி வேகமுள்ள சோதனை ஆறுகளை அங்கு நிர்மாணிக்கலாம். பத்தொன்பது அடி உயரம் அருவி விழும்படி செய்து அதன் மூலம் சோதனை செய்து பார்ப்பதற்கு வேண்டிய வசதிகள் அங்கு இருக்கின்றன. இதையே இன்னும் விசாலமாக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்யப் போகிறார்கள்.

மேலே கூறியுள்ள சோதனைகள் எல்லாம் பெரிய அளவில், சாதாரண அறிவு படைத்த பாமரனுக்கும் புரியும்படி அமைத்திருப்பதைப் பார்த்து, ''ஆகா! இந்த இன்ஜினீயர்களே இப்படித்தான்!'' என்று வியந்து போனேன்.

உத்தரப் பிரதேச சர்க்காரின் நிர்வாக அதிகாரத்துக்குள் இவ்வாராய்ச்சிக்கூடம் இருக்கிறது. ஆனாலும் இந்தியாவில் இதர ராஜ்ய சர்க்கார்கள் தங்கள் ராஜ்யத்தில் உள்ள ஆறுகள், ஏரிகள் முதலியவைகளில் ஏதாவது அணையோ, இல்லை அதை மேலும் எவ்வாறு ராஜ்யத்துக்குப் பயன்படுத்தலாம் என்பதற்கு யோசனையோ கேட்டால் அந்த யோசனைக்கும் ஆராய்ச்சிகள் செய்து திட்டம் வகுத்து முடிவு செய்து யோசனை கூறி உதவுகிறார்கள்.

உத்தரப் பிரதேசத்தில் இந்த ஆராய்ச்சிக் கூடம் இருந்தாலும், நம்முடைய இந்திய தேசத்தில்தானே இருக்கிறது. இது நம்முடைய ஆராய்ச்சிக்கூடம் தான் என்று எண்ணிப் பெருமைப்படும் வகையில் இருந்து வருவதை எண்ணி எல்லாரும் மகிழலாம்.

விவசாய ஆராய்ச்சிக் கழகம்

ரூர்க்கியில் உள்ள விவசாய ஆராய்ச்சிக் கட்டடத்துக்குள் போவோம். அந்தக் கம்பீரமான கட்டடத்துக்குள் பிரும்மாண்டமான கூடம் அமைத்து உத்தரப் பிரதேசத்திலுள்ள எல்லா வித அணைகளும், அருவி மின்சார நிலையங்களும், பாலங்களும், ''மாதிரி'' செய்து வைத்திருக்கிறார்கள்.

கூடத்தின் மத்தியிலே உத்தரப் பிரதேசத்தின் இயற்கை அமைப்பை அப்படியே நிர்மாணித்து வைத்திருக்கிறார்கள். சுமார் இருபதினாயிரம் ரூபாய் செலவில் செய்திருக்கும் இந்த மாதிரியைப் பார்த்தால் உத்தரப் பிரதேசம் பூராவையும் சுற்றிப் பார்த்து வந்த திருப்தி ஏற்பட்டு விடுகிறது. அவ்வளவு தெளிவாகத் தத்ரூபமாக அமைத்திருக்கிறார்கள்.

இதுபோலவேதான் அங்குள்ள ஒவ்வொரு ''மாதிரி''களும் இருக்கின்றன. புதிதாகக் கட்டப்போகும் பல பாலங்களின் மாதிரிகளையும் அங்கு பார்த்தோம். அந்தக் கட்டடத்துக்குள் சில ஆராய்ச்சி சம்பந்தமான ஆராய்ச்சிகள் செய்வதற்கு வேண்டிய நவீன விஞ்ஞானக் கருவிகள் எல்லாம் இருக்கின்றன.

ஆற்றில் அணை கட்டிவிடுகிறார்கள். தண்ணீர் சமுத்திரம்போல் தேங்கி நிற்கிறது. அப்பொழுது அணையைப் பார்த்து நாம் மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால் சமுத்திரம் போன்ற தண்ணீரைத் தாங்கிக் கொண்டு நிற்கும் அணை எப்படியிருக்கிறது என்பதை நாம் தெரிந்து கொள்ள முடியுமா? முடியாது. அதற்கு ஒரு அதிசயமான கருவி வைத்திருக்கிறார்கள். அதன் மூலம் அணை தன்னுடைய சக்திக்குமேல் தண்ணீரைத் தாங்க வேண்டி வந்தால் என்ன பாடுபடுகிறது என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது. அதிகமான பாரத்தைச் சுமக்கும் மனிதனின் முகத்தில் வேதனை உண்டாகுமே அதுபோல் அந்த அணையும் வேதனைப்பட்டுத் துடிப்பதைக் காட்டுகிறார்கள். அதிக கனத்தால் அணையில் உள்ள ஒளிரேகைகளில் உருவங்கள் மாறித் துடி துடிக்கின்றன. ''ஐயோ! தாங்க முடியவில்லையே! தாங்க முடியவில்லையே! கனத்தைக் குறைத்து விடுங்களேன்!'' என்று வாய்விட்டு அலறுவது போல இருக்கிறது அந்தத் துடிக்கும் ஒளி ரேகைகள்.

ரூர்க்கியில் இருந்து ஹரித்துவாரம் வரையில் உள்ள இருபது மைல் தூரம் கங்கைக் கால்வாயை ஒரு இன்ஜினீயரிங் மாணவன் சென்று பார்த்து விட்டால் போதுமானது! அவன் நதி இன்ஜினீயரிங் கலை, நீர்ப்பாசன ஆராய்ச்சிக் கலை இன்னும் அதை ஒட்டிய எல்லா இன்ஜினீயரிங் கலைகளையும் தெரிந்து கொள்வதுடன் அவனுக்கு இருக்கும் சந்தேகங்களும் நீங்கி விடும். இன்ஜினீயரிங் கலைத்தேவி அங்கு இருபது மைல் தூரத்தில் கம்பீரமாகக் கொலுவீற்றிருக்கிறாள். பல ஜால வித்தைகள் செய்கிறாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

** ** **

பொதுவாக நமது நாடு இன்ஜினீயர்களுக்குப் பெயர் போனது. நமது நாட்டில் உள்ள இன்ஜினீயர்களின் திறமையைப் பயன்படுத்துவதுடன், மேலும் அந்தத் திறமையை வளர்ப்பதற்கு வழி செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் இன்னும் சில வருஷங்களில் நமது நாட்டை நீர் வளத்தில் நிகரில்லாத நாடாகச் செய்து விடலாம். சுதந்திர சர்க்காரின் நிர்வாகத்தில் இன்ஜினீயரிங் இலாக்காவில் எவ்வளவோ அரிய சாதனைகள் புத்தம் புதிய முறையில் உருவாகி இருப்பதைப் பார்த்து வருகிறோம். இந்தமாதிரி இன்ஜினீயர்களின் பல விசேஷ சோதனைகளின் மூலம் நமது நாடு எல்லா வகையிலும் நன்மையடைவதைச் சீக்கிரம் பார்க்கலாம்.

இந்த இனிய நினைவுடன் நீர்ப்பாசன ஆராய்ச்சிக் கூடத்தை விட்டுப் புறப்படுவோம். இதோ ஹரித்துவாரம் ரயிலடியில் உங்களுக்காக விசேஷ ரயில் பெட்டி காத்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பிரயாணப்பெட்டியில் ஏறிக் கொண்டு பல விஷயங்களில் பிரசித்தி பெற்ற டேராடூன் நகரத்துக்குப் போவோம். (தொடரும்)

மகத்தான விலைக் குறைவு

மிகவும் நவீனமான 1955 ஸ்பெஷல் மாடல்கள்

நேர்த்தியான உயர் ரக மிஷின் டிசைன் : ஒவ்வொன்றும் 3 வருஷ உத்தரவாதம்

இனாம் : ஏதாவது மூன்று கடிகாரங்கள் வாங்குபவருக்கு ஒரு கைக்கடிகாரமும் இரண்டு கடிகாரங்கள் ஆர்டருக்கு ஒரு பாக்கெட் கெடிகாரமும் ஒரு கடிகார ஆர்டருக்கு ஒரு கோல்டு கேப் பவுண்டன் பேனாவும் இலவசம்



No. 1181 10½ Size WATERPROOF

15 ஜுவல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்	ரூ.	36
17 ஜுவல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்		40
17 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு		54
21 ஜுவல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்		56



No. 1183 7½ Size Curved Shape !

15 ஜுவல்ஸ் பிரைட்-க்ரோம்	ரூ.	32
15 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு		38
17 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு (லீவர்)		63




No 1185 10½ Size Flat Shape

5 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு	ரூ.	19
5 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு C/S		21
15 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு		28
17 ஜுவல்ஸ் க்ரோம் கேஸ்		37
17 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு		42




No. 1186 5½ Size Ladies

15 ஜுவல்ஸ் பின் லீவர் ரோ.கோ.	ரூ.	45
17 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு		48
17 ஜுவல்ஸ் ரோ. கோ. (20 மைக்.)		65
21 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு		68




No. 1182 8¾ Size

15 ஜுவல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்	ரூ.	40
17 ஜுவல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்		44
17 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு		54
21 ஜுவல்ஸ் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்		58
21 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு		68



No. 1184 7½ Size Tonneau

15 ஜுவல்ஸ் பிரைட்-க்ரோம்	ரூ.	34
15 ஜுவல்ஸ் ரோல்டு கோல்டு		4[illegible]
17 ஜுவல்ஸ் ரோல்டுகோல்டு (லீவர்)		6[illegible]



அலாரம் டைம் பீஸ்	ரூ.	13
உயர் ரக டைம் பீஸ்		15

பாக்கெட் கடிகாரம்

சாதா டயல்	ரூ.	9
ரேடியம்		11
15 ஜுவல்ஸ்		27
15 ஜுவல்ஸ் [illegible]		32

PIONEER WATCH CO. PO. BOX No 11428, CALCUTTA-6

சிவன் கீர்த்தனைகள்

ஸ்வர அமைப்பு: செம்மங்குடி சீனிவாச ஐயர்

கீர்த்தனை 2. **ராகம்: பூர்வி கல்யாணி** **ஆதி தாளம்.**

பல்லவி

க்ஷீரஸாகர சாயி நின்
திருவடி பஜனமே ஜீவாதாரம் (க்ஷீரஸாகர)

அநுபல்லவி

ஸ்ரீரமை மணவாள தயாகர
தினமுனை நம்பின எங்களைக் காத்தருள் (க்ஷீரஸாகர)

சரணம்

உனதருளின்றியோர் அணுவும் அசையுமோ
உலகில் சராசர உயிர்களுக்கெல்லாம்
உனதருளின்றி இன்பமுமுண்டோ
ஓ ஜகந்நாதா தீனசரண்யனே (க்ஷீரஸாகர)

பூர்விகல்யாணி ராகம் கமனச்ரம மேளத்தில் பிறந்தது. இந்த மேளத்துக்கு கமகக்ரியா என்று பெயரிட்டு வேங்கடமகி கூறியுள்ளார். கமகக்ரியாவும், பூர்விகல்யாணியும் ஒன்றுதான் என்று சுப்பராம தீக்ஷிதர் கூறி இருக்கிறார். இதன்

ஆரோஹணம்: ஸ ரி க ம ப த ப ஸ்ா
அவரோஹணம்: ஸ் நி த ப ம க ரி ஸா.

இது தவிர, — கமதஸா — ஸரிதஸா — கமதநிதம கரிஸ — மத நிஸ் நிதப மகரி—கமரி என்கிற ப்ரயோகங்கள் வருவது, இந்த ராகத்துக்குப் புஷ்டியைக் கொடுத்து ரஞ்சிப்பிக்கச் செய்கிறது.

உபாங்க ராகம் — வக்ர ஸம்பூர்ண ராகம் — எப்பொழுதும் பாடத் தகுந்த ராகம். இதில் வரும் ஸ்வரஸ்தானங்கள் சுத்த ரிஷபம், அந்தரகாந்தாரம், ப்ரதி மத்யமம் சதுச்ருதி தைவதம், காகலிநிஷாதம் இந்த ராகத்தைத் தேசிய ராகமென்று ஸம்பிரதாய ப்ரதர்சினியில் சுப்பராம தீக்ஷிதர் கூறியுள்ளார்.

பூர்வி கல்யாணி — ஆதி — 1 களை

பல்லவி

; பம கா ரி ஸா,ரி கா ப ம | கரி, ஸா ; | ; ; ; ஸ ரி ||
1 க்ஷீ - - ர ஸா - க ர - | சா - யி - | - - - - -

கம ப ம கா ரி ஸா,ரி கா ப ம | கரிகமாபமகரி, ஸா | ; ; ; ஸா ||
2 - - க்ஷீ - - ர ஸா - க ர - | சா - - - - - யி | - - - நின்

, ரி க கா க கா கா கா ம ரி கா | கா கநிதா தபபா,ம | ததபம கரி கா ||
- - தி ரு வ டி ப ஜ ன - மே | ஜீ - - - வா - - - | தா - - - ரம் - -

கத ப மகா ரி ஸா , ரி கா ப ம | கரிக மாபமகரி, ஸா | ; ; ; ஸா ||
3 - - க்ஷீ - ர ஸா - - க ர - | சா - - - - - - - - யி | - - - நின்

ரி த ஸரிகா கா கா ம ரி கா | கஸ்ாநி தபபா , ம | கமதமகரி ஸரி ||
- - தி ரு வ டி ப ஜ ன - மே | ஜீ - - வா - - - | தா - - - ரம் -

க ம பமகா ரி ஸா , ரி கா மபமா | க ரி , ஸா ; | ; ; ; ; ||
- - க்ஷீ - - ர ஸா - க ர - - | சா யி - | - - - -

அநுபல்லவி

; பா தா பா ஸ்ா ; , ஸ் ரி | ஸ்ா ; ஸ்ா ஸ்ா | ஸ்நிதநி பா தா ||
1 - ஸ்ரீ - ர மை - - ம ண | வா - ள த | யா - - - க ர

பா மபதா பா ஸ்ா ; , ஸ் ரி , க் | ரிஸ்நித ; தநி மா,த | ரிரிஸ்நி தமதா ||
2 - ஸ்ரீ - - ர மை - - ம ண - | வா - - ள - த - | யா - - - க - ர

; த ஸ்ா ஸ் ஸ்ரி ஸ்நிதா பா ப ம | கா க நி த ப பா | ப பம கமரி கா ||
1 தி ன மு னை - நம் - - பி ன - | எ ங் - - க ளை | க்கா - - - த் தருள்

; ததரிஸ் ரி ரி ரி ஸ்நி தநி ம தா | கமத ஸ்ா,நி த ப ம | கா மபமா கரிகா ||
2 - தின - மு னை ந ம் - - - - ம்பி ன | எங் - - - க ளை - | கா - - - - த்தருள்

; க்ஷீ ர ஸா க ர சா யி ||

சரணம்

; பபா பபா பமகா மா பா | ; பதா ப ஸா, நி | தபபா பமகமரி ||
1 - உன தருள் இன் - - றி யோர் | அணுவும் அ - | சை - - யு மோ - -

கம பபா பபம தபமக த ப தா | , ப ப தா ப ஸா, நி | தபபா பமகமரி ||
2 - - உன தருள் இன் - - - றி - யோர் | - அ ணு வும் - அ - - | சை - - யு - மோ - -

; ரிகா ரி பம கரி, ; ஸா ஸா | ரி த ஸ ரி க மா | பா ; பா ; ||
1 - உலகில் ச - ரா - - ச ர | - - உயிர்களு | க்கெ ல்லாம்

; ரிகா ரி பம கரிகமாபம கரிஸா | ரி த ஸ பா க மா | பா ; பா ; ||
2 - உலகில் ச - ரா - - - - - ச ர | - - உயிர்களு | க்கெ ல்லாம்

; மபா த பா ஸா ; ; ஸா | ; , ஸா ஸ ஸா | ஸநி தா,நி பதாப, ||
1 - உன தருள் இன் - - றி | - - இன்பமும் | உண் - - -டோ - -

; ம பா தபா ஸா, ,ரி கா ரிஸநித | ; , ரி ஸ ஸா, நி | ஸநிதா ,நி பதாப ||
2 - உ ன த ருள் இ ன் - - றி - | - - இன்ப, மும் | உ - ண - டோ - -

; , ஸா ஸ ஸா ஸநி தா ; தமா த நி | ; கா கநிதா பம | ம தபமக ரிகா ||
1 . ஓ ஜ கன் னா - - - தா - - - | நி - - ன ச - | ரன் - - ய - னே

; , ரி ரி ரி ரிரிஸநி தம தநி, | கமத ஸா,நி தபம | நி தபமகரி ஸரி ||
2 ஓ ஜ கன் னா - - தா - - | நி - - - ன ச - | ரன் - - - ய - னே-
கம
- - ஸ்ரீ ர ஙா க ர சாயி ||

பாரதி விழா

மகா கவி பாரதியார் பிறந்த எட்டையபுரத்தில் செப்டம்பர் 11, 12 தேதிகளில் பாரதி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பாரதி மண்டபத்துக்கு எதிரில் விசேஷமாக அலங்கரிக்கப்பட்ட பந்தலில் பதினாயிரக் கணக்கான மக்களின் முன்னிலையில் பாரதி விழா நடைபெற்றது. விழா ஆரம்பத்தில், பாரதியார் மணிமண்டபத்தைக் கட்டித்தந்த பேராசிரியர் 'கல்கி' திரு ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் திருஉருவப் படத்தை யானை மீது வைத்து ஊர்வலம் வந்தார்கள். ஆயிரக் கணக்கான ஏழைகளுக்குத் திருமதி மதுரம் அவர்கள் அன்னதானம் செய்தார். பின்னர் நாகஸ்வர சக்கரவர்த்தி திரு டி. என். ராஜரத்தினம் பிள்ளையும், காருகுறிச்சி கே. பி. அருணாசலமும் நாகஸ்வர இசை முழக்க, விழா ஆரம்பமாயிற்று. இந்த விழாவை நடத்துவதற்கு முன்னின்று முயன்ற வரவேற்புக் குழுத் தலைவர் திரு என். எஸ். கிருஷ்ணன் வரவேற்புரை கூற, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் ஏ. சிதம்பரநாதன் செட்டியார் தலைமை தாங்கினார். திரு ஏ. ஜி. வெங்கடாச்சாரியார் விழாவைத் தொடங்கி வைத்தார்.

நெல்லை ஹிந்து கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு கு. அருணாசலக் கவுண்டர், பேராசிரியர் கல்கி திரு ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்தார்.

இரண்டாவது நாள் 'கல்கி' ஆசிரியர் திரு சோமு அவர்கள் ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசினார். படத் திறப்புக்கு முன்பு, ராஜாஜி அவர்கள் இந்த விழாவுக்கு அனுப்பிய ஆசிச் செய்தியை ஆசிரியர் சோமு அவர்கள் சபையில் படித்த போது மக்களின் மகிழ்ச்சி வெள்ளாம் பலத்த கரகோஷ ஆரவாரமாக எழுந்தது. பின்னர், மதுரை தியாகராயக் கல்லூரி, டாக்டர் இராச மாணிக்கனார், திரு ஜீவானந்தம் எம். எல். ஏ., திரு ரகுநாதன் முதலியோர் பேசினார்கள். திரு சாமிநாதன் நன்றியுரை கூறினார்.

விழாவின் ஆரம்பத்தில் திரு கே. ராமதாஸ் தேசியக்கொடி ஏற்றி வைத்தார். இரண்டு தினங்களிலும் இசைக் கச்சேரிகளும், காலக்ஷேபங்களும், வில்லுப் பாட்டும் நடைபெற்றன.

திரு எம். கே. தியாகராஜபாகவதர், ஸ்ரீமதி எம். எல். வசந்தகுமாரி ஆகியவர்களின் இசை விருந்தும், ஸ்ரீமதி எஸ். டி. சுப்புலக்ஷ்மி குழுவினரின் சீதா கல்யாணம்' கதா காலக்ஷேபமும், திரு என். எஸ். கிருஷ்ணனின் 'காந்திமகான்' வில்லுப் பாட்டும் நடைபெற்றன.

எட்டையபுரம் பாரதி விழாக் காட்சிகள் சிலவற்றையும், சென்னை மாம்பலத்தில் நடந்த பாரதி விழாக் காட்சிகளையும் எதிர்ப் பக்கத்தில் உள்ள படங்களில் காணலாம் :—

1. எட்டையபுரம் பாரதி மண்டபத்துக்கு எதிரில் அமைந்துள்ள வரவேற்புப் பந்தலின் தோற்றம். 2. 'கல்கி' ஆசிரியரோடு பாரதி விழா வரவேற்புக் குழுவினர்கள். 3. ஆசிரியர் திரு சோமு அவாகள் ரஸிகமணி படத்தைத் திறந்து வைத்துப் பேசுகிறார். 4. ஸ்ரீமதி வசந்தகுமாரியின் கச்சேரி நடைபெறுகிறது. 5. ஸ்ரீ ஜீவானந்தம் வீராவேசமாகச் சிம்மகர்ஜனை புரிகிறார். 6. கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் கோஷ்டியினரின் வில்லுப்பாட்டு நடைபெறுகிறது. 7. பந்தலில் குவிந்திருந்த பெருங் கூட்டத்தில் ஒரு சிறு பகுதி. 8. சென்னையில் நடந்த பாரதி விழாக் காட்சிகள். விழாத் தலைவர் பேராசிரியர் திரு அ. சீனிவாசராகவன் பேசுகிறார். விழாவை ஆரம்பித்து வைத்த குன்றக்குடி அடிகளாரும் வரவேற்புரை நிகழ்த்திய 'கல்கி' ஆசிரியர் திரு சோமு அவர்களும் அமர்ந்திருக்கின்றனர். 9. பேராசிரியர் கல்கி திரு ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் படத்தைக் கல்வி மந்திரி கனம் சி. சுப்பிரமணியம் திறந்து வைக்கிறார். 10. சென்னை பாரதி விழாவுக்கு வந்திருந்த தமிழ்ப் பெரு மக்கள்.


பாரதி விழாக் காட்சிகள்



நம்பமுடியாதற்கு
மேல் அழகு
சூபர்பைன்
மெர்ஸிரைஸ்
செய்யப்பட்டது
TWO BY TWO
FULL VOILE
ராஜ்ரேகா
ராஜ்லக்ஷ்மி
ராஜ்ஷோபா
ராஜ்சுந்தரி
பயனீர் பீஸ்கூட்ஸ் கம்பெனி
கேனராஜ் கல்லி, மூல்ஜி ஜேதா மார்க்கெட், பம்பாய்-2.
மாபத்லால் பைன் மில்ஸ்-நவ்ஸாரி

பெருமாள் மாடு



கு. ரா.

“பூம், பூம், பூம், பூம்”

“டம், டம்! டம், டம்!”

தெருவில் மாட்டுக்காரன் வந்து விட்டான். கேட்க வேண்டுமா குழந்தைகளின் கும்மாளத்தை! 'ஹோ'வென்று இரைந்து கொண்டு பெருமாள் மாட்டுக்காரனைச் சுற்றிச் சுற்றி ஓடிக் கொண்டு அவர்கள் அவனை வீதி நெடுகப் பின்தொடர்ந்தார்கள்.

பெருமாள் மாட்டுக்காரனின் ஆரவாரமான விஜயம் அந்த வீட்டின் பூஜை அறையில் உட்கார்ந்து தீபத்துக்கு எண்ணெய் விட்டு ஏற்றிக் கொண்டிருந்த வடிவம்மையின் காதிலும் விழுந்தது. ஏற்கெனவே வயது முதிர்ச்சியால் நடுங்கும் கைகளுடன் தன் வேலையில் முனைந்திருந்த அந்தக் கிழவியின் உடலில் மின்சாரம் பாய்வது போன்ற ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. குத்து விளக்கில் மேலும் நிறைமாய் எண்ணெயை ஊற்றி ஏற்றி விட்டு, பரக்கப் பரக்க வீட்டு வாசல் பக்கம் வந்தாள் கிழவி. எப்பொழுது தெருவில் பெருமாள் மாட்டுக்காரன் வந்தாலும் அவள் இப்படித் தான் பரபரப்போடு வாசலுக்கு வந்து அவனைப் பார்க்கிற வழக்கம். அவன் குரலைக் கேட்பதிலும், அவன் வேஷத்தைப் பார்ப்பதிலும் அவளுக்கு ஒரு திருப்தி.

அவன் உடுக்கையின் ஓசையும், அவன் பின்னால் ஓடும் குழந்தைகளின் கூச்சலும் பழைய ஞாபகங்களை வருவித்து அவள் இழந்து விட்ட இளமையின் தலைவாசலில் ஒரு விநாடி அவளைக் கொண்டுபோய் நிறுத்திவைத்துவிடும்.

இந்தப் பெருமாள் மாட்டுக்காரன் ஒரு கிழவன். அநேகமாக இவர்கள் எல்லோரும் வயது முதிர்ந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

“அந்த அம்மா கட்டிக் கிழிச்ச பழைய புடவை ஒண்ணு குடுப்பாங்களா, பஸவண்ணு!”

“இந்த வீட்டு ஐயா பழைய வேட்டி ஒண்ணு குடுத்தா, மேலே போட்டுக்குவியா பஸவண்ணு!”

மாடு தலையைத் தலையை ஆட்டிற்று. பழைய வேஷ்டி கொடுப்பார்களா, புடவை கொடுப்பார்களா, அல்லது ஒன்றும் கொடுக்க மாட்டார்களா என்றெல்லாம் அது என்னத்தைக் கண்டது! தன் எஜமான் கேள்வி கேட்டு உடுக்கையை அடித்தால் தலையை ஆட்ட வேண்டும் என்பதுதானே அதற்குத் தெரியும்!

வடிவம்மை பெருமூச்சு விட்டாள். பழைய ஞாபகம் பழைய ஞாபகமாகவே போய் விட்டது! ஒரு வருஷமா இரண்டு வருஷமா, ஐம்பது வருஷங்கள் அல்லவா சென்றுவிட்டன!

ஐம்பது வருஷங்களுக்குமுன்பு வடிவம்மை இளம் பெண்ணாக இருந்தாள். யௌவனத்தின் செழிப்பும், வசீகரமும் போட்டி போட்டுக் கொண்டு பார்ப்பவர்களின் கண்களையும், மனசையும் ஒருங்கே கவர்ந்தன. வீட்டுக்கு மூத்த மகள் அவள். அதற்குப் பின் வீரபாகுப் பிள்ளைக்குப் பல குழந்தைகள் பிறந்து தவறிப் போயின. இப்பொழுது மூன்று வயசுப் பையன் ஒருவன்தான் எஞ்சி யிருக்கிறான். எனவே, பெண்ணும் பிள்ளையும் செல்வமாக வளர்ந்து வந்தார்கள். அவர் மருமான் சந்திரகாசு அவர்கள் வீட்டில்தான் வளர்ந்து வந்தான். மாமன் மகன் சரவணனை அவன் தரையில் விடாமல் தூக்கிக் கொண்டு அலைவான்.

“குழந்தையையாவது தூக்கி வைத்துக் கொள்ளட்டுமே. வேலை வெட்டிதான் கிடையாது” என்பது பிள்ளையின் மனைவியினுடைய வாதம். சந்திரகாசு ஒரு வேலையிலும் நிலைக்காமல் சோம்பேறியாய் வெட்டிப் பொழுது போக்கி வந்தது அவளுக்கு ஆத்திரமூட்டிற்று.

ஆள் அழகனான சந்திரகாசு மாமன் மகள் தனக்குத்தானே என்கிற நினைப்பில் நன்றாக உடுத்திக் கொண்டு, வெற்றிலையைக் குதப்பிய படி வாய்ச் சவடால் அடித்துக் கொண்டு சீட்டாட்டத்தில் கைதேர்ந்தவனாக விளங்கினான். வடிவம்மையுடன் ஏகப்பட்ட நிலபுலன் தனக்கு வர இருக்கையில் அவன் ஏன் வீணாக உடலை வருத்திக் கொள்ள வேண்டும்!

இது மாத்திரம் அல்ல; வடிவம்மை தன் பேச்சிலும், நடை உடை பாவனைகளிலும் மயங்கித் தன்னையே மணம் புரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பி இருப்பதையும் அவன் நன்றாகத் தெரிந்து கொண்டிருந்தான்!

வீரபாகுப் பிள்ளைக்குத் தன் பெண்ணைத் தன் மருமானுக்குக் கொடுப்பதில் இஷ்டமே. ஆனால் அவர் மனைவி மீனாக்ஷிக்கு இது பிடிக்க வில்லை. நாத்தி மகன் தங்கள் வீட்டோடு இருந்து வந்ததையே வெறுத்த அவளுக்கு, அவனை மருமகனாகச் செய்து கொள்வது என்கிற எண்ணம் வேம்பாகக் கசந்தது.

இந்த வெறுப்பை ஒரு தினம் அவள் வழக்கத்துக்கு மாறான இயல்புடன் வெளிப் படுத்திவிட்டாள். அன்று குழந்தை சரவணன் அழுது அழுது முரண்டு பிடித்தான். நாலணாவுக்குப் பூரியும், மசால்வடையும் சந்திரகாசு வாங்கிக் கொடுத்த பிறகே அவன் ஓய்ந்தான். சந்திரகாசு இடங் கொடுத்தே தன் குழந்தை கெட்டுப் போவதாக மீனாக்ஷிக்குத் தோன்றியது. “ஒரு காசு சம்பாதிக்கத் திறமை இல்

லாதவர்களுக் கெல்லாம் மிட்டாயும் பட்சணமும் வாங்கத் துட்டு எப்படிக் கிடைக்கிறது!'' என்று கத்தினாள்.

அப்போது ஒரு பெருமாள் மாட்டுக்காரன் ''பூம், பூம்'' என்ற ஒலியுடன் வீட்டு வாசலில் பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான்.

''இவனாவது காலு காசு சம்பாதிப்பான் போல இருக்குது நிசம்!'' என்று மீனாக்ஷி குத்தலாகக் கூறிய வார்த்தைகள் சந்திரகாசவின் உள்ளத்தில் ஊசி போல் பாய்ந்தன.

சந்திரகாச கோபித்துக் கொண்டு வெளியே போனான். அப்புறம் அவனைக் காண வில்லை. நாட்கள் சென்றன. நாட்கள் மாதங்களாயின.

மாதங்கள், வருஷங்களும் ஆயின. வடிவம்மை வேறு ஒருவரையும் கல்யாணம் செய்து கொள்ள இஷ்டப்படாமல் சந்திரகாசவின் வருகையை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கையில் ஒரு தினம் அவன் திடும்பிரவேசமாய்த் திரும்பி வந்தான். வடிவம்மைக்குப் புது மோஸ்தரில் புடவையும், ரவிக்கைத் துணிகளும் வாங்கி வந்தான்.

சரவணன் இன்னும் குழந்தையாகவே இருப்பான் என்று அவன் நினைத்தான் போல் இருக்கிறது! ஏனென்றால், பெரிய பையனாக வளர்ந்து விட்ட சரவணன் சந்திரகாச வாங்கி வந்த பலூன்களையும், ஊதல்களையும் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

''ஏம்பா! என்ன உத்தியோகம் பார்க்கிறே!'' என்று கேட்டார் வீரபாகு.

''கம்பனியிலே'' என்றான் மருமான்.

''என்ன கம்பனி!''

''துணிகள் விற்கிற கம்பனி.''

''எந்த ஊரில்!''

''ஒரு ஊர் என்று சொல்ல முடியாது. ஊர் ஊராய்ப் போய் மாதிரித் துணிகளைக் காண்பித்து, வியாபாரம் பிடிக்க வேண்டும்.''

''சும்மா அலையற வேலைன்னு கஷ்டமாய் இருக்குமே!''

''இல்லை, மாமா. எனக்கு ரொம்பப் புடிச்சித்தான் இருக்கு. ஊர் சுத்திச்சுத்திப் பழக்கமாய்ப் போயிட்டுது!'' என்றான் சந்திரகாச.

''ஏன் தம்பி! வடிவம்மையைக் கல்யாணம் பண்ணிக் கொண்டுதானே திரும்பிப் போகப் போறே!'' என்று அவன் மாமி கல்யாணப் பேச்சை ஆரம்பித்தாள்.

சந்திரகாச வடிவம்மையின் பக்கம் பார்த்துச் சிரித்தான். அவள் வெட்கத்துடன் சிரித்துக் கொண்டு உள்ளே ஓடிவிட்டாள்.

''இன்னும் ஒரு வருஷம் பொறுத்துக்கிடுங்க மாமி. இன்னும் கொஞ்சம் பணம் சம்பாதிச்சு வடிவுக்கு ஏதாவது நகை நட்டு பண்ணிப் போட்டுக் கல்யாணம் பண்ணிக்கிறேன்'' என்று கூறிவிட்டு எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டான் அவன்.

* * *

மாயவரத்தில் மாயூரநாதர் உத்ஸவம். ஏராளமான கூட்டம். ரயிலிலும், பஸ்ஸிலும், மாட்டு வண்டிகளிலும், கால் நடையாகவும் ஜனங்கள் நாலா பக்கங்களிலிருந்தும் வந்தபடி இருக்கிறார்கள். கடை கண்ணிகள், ராட்டினம், பொம்மலாட்டம் முதலான வேடிக்கைகள் ஏராளமாக வந்திருக்கின்றன. அங்கங்கே ஜனங்கள் கூட்டங் கூட்டமாக நின்று கொண்டு வேடிக்கை பார்க்கிறார்கள். தேரோடும் ஓர் இடத்தில் ஒதுப்புறமாக வீரபாகுப் பிள்ளை வீட்டார் நின்று கொண்டிருந்தார்கள்.

நாலா புறங்களிலும் என்னென்னவோ வேடிக்கைகள் நடந்து கொண்டிருந்தன. அவர்களுக்குப் பின்னாலும் ஒரு வேடிக்கை நடந்து கொண்டு தான் இருந்தது. ''ஓஹோ ஹோ'' என்று ஓர் இரைச்சல். அதைத் தொடர்ந்து, பெருமாள் மாட்டுக்காரன் உடுக்கையின் 'டம் டம டம் டம' என்ற சத்தம். அத்தோடு சேர்ந்து 'பீ பீ' என்று ஒலிக்கும் ஓர் ஊதல்.

கொழு கொழு என்று வளர்ந்த பெருமாள் மாட்டுக் காளைக்கும் ஒரு சிறிய பசுங் கன்றுக்கும் கல்யாணம் பண்ணுகிற பாவனையில் வேடிக்கை காண்பித்துக் கொண்டிருக்கிறான் அந்தப் பெருமாள் மாட்டுக்காரன்.

''பெண் வரமாட்டேங்கறாளே!''

''பெண் கோவிச்சிண்டிருக்காளே; பெண்ணைப் போய்க் கூப்பிடுடா, பலவன்னு!''

இந்தக் குரல் வடிவம்மையின் காதில் விழுந்ததும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

பழக்கமான குரல் போல் இருந்ததால் பெருமாள் மாட்டுக்காரனைச் சுற்றி இருந்த கூட்டத்தின் ஓர் இடை வெளியின் வழியாகத் தன் பார்வையைச் செலுத்தினாள்.

இந்தப் பெருமாள் மாட்டுக்காரன் இளைஞன் போல் தோன்றிற்று. சிவப்பு நிறமான பெரிய துணியை வரிந்து வரிந்து மிடுக்கான தலைப் பாகையாகக் கட்டியிருந்தான். முகத்தில் அடர்த்தியான மீசையும், தாடியும் வளர்ந்திருந்தன. நெற்றி முழுவதையும் மறைத்துக் கொண்டிருந்தது பட்டை நாமம்.

வடிவம்மை பெருமாள் மாட்டுக்காரனை வெறிக்க வெறிக்கப் பார்த்தாள். பெருமாள் மாட்டுக்காரன் அவள் இருந்த பக்கம் சற்று நெருங்கி வந்தபோது நின்று நிதானித்து அவளைக் கவனித்தான். அந்த மாட்டுக்காரனும் தற்செயலாகவே அவளை நோக்கினான். இருவர் கண்களும் சந்தித்தன.

ஒரே ஒரு கணம்தான். ஆனால் அந்த ஒரு கணத்தில் ஐம்பது ஆண்டுகளின் வாழ்க்கை முடிந்து விட்டது வடிவம்மைக்கு. அந்தப் பெருமாள் மாட்டுக்காரன் வேஷத்தில் இருந்தவன் சந்திரகாசதான் என்பதை அவள் உணர்ந்தாள். வேஷம் என்னதான் அவனை அடையாளம் தெரியாமல் மறைத்தாலும், கண்களின் பார்வையில் உள்ள அடையாளத்தை மறைக்க முடியுமா! அவள் கண்களைச் சந்தித்ததும் பெருமாள் மாட்டுக்காரன் கையிலிருந்த உடுக்கையை ஒரு கணம் நழுவ விட்டான். பிறகு, சட்டென்று குனிந்து அதை எடுத்துக் கொண்டு வந்த வழியே திரும்பி விட்டான்.

சந்திரகாசவை அப்புறம் வடிவம்மை பார்க்கவேயில்லை. ஏன், வீரபாகுப் பிள்ளை வீட்டார் ஒருவருமே அவனைப் பார்க்கவில்லை.

வடிவம்மை கன்னிப் பெண்ணாகவே தன் காலத்தைக் கழித்து விட்டாள். ஆனால், இன்றும் வாசலில் பெருமாள் மாட்டுக்காரனின் உடுக்கைச் சத்தம் கேட்டால் வாசல் வரையில் சென்று அவனை ஒரு தரம் பார்க்க அவள் தவறுவதில்லை.

தான் சாகும் முன் இன்னொரு முறை சந்திரகாசவைப் பார்க்கலாமென்கிற நம்பிக்கையோ என்னவோ தெரியவில்லை!



ஆற்றங்கரையினிலே

பேராசிரியர். ரா. பி. சேதுப்பிள்ளை

37. திருக்காளத்தி

தமிழகத்தின் கண்ணெனத் திகழ்வது திருக்காளத்தி மலை. அம் மலையிலே பொன்முகலியாறு புனிதமாய் ஓடும்; கல் அதிர நின்று கருமந்தி விளையாடும். இத்தகைய செம்மையான மலையை நோக்கி நடந்தார் திருநாவுக்கரசர்.

> "கண்காள் காண்மின்களோ
> கடல் நஞ்சுண்ட கண்டன்தன்னை
> எண்தோள் வீசி நின்று
> ஆடும் பிரான் தன்னை
> கண்காள் காண்மின்களோ"

என்று பாடிக்கொண்டு மலையடிவாரத்தை அடைந்தார்; முகலியாற்றில் முறையாக நீராடினார்; தூய வெண்ணீறு துதைந்த மேனியராய் மலையின் மீது மெல்ல அடி வைத்து ஏறினார். "திண்ணன் என்னும் திருத் தொண்டனது கண்ணைக் கவர்ந்த அண்ணலார் அமர்ந்தருளும் அரும் பெரு மலை இதுவன்றோ" என்று எண்ணி எண்ணிக் கண்ணீர் வடித்தார். தென் கயிலாசம் என்று நன்மக்கள் போற்றும் காளத்தி மலையில் அமர்ந்தருளும் இறைவனை,

> "கனத்தகத்தான் கயிலாயத் துச்சியுள்ளான்
> காளத்தியான் அவனென் கண்ணுளானே"

என்று பண்ணார்ந்த பாட்டிசைத்துப் போற்றினார்.

இவ்வாறு காளத்தி நாதற்குப் பாமாலை யணிந்த திருநாவுக்கரசர், திண்ணிய அன்பு வாய்ந்த கண்ணப்பரின் திருவுருவத்தை அம் மலையிலே கண்டார். வில்லை ஊன்றிய கோலத்தில் நின்ற அவ்வேடர் பெருமான் அடிகளில் விழுந்தார்; எழுந்தார்; கண்ணீர் பொழிந்தார்; "விண்ணுலகும் மண்ணுலகும் வியந்து போற்றும் விமலனே! இறவாத பேரன்பின் எல்லை கண்ட பெருமானே! கண்கள் மூன்றுடைய காளத்தி நாதனுக்குக் கண் உவந்து அளித்த அண்ணலே! என் அப்பனே! கண் அப்பனே! எல்லையற்ற உன் அன்பின் திறம் கண்ட ஈசன், போலியாகிய என்னையும் ஒரு பொருளாகக் கருதி அருள் செய்தானே" என்று பொருமினார்; உள்ளம் உருகினார்.

கண்ணப்பன் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற திண்ணன் வேடர் குலத்தில் பிறந்தவன்: மலையரசன் பெற்ற திருமகன். திண்ணிய மேனி வாய்ந்த மைந்தனுக்குத் திண்ணன் என்று பெயரிட்டான் அவ்வேடர் மன்னன். வீரக் கொழுந்தென வளர்ந்தான் திண்ணன். வேட்டைத் தொழிலுக்கு ஏற்ற பயிற்சி யெல்லாம் பெற்று வேடர்குலமணியாய் விளங்கினான்.

ஒரு நாள் வேடருடன் கூடிக் காட்டிலே வேட்டையாடப் போந்தான் அக்காளை. கானவர்கள் காட்டைக் கலைத்த பொழுது கறுத்துக் கொழுத்த விலங்கொன்று கதித்து எழுந்து ஓடிற்று; தோழர் இருவரோடு அவ் வலிய விலங்கைத் தொடர்ந்தான் திண்ணன். காட்டினும் மேட்டினும் காதவழி இழுத்து அடித்துக் காளத்தி மலையடிவாரத்தில் அவன் கை வாளால் வெட்டுண்டு விழுந்தது அவ் விலங்கு.

அம் மலையிலேறிச் சற்று இளைப்பாறச் சென்ற திண்ணன் அங்கே காளத்தி நாதனைக் கண்டான்; கரை காணாக் காதல் கொண்டான். பள்ளத்திற் பாயும் வெள்ளம் போல் விழுந்து அடித்து ஓடினான்; காளத்தியப்பனைக் கட்டித் தழுவினான்.

"மாகமார் திருக்கா ளத்தி
மலையெழு கொழுந்தாய் உள்ள
ஏகநா யகரைக் கண்டார்
எழுந்தபே ருவகை அன்பின்
வேகமா னதுமேற் செல்ல
மிக்கதோர் விரைவி னோடும்
மோகமாய் ஓடிச் சென்றார்
தழுவினார், மோந்து நின்றார்"

(மாகம்-மேகம், ஆகாயம்: உவகை-மகிழ்ச்சி)

உடன் வந்த தோழரை மறந்தான்; உற்ற பசியையும் மறந்தான். "அல்லும் பகலும் விலங்குகள் திரியும் இம் மலையில் தன்னந் தனியாக இருந்தானே எம்பெருமான்! இவரைக் காப்பவர் எவரையும் காணோமே! பொழுதறிந்து உணவளிப்பார் யாரும் இல்லையே!" என்று உளம் வருந்தி அழுதான். ஈசனது பசியை ஆற்றுதலே முதற் கடமை எனத் துணிந்து எழுந்தான். வேட்டையாடி வீழ்த்திய விலங்கைக் காட்டுத் தீயில் வதக்கினான்; கொழுவிய தசை களைக் கோலிற்கோத்து, பதத்தில் காய்ச்சி, பல்லினால் அதுக்கி, நாவினால் சுவைத்து, கல்லையில் பொறுக்கி வைத்து, காளத்தி நாதனுக்குப் படைத்து மகிழ்ந்தான்.

அப்போது அந்திமாலை வந்தது. நாட்டை மறந்தான் திண்ணன்; வீட்டை மறந்தான். காளத்தி நாதன் அருகே வில்லும் கையுமாய் நின்று விடியுமளவும் காவல் புரிந்தான். இவ் வண்ணம் பகலில் வேட்டையாடி இறைச்சி கொணர்வதும் இரவில் கண் துயிலாது காவல் செய்வதும் திண்ணன் பணியாய் அமைந்தன.

ஒரு நாள் திருவமுதைத் திருத்தி எடுத்து வரும் பொழுது காளத்தி நாதன் கண்ணில் குருதி வடியக் கண்டான் அத் தொண்டன்; திடுக்கிட்டான். மயங்கி மண்மேல் விழுந்தான். "இது வேடர் செய்த தீமையோ? விலங்கினம் செய்த கொடுமையோ?" என்று கதறினான். பச்சிலைகளின் சாற்றைப் பிழிந்து புண்ணுற்ற கண்ணில் வார்த்தான். பின்னும் குருதி நிற்கவில்லை. அந் நிலையில் "ஊனுக்கு ஊனிட்டால் உற்ற நோய் தீரும்" என்னும் பழமொழியை நினைந்தான்; உள்ளம் மகிழ்ந்தான்; துள்ளி எழுந்தான்; கூரிய அம்பை எடுத்தான்; தன் கண்களில் ஒன்றைப் பெயர்த்தான்; குருதி வடிந்த கண்ணில் அப்பினான். புண்பட்ட கண் பண்பட்டது. செந்நீர் நின்றது; திண்ணன் சிந்தை குளிர்ந்தது. ஆடிப் பாடி ஆனந்தமுற்றான்.

"நின்ற செங் குருதி கண்டார்
நிலத்தினின்று ஏறப் பாய்ந்தார்
குன்றென வளர்ந்த தோள்கள்
கொட்டினார், கூத்தும் ஆடி
நன்றுநான் செய்த இந்த
மருந்தென நகையும் தோன்ற
ஒன்றிய களிப்பி னாலே
உன்மத்தர் போல மிக்கார்"

(உன்மத்தர் — பித்தர்)

என்று அவ் அன்பனது இன்ப வெறியினை எடுத்துரைக்கின்றது திருத்தொண்டர் புராணம்.

நின்ற குருதியைக் கண்டு நெஞ்சம் தழைத்த திண்ணன் மீண்டும் துணுக்குற, இறைவனது மற்றொரு கண்ணினின்றும் செந்நீர் பெருகிற்று. "கண் நோய்க்குக் கைகண்ட மருந்து உண்டு" என்று கவலை தீர்ந்த திண்ணன் தன் கண்களில் எஞ்சி நின்ற ஒன்றையும் இடந்து அப்பத் துணிந்து அம்பின் முனையைக் கண்ணில் ஊன்றினான். அதுகண்டு தரியாத ஆண்டவன் திண்ணன் கையைப் பற்றி "நில்லு கண்ணப்ப" என்று திருவாய் மலர்ந்து பேரின்ப நிலையளித்தார் என்பது வரலாறு.

அன்று முதல் காளத்தி மலைக்குச் சென்றோர் எல்லாம் கண்ணப்பனது செயற்கரிய செய்கையை நினைந்து கண்ணீர் பெருக்கினர். சிவநெறியின் புண்ணியக் கண் என விளங்கிய திருஞான சம்பந்தர் திருக்காளத்தி நாதனை வழிபடச் சென்றபோது கண்ணப்பன் பெருமையை எண்ணிக் கசிந்துருகிப் பாடினார்.

"வேயனைய தோளுமையோர் பாகமது
வாகவிடை யேறிசடைமேல்
தூயமதி சூடி,சுடு காடினடம்
ஆடிமலை தன்னைவினவில்
வாய்கலச மாகவழி பாடுசெயும்
வேடன்மல ராகுநயனம்
காய்கணையி னாலிடந்து ஈசனடி
கூடுகா ளத்திமலையே"

(வேய்—மூங்கில்; கணை—அம்பு; இடந்து—பெயர்த்து.)

என்னும் திருப்பாட்டில், வாயாலே தூய நீராட்டி, கண்மலரால் வழிபட்ட கண்ணப்பன் பெருமை பேசப்படுகின்றது.


திருவாசகம் அருளிய மணிவாசகரும் காளத்தி மலையைத் திசைநோக்கித் தொழுதார்; கண்ணப்பனுக்கு நிகரான அன்பன் ஒருவன் முன்னும் இல்லை; பின்னும் இல்லை. அன்பின் எல்லை கண்ட பெருமான் அவன் என்று வாயாரப் போற்றினார்:

"கண்ணப்பன் ஒப்பதோர்
அன்பின்மை கண்டபின்
என்அப்பன் என்ஒப்பில்
என்னையும்ஆட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை
வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே
சென்றூதாய் கோத்தும்பீ"

(பணித்து-கட்டளையிட்டு: சுண்ணம்-வாசப்பொடி: கோத்தும்பி-அரச வண்டு)

என்று பாடினார். கண்ணப்பனது அன்பின் சுவை கண்ட ஈசன் கடையவனாகிய என்னையும் ஆட்கொண்டானே! அன்பற்ற என்னையும் 'வருக' என்று அருள் செய்தானே!-என்று வாயார வியந்து போற்றினார் மாணிக்க வாசகர்.


உன்னத
உழைப்பிற்கும்
உறுதிக்கும்
ஹெர்குலிஸ்
இந்தியாவில் தயாரிப்பவர்கள்
டி. ஐ. சைக்கிள்ஸ் ஆப் இந்தியா லிட், மதராஸ்,
எல்லா பிரதான வியாபாரிகளிடமும் கிடைக்கும்
EP


உங்கள் வீட்டிலுள்ள பித்
தளை செம்புகளினால்
செய்யப்பட்ட சாமான்
களின் அழகு, அவைக
ளின் வடிவங்களில் மட்
டுமல்லாமல் பளபளப்
பிலும் முக்கியத்வம்
பொருந்தியிருக்கிறது.
இந்தப் பளபளப்பை,
சுலபமாகவும், விரை
வாகவும், சிக்கனமாக
வும் பிராஸோ மெட்டல்
பாலிஷினால் அவைக
ளுக்குக் கொடுங்கள்.
உங்கள் வீட்டில் ஒப்
பற்ற பிராஸோ பளபள
ப்பைக் கண்டு நீங்கள்
பெருமைப்படுவீர்கள்.
பிராஸோ
மெட்டல் பாலிஷ்
BRASSO
திரவம் அல்லது பேஸ்ட்

அத்தியாயம் 48

அணை இடிந்தது

நாங்கள் வெகு நாட்களுக்குப் பிறகு சந்தித்தோம். அவரிடம் சொல்ல எத்தனையோ விஷயங்கள் இருந்தன. எதைச் சொல்லுவதென்று தெரியாமல் திணறினேன் நான். இவைகளுக்கும் அடியில் ஒரு நடுக்கம் இருந்து கொண்டேதான் இருந்தது.

"இந்து! ஏதோ முக்கியமான சமாசாரம் சொல்ல ஆரம்பித்தாயே?" என்று நினைவூட்டினார் ரங்கதுரை.

"ஆமாம்! எனக்கு அதைப் பற்றி நினைக்கவே பயமாக இருக்கிறது."

"எதுவாக இருந்தாலும் என்னிடம் சொல்லு, இந்து. மனத்திலுள்ள பாரத்தைப் பிரியமானவர்களிடம் சொல்வதனால் ஓரளவுக்காவது குறைத்துக்கொள்ள முடியும்" என்றார் அவர்.

அதன் பிறகு நான் ஒரு சிறுவன் வந்து என்னிடம் கடிதத்தைக் கொடுத்ததையும், அதை நம்பி நான் பாதிரித் தோட்டத்துக்கு ஓடினதையும், அங்கு நடந்த விஷயங்களையும் விவரமாகக் கூறினேன். ரங்கதுரை மிகுந்த கவலையுடன் துருவித் துருவிக் கேள்விகள் கேட்டு விவரங்களை வெகு நன்றாகப் புரிந்துகொண்டார். அவருடைய கண்களில் பிரதிபலித்த கவலைக் குறி என் பயத்தை அதிகப் படுத்தியது. ஆனால் ராஜாராமைப் பற்றி மட்டும் நான் ஒன்றும் சொல்லவில்லை. அவர் எனக்குச் செய்திருந்த உதவிகளினால் என் மனம் அவர் விஷயத்தில் ரொம்ப மாறிப் போயிருந்தது. மனப்பூர்வமாக எனக்கு நன்மை செய்தவரைப் பற்றிக் குற்றம் சொல்வதற்கு மனம் வரவில்லை. மேலும் அது என்னுடைய ஊகம்தானே? பின்னால் சொல்லிக் கொள்ளலாம் என்று நினைத்தேன்.





"நான் இப்படிப்பட்ட கொலைக் குற்றம் ஒன்றில் சம்பந்தப்பட்டிருக்கிறேன். பத்மநாபனுக்கு என் மீது ரொம்ப ஆத்திரம் இருக்கக் காரணமிருக்கிறது. அவருடைய விஷயம் எனக்குத் தெரியும் என்பதும் அவருக்குத் தெரிந்த விஷயந்தான். போதாததற்கு அவருடைய பெண்ணை மணந்து கொள்வதாக வேறு நீங்கள் சொல்லி யிருக்கிறீர்கள்......"

ரங்கதுரை குறுக்கே பேசினார்: "இந்து! உன்னிடம் நான் அப்படிச் சொன்னேனா? யார்......?"

"கொஞ்சம் இருங்கள். நான் சொல்வதை முழுதும் கேட்டு விட்டுப் பிறகு உங்கள் கட்சியைப் பேசுங்கள். சுலோசனாவை விட்டு விட்டு என்னை நீங்கள் மணந்து கொண்டால் பத்மநாபன் சும்மா பார்த்துக் கொண்டிருக்க மாட்டார். என் மீது இருக்கும் ஆத்திரத்தினால் பழிவாங்க நினைப்பார். போதாததற்கு ஈசுவரமூர்த்தி வேறு என் வாழ்க்கையை நாசமாக்கக் காத்துக் கொண்டிருக்கிறார். அவர்கள் இருவரும் ஏமாந்தால் சும்மா இருக்க மாட்டார்கள். நெருப்பும் காற்றும் சேர்ந்து அழிக்கத் தொடங்குவதுபோல் நம்மை அழித்து விடுவார்கள். இதைத் தெரிந்து கொண்டிருந்தும் நான் உங்களை மணக்கச் சம்மதிக்க முடியுமா? சுலோசனாவை நீங்கள் மணந்து கொண்டால் சுகமாக வாழ்வீர்கள். நான் உங்களைப் பார்த்து மகிழ்வேன்.."

"இந்துமதி! போதும், நிறுத்து! என் பொறுமையைச் சோதிக்கப் பார்க்கிறாயா? சோதனை போதும். நான் சுலோசனாவை மணந்து கொள்வதாகச் சொல்லி யிருப்பதாக யார் சொன்னார்கள் உனக்கு?"

"ஈசுவர மூர்த்தி அன்று என்னைப் பிடித்துக் கொண்டு போனாரே, அப்போது சொன்னார்."

"அந்தப் பாதகன் மீது நான் வழக்குப் போட்டுத் தண்டனை விதிக்கப் போகிறேன். சும்மா விடப் போவதில்லை. ஆனால் இவர்களுக்கெல்லாம் மனிதர்கள் கொடுக்கும் தண்டனையால் பயனில்லை. இறைவன்தான் தண்டனை கொடுத்து மனத்தை மாற்றிப் பரிசுத்தமானவர்களாக மாற்ற வேண்டும்."

"இந்த ஜன்மத்தில் அவர்கள் திருந்த மாட்டார்கள். அதைப் பற்றிப் பேசுவதில் என்ன பயன்?"


"அது இருக்கட்டும், இந்து! நான் நிஜமாகவே சுலோசனாவை மணந்து கொள்வதாகச் சொல்லி யிருப்பேனென்று நீ நம்புகிறாயா? ஈசுவரமூர்த்தி சொன்னதிலிருந்து ஒரு விஷயத்தை நீ நம்பலாமா?"

"ஈசுவர மூர்த்தி என்னை ஏமாற்றலாம். ஆனால் என் கண்கள் என்னை ஏமாற்ற முடியாதே. நீங்களும் அவளுமாகச் சினிமா பார்க்க வந்திருந்தீர்களல்லவா? அன்று அவள் உங்களைப் பார்த்துச் சிரித்ததும், நீங்கள் அவளுக்கு ஏதோ வாங்கிக் கொண்டு வந்து

கொடுத்ததும், அவள் அருகில் நீங்கள் உட்கார்ந்ததும் எனக்கு மறக்க மாட்டேன் என்கிறதே."

"இதுதான் பெண் புத்தி என்பது. ஒரு பெண்ணுடன் பேசினாலே தவறா?"

"உண்மையாகச் சொல்லுங்கள். சுலோசனாவை மணந்து கொள்ள வேண்டுமென்று உங்களுக்குத்தோன்றவே இல்லையா? பாம்பின் கால் பாம்புக்குத் தெரியும். சுலோசனா உங்களை நேசிக்கிறாள் என்பதை அவள் உங்களைப்பார்த்த பார்வையிலிருந்து நான் அறிந்து கொண்டு விட்டேன். அதைத் தவறென்று சொல்லவில்லை. எனக்குத்தான் காதலிக்க உரிமையா? அவளுக்குக் கிடையாதா? உங்களைப் போன்ற உத்தமரைக் கணவனாக அடைய யாருக்குத்தான் விருப்பமிருக்காது? எங்களில் யாராவது ஒருவர் விட்டுக் கொடுத்துத் தானே ஆகவேண்டும்? இரண்டு பேரில் யாரை மணந்து கொண்டால் உங்களுக்கு நன்மை என்று நான் யோசித்துப் பார்த்தேன். என்னால் உங்களுக்குத் தீமைதான் அதிகம் வரும். உங்கள் பதவிக்கும் ஆபத்து வரும். ஒரு நீதிபதியின் மனைவி கொலைக் குற்றத்தில் சம்பந்தப்பட்டவள் என்றாலே ரொம்ப அவமானமில்லையா?"



"இந்துமதி! இந்தமாதிரி நீ பேசுவதைக் கேட்கும்போது என் உள்ளம் பூரிக்கிறது. இவ்வளவு தூரம் தன் நலத்தைத் தியாகம்செய்ய நினைப்பவர்களை இந்தக் காலத்தில் காண முடியாது. உன் மாதிரி நினைக்க ஒரு இந்தியப் பெண்ணால்தான் முடியும். ஆனால் உன் உள் அந்தரங்கத்தில் ஒரு இடத்தில் உனக்கு, 'இப்படி நடக்கக் கூடாது. அவர் என்னைத் தான் மணந்து கொள்ள வேண்டும்' என்ற குரல் கேட்கவில்லையா?"

நான் பதில்சொல்லத் தயங்கினேன்.

"இந்து! நீ சொன்னதில் ஒரு பாதி உண்மை. சுலோசனா என்னை விரும்புகிறாள் என்பது நிஜம். ஆனால் அதற்கு நான் ஒரு போதும் தூண்டுதலாக இருந்ததில்லை. அவள் தந்தை, அண்ணா, அம்மா எல்லோரும் அவளைத் தூண்டுகிறார்கள் என்று நினைக்கிறேன். அதற்கு நான் எவ்வாறு பொறுப்பாளியாக முடியும்? ஆனால் பத்மநாபன் நீ சொன்ன மாதிரி இவ்வளவு மோசமான மனிதரென்று நான் நினைக்கவில்லை. ரமேஷ் தங்கமான குணமுடையவன். அவன் என்னைத் தன் தங்கையின் கணவனாகப் பார்க்க ஆசைப்படுகிறான். அதற்கு நான் என்ன செய்வது? அவர்கள் ஒருநாள் மிகவும் வற்புறுத்தியதால் சுலோசனாவைப் படத்துக்கு அழைத்துக் கொண்டு போனேன். ரமேஷ் காரில் வந்தான். அவனும் வருகிறானென்று நினைத்துக்கொண்டிருந்தேன். நாங்கள் இறங்கியதும் அவன் போய்விட்டான். அதன் பிறகு என்ன செய்வது?"

"உங்களை நான் எதற்கும் சமாதானம் கேட்கவில்லை என்பதைத்தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள். ஆனால் ஒரு விஷயம் எனக்கு வியப்பாக இருக்

கிறது. சுலோசனாவிடம் நான் என் மனத்தைத் திறந்து எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறேன். உங்கள் பெயரைக் கூடச் சொல்லியிருக்கிறேன். உங்களைப் பற்றித் தெரிந்ததும் அவள் ஏன் என்னைப் பற்றி உங்களிடம் சொல்லவில்லை என்று அதிசயமாக இருக்கிறது."

"நான்தான் 'ராய்' என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கிறேனே, இந்து. கல்கத்தாவில் நாங்கள் சந்தித்த போது என்னை அவர்கள் ஒரு வங்காளி என்றே கொஞ்ச நாட்கள் நினைத்துக் கொண்டிருந்தார்கள். சுலோசனாவுக்கு என் முழுப் பெயர் என்னவென்று இன்னும் தெரியாது என்று நினைக்கிறேன். இப்போது சுலோசனா இங்கு இல்லை. கல்கத்தாவில் வேலையாக இருக்கிறாள். அது தெரியுமா உனக்கு?"

"தெரியாது. அவளுக்கென்ன? கெட்டிக்காரி. அதோடு அதிர்ஷ்டசாலி" என்று கூறினேன். எனக்கு ஏனோ தொண்டையை அடைத்தது.

ரங்கதுரை இன்னும் சற்று நெருங்கி உட்கார்ந்தார். என் கைகள் இரண்டையும் தம் கையில் எடுத்து வைத்துக் கொண்டார்.

"இந்து! உன்னிடம் நான் வைத்த பரிசுத்தமான அன்பு சிறிதும் குறையவே இல்லை. உன் அன்னைக்கு நான் கொடுத்த வாக்குறுதிக்காக மட்டும் அல்ல. என் மனமே உன்னை மறக்க விடவில்லை. என் அன்பு ஸ்படிகம் போன்றது. தூய்மையானது. இதை நீ நம்பமாட்டாயா, இந்து?" என்று கேட்டார் ரங்கதுரை.

அந்தச் சமயத்தில் வாசலில் ஒரு கார் வந்துநின்ற சப்தம் கேட்டது. மாடி வராண்டாவுக்குச் சென்று, வருகிறது யார் என்று எட்டிப் பார்த்தேன். காரிலிருந்து இறங்கியவரைப் பார்த்ததும் நான் அப்படியே கல்லாகச் சமைந்து போனேன்.

காரிலிருந்து இறங்கியவர் வேறு யாருமில்லை. என்னை ஒரு கணமும் நிம்மதியாக இருக்க விடாத ஈசுவரமூர்த்திதான். என் பின்னாலேயே வந்து நின்ற ரங்கதுரையும் அவரைப் பார்த்தார். நான் திக்பிரமை அடைந்து நிற்பதைப் பார்த்து விட்டுப் புன்னகையுடன் கையைப்பிடித்து அறைக்குள் அழைத்துக் கொண்டு வந்தார். என்னை ஒரு நாற்காலியில் உட்கார வைத்து விட்டு, "ஏன், இந்து! இப்படிப் பயப்படுகிறாய்? நான் இருக்கும் போது உனக்கு என்ன பயம்?" என்று கேட்டார்.

எனக்கு நான் ரயிலில் கண்ட பயங்கரமான கனவு நினைவுக்கு வந்தது. "உங்களை என்னோடு அவர் பார்த்தால் ஏதேனும் விபரீதம்தான் ஏற்படும்" என்றேன்.

"நீ எதற்கும் பயப்படாதே. அவரிடம் சாதாரணமாகப் பேசு. மீதி விஷயங்களை நான் பார்த்துக் கொள்கிறேன். அமைதியாகப் பேசு. நாம் பயப்படுவதாகக் காட்டிக் கொள்ளவே கூடாது" என்றார். அதன் பிறகு எனக்கும் சற்று மன அமைதி உண்டாயிற்று.

இரண்டு நிமிஷங்களில் ஈசுவரமூர்த்தி மேலே வந்தார். வந்தவர் ரங்கதுரையைப் பார்த்ததும் ஒரு கணம் நின்றார். அவரை இந்த இடத்தில் எதிர்பார்க்கவில்லை போலும்! பிறகு உள்ளே வந்தார். அவருடைய உள்ளத்தில் எரிந்து கொண்டிருக்கும் குரோதம் முகத்திலும் பிரதிபலித்ததாக எனக்குத் தோன்றியது.

ரங்கதுரை அவரைப் பார்த்துக் கூப்பிய கரத்துடன், "வாருங்கள்!" என்று வரவேற்றார்.

அதை ஈசுவரமூர்த்தி பொருட்படுத்தினதாக எனக்குத் தெரியவில்லை. நான் வேதனையுடன் தலையைக் குனிந்து கொண்டு உட்கார்ந்திருந்தேன்.

"சௌக்கியமா, இந்துமதி?" என்று கேட்டார் ஈசுவரமூர்த்தி.

"சௌக்கியம்தான்!" என்றேன். ரங்கதுரையைப் பார்த்தேன். அவர் சிறிதும் சலனமில்லாமல் நிமிர்ந்து உட்கார்ந்திருந்தார்.

பிறகு ஈசுவரமூர்த்தி, "உங்களை இங்கே எதிர்பார்க்கவில்லை" என்று ரங்கதுரையைப் பார்த்துக் கூறினார்.

"வாஸ்தவம்தான்" என்று பதிலளித்தார் ரங்கதுரை.

அதன் பிறகு யாருக்கும் ஒன்றும் பேச வரவில்லை. அறையில் நிசப்தம் நிலவியது. ராஜாராம் எங்கே தொலைந்து போய் விட்டார்? அவர் இருந்தால் ஏதேனும் பேசிச் சமாளிப்பாரே என்று நான் எண்ணினேன்.

நிரூபணம்!



சாதாரணமான எளிய
பரீக்ஷைகளிலும் கூட

புதிய

'ஆஸ்ப்ரோ'

வலி, ஜுரம் இவற்றினின்று

துரிதமாயும், அபாயமின்றியும் நிவாரணம் அளிக்கின்றது

என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது

சிறந்தபாக்கிங்-நிறைந்தபாதுகாப்பு

புதிய 'ஆஸ்ப்ரோ'வுடன் கூடிய காகிதத் துண்டை ஜலத்திலிட்டு, எவ்வளவு நேரம் வேண்டுமாயினும் வைத்திருங்கள். பிறகு அத்துண்டைப் பிரித்து வில்லைகளைப் பரிசோதியுங்கள்—அவைகள் கெடாமலும், சுத்தமாயும், ஈரமில்லாமலும் இருக்கக் காண்பீர்கள்.



பரீக்ஷை 1

ஒவ்வொரு புதிய 'ஆஸ்ப்ரோ'வும், காற்று மற்றும் ஈரம் படாமல் தனித் தனியே ஸீல் செய்யப்பட்டிருப்பதனால், உதிரி வில்லைகளால் ஏற்படும் வயிற்றைப் பாதிக்கும் அமிலங்கள் சேர்வதினின்றும் பாதுகாக்கிறது.


துரிதமான வேலை - அதி சீக்கிர நிவாரணம்

இரண்டு புதிய 'ஆஸ்ப்ரோ' வில்லைகளை ஒரு கிளாஸ் ஜலத்திலிடவும். அவை நொடியில் ஜலத்தில் கரைந்து மென்மையான தூளாய் விடுகின்றன. இச்சிறந்த செய்முறை வழிக்கு எமது நன்றி. இதே மாதிரிதான் புதிய 'ஆஸ்ப்ரோ'வும் உங்கள் தேகத்திற்குள் க்ஷணத்தில் வேலை செய்ய ஆரம்பிக்கிறது.



பரீக்ஷை 2

புதிய 'ஆஸ்ப்ரோ' அதைப்போலுள்ள மற்றெவ்விதமான வில்லைகளைக் காட்டிலும் வேகமாகக் கரைகிறது, என்பதை ரசாயனசாலைப் பரீக்ஷைகள் நிரூபித்துள்ளன. புதிய 'ஆஸ்ப்ரோ'வில் துர்ப்பழக்கம் உண்டாக்கும் மருந்துகள் எதுவும் சேர்க்கப்படவில்லை, அன்றியும் அது இருதயத்தையோ வயிற்றையோ பாதிக்காது.



கைக்கடக்கமான மூன்று வில்லைகளடங்கிய
பாக்கெட் விலை 2 அணா
30 வில்லைகள் கொண்ட குடும்ப சைஸ் ரூ. 1/2

279

விநியோகஸ்தர்கள்: முல்லர் அண்டு பிப்ஸ் (இந்தியா) லிமிடெட்,
பம்பாய், கல்கத்தா, மதராஸ், டில்லி.

சில நிமிஷ மௌனத்துக்குப் பிறகு ஈசுவரமூர்த்தி, "நீ நடித்திருக்கும் புதிய படத்தைப்பார்த்தேன். ரொம்ப நன்றாக இருக்கிறது. உன்னைப் பாராட்டுவதற்காக வந்தேன்! அவரும் அதற்குத்தான் வந்திருக்கிறாரோ?" என்றார்.

என் ஆத்திரத்தை அநாவசியமாகக் கிளப்பினார். "உங்கள் பாராட்டுதல் எனக்குத் தேவையில்லை" என்று கூறி விட்டேன்.

"ரங்கதுரையினுடையது மாத்திரம் வேண்டுமாக்கும்?"

ரங்கதுரையின் முக பாவம் சடாரென்று மாறிற்று. "அதைப் பற்றி நீங்கள் கேட்க வேண்டிய அவசியமில்லை, மிஸ்டர் ஈசுவரமூர்த்தி!" என்றார் கோபத்துடன்.

"ஓகோ! நான் கேட்க வேண்டியதில்லையாக்கும்? பின் யார் கேட்பது? நானும் இவளுடைய தந்தையும் நெருங்கிய நண்பர்கள் என்பது உமக்குத் தெரியுமா? பத்மநாபன்தான் இவளுக்குக் கார்டியன் என்பதும் இவள் அவரிடமிருந்து ஓடிப்போய்ச் சினிமாவில் சேர்ந்து விட்டாளென்பதும் உங்களுக்குத் தெரியுமா? இவளை இப்படிப் புத்தி தடுமாறச் செய்தவன் அந்த ராஜாராம் என்பது உங்களுக்குத் தெரியுமா? நான் கேட்காமல் யார் கேட்பது?" என்று அடுக்கினார் ஈசுவரமூர்த்தி.

என்னால் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளவே முடியவில்லை. "அவருக்கு அதுவும் தெரியும். இன்னும் கொஞ்சம் அதிகமாகவும் தெரியும். என் தந்தை எழுதிவைத்த வீட்டைப் பத்மநாபன் விற்றது தெரியும். என் பணத்தை என்னிடம் கொடுக்கவில்லை என்று தெரியும். என் இஷ்டத்துக்கு விரோதமாகக் கல்யாணம் செய்து கொடுக்க நினைத்ததும் அவருக்குத் தெரியும்......" என்று பேசிக் கொண்டே போனேன்.

"இந்து!" என்று ரங்கதுரை என்னை அழைத்தார். அந்த இனிமையான குரலில், 'அளவுக்கு மீறிப் பேசாதே அம்மா!' என்ற எச்சரிக்கை இருந்தது.

"மிஸ்டர், ரங்கதுரை! நீங்களே கேளுங்கள். இவள் பணத்தைப் பத்மநாபன் பத்திரமாக வைத்திருப்பது தவறு. இவளைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க நினைத்தது தவறு. ஆனால் இவள் வீட்டை விட்டு ஓடிப்போய்ச் சினிமாவில் சேர்வது ரொம்ப சரியான காரியம், இல்லையா?" என்றார்.

ரங்கதுரைக்கே இப்போது கோபம் வந்தது. "மிஸ்டர் ஈசுவரமூர்த்தி! அநாவசியமாக யாருமே பேச வேண்டாம். ஒரு பெண்மணியிடம் இப்படிப் பேசுவது நன்றாக இருக்கிறதா?" என்று கேட்டார்.

"நல்ல பெண்! சொக்கையாவைக் கொன்று விட்டு ஒன்றுந் தெரியாத மாதிரி வேஷம் போடுவது ஒருவருக்கும் தெரியாதென்று நினைத்துக் கொண்டிருக்கிறாள்" என்று குரோதம் முகத்தில் தாண்டவமாடக் கூறினார் ஈசுவரமூர்த்தி.

நான் நிலை கலங்கிப் போனேன்.

"ஐயோ, என்ன அபாண்டம்!" என்று கத்தினேன். என் கால்கள் தள்ளாடின. ரங்கதுரை எழுந்து வந்து என் அருகில் நின்று கொண்டார்.

ஈசுவரமூர்த்தி ஒரு சிரிப்புச் சிரித்து விட்டு, "நடக்கட்டும்! நடக்கட்டும்! உங்கள் நாடகம் நடக்கட்டும். ஆனால் ஒன்று மட்டும் நினைவு வைத்துக் கொள், இந்துமதி. என் இஷ்டப்படி நடக்காதவர் யாரும் இங்கே உருப்பட்டதில்லை. இதை மறந்துவிடாதே!" என்று சொல்லி விட்டு எழுந்து விறுவிறுவென்று இறங்கிச் சென்றார். அவர் தலை மறையும் வரை அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். ரங்கதுரை என் அருகில் நின்று கொண்டிருந்தார். ஈசுவரமூர்த்தி போனபிறகு என் உடல் முழுதும் ஒரு நடுக்கம் உண்டாயிற்று. அந்த உணர்ச்சி, பயமா, துயரமா என்பதையெல்லாம் என்னால் விவரிக்க முடியாது. ஆனால் என்னால் நிற்க முடியவில்லை. என்னுடைய கட்டிலின் மேல் தடாலென்று விழுந்தேன்.

ரங்கதுரை நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார்.

"எதற்காக இந்து இவ்வளவு பதட்டமடைகிறாய்?" என்றார்.

"உங்களுக்கு அவர் விஷயம் தெரியாது. என் தந்தைமீது அவருக்குப் பலகாரணங்களால் குரோதம்கொதித்துக் கொண்டிருக்கிறது. முன்பே என்

வாழ்வைக் கெடுக்கப் பார்த்தார். மேலும் இவர் என்னைப் பயமுறுத்திக் கொண்டிருந்த போது என் தந்தை என்னைக் காப்பாற்றி விட்டார். இப்போது உங்களையும் அவர்களுடைய காரியங்களுக்குப் பயன் படாதபடி நான் செய்து விட்டேன். என்மீது அவருக்கு இப்போது எவ்வளவு ஆத்திரம் பொங்கிக் கொண்டுவரும்? என்னவெல்லாம் செய்யப் போகிருரோ?"

"இந்து! மனத்தை இப்படி அலட்டிக் கொள்ளாதே, அம்மா! நான் இப்போதே போய் அவர் என்ன செய்கிருரென்று பார்த்து விட்டு வருகிறேன்" என்று எழுந்தார்.

நான் அவருடைய கையைச் சடாரென்று பிடித்துக் கொண்டேன். "நீங்கள் என்னை விட்டு விட்டுப் போகாதீர்கள்" என்று விம்மினேன்.

"அடே! அசடே! எங்கே போய் விடப் போகிறேன், இந்து? உடனே வந்து விடுகிறேன்."


"இல்லை! நீங்கள் போகக் கூடாது. நீங்கள் இப்போது போனல் திரும்பி என்னிடம் வரவே மாட்டீர்களென்று எனக்குத் தோன்றுகிறது. வேண்டாம். தயவுசெய்து போகாதீர்கள்!" என்று கதறினேன்.

"நான் போகவில்லை, இந்து! நீ கவலைப்படாதே. உனக்கு உடம்பே சரியாக இல்லை. நீ படுத்துக் கொண்டு தூங்கு. நான் உன் பக்கத்திலேயே உட்கார்ந்திருக்கிறேன்" என்று பரிவுடன் கூறிவிட்டு நாற்காலியில் மறுபடியும் உட்கார்ந்தார். பயந்து போய் அழும் பச்சிளங் குழந்தையைத் தாய் சமாதானப் படுத்துவதுபோல் அவருடைய பேச்சிலும் குரலிலும் அன்பு ததும்பி வழிந்தது.

ரங்கதுரையிடம் நான் வைத்திருந்த கரைகாணுத அன்பு,— பிடிவாதம், பொறுமை, ஆத்திரம் என்னும் வஸ்துக்களால் அணை போட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. அந்த மகத்

ஹாஸ்யக் களஞ்சியம்









தான வேகத்தைத் தடுத்து நிறுத்திக் கொண்டிருந்த அணையில் ஒரு சிறிய பிளவு ஏற்பட்டவுடன் அந்த அன்புப் பிரவாகம் அணைகளைப் புரட்டித்தள்ளி விட்டது. அது பாய்ந்த வேகத்தை என்னாலேயே தாங்க முடியவில்லை. அவரைப் பார்க்காமலேயே இருந்த போது பிரிவைப் பொறுத்துக்கொள்ள முடிந்தது. ஆனால் ஒரு தரம் பார்த்த பிறகு, ஒரு தடவை மன எழுச்சிக்கு இடங் கொடுத்த பிறகு, ஒரு தரம் என் உள்ளத்தை அவருக்குத் திறந்து காட்டிய பிறகு, என்னால் அதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அவரைப் பிரிந்து ஒரு கணமும் இருக்க முடியாதென்று தோன்றியது.

அவர் தாம் போக வில்லை என்று கூறிய பிறகு மனம் சற்று நிதானமடைந்தது. எனினும் என் கைகளை அவர் கைகளிலிருந்து விடுவித்துக் கொள்ள மனம் வரவில்லை. மறுபடியும் இந்தமாதிரி சந்தர்ப்பம் என் வாழ்நாளில் கிடைக்காமலேயே போய்விடலாம் என்று தோன்றியது. பேச வேண்டுமென்று தோன்றுவதையெல்லாம் இன்றே பேசித் தீர்த்து விட வேண்டுமென்று தோன்றியது.

"உங்கள் நினைவினால் என் இதயம் எப்படி உருகி உருகிக் கரைந்திருக்கிறது, தெரியுமா? உங்களை நினைக்கும்போதெல்லாம் என் உடலெல்லாம் எப்படிப் பதறியிருக்கிறதென்று உங்களுக்குத் தெரியுமா? எவ்வளவு இரவுகள் தூக்கம் வராமல் தவித்திருக்கிறேன். சினிமாவில் நடித்து அதனால் பெயரும் புகழும் அடைந்த போதும் எனக்கு மன அமைதி சிறிதும் கிடைக்கவில்லை என்பதை நீங்கள் அறிவீர்களா? உங்களுக்காகவே என் இதயம் துடித்துக் கொண்டிருக்கிறதென்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று கூறிச் சற்று நிறுத்தினேன்.

"இந்து! நான் மாத்திரம் சந்தோஷமாக இருந்தேன் என்று நீ







நினைக்கிறாயா? நான் சீமையிலிருந்த போதும் உன்னை மறந்ததில்லை. இங்கு வந்த பிறகும் மறக்கவில்லை. சீமையிலிருந்து நான் எழுதிய பல கடிதங்களுக்கு உன்னிடமிருந்து கடிதமே வரவில்லை. அப்போதெல்லாம் நான் எவ்வளவு கவலையும், துயரமும் அடைந்தேன் என்பது உனக்கு எப்படித் தெரியும்? தூர தேசத்தில், மனம் விட்டுப் பழகி என் கவலைகளைச் சொல்லிக் கொள்ளக் கூடிய மனிதர்கள் யாரும் இல்லாத இடத்தில், அது எவ்வளவு வேதனையாக இருந்திருக்க வேண்டுமென்று நீயே தெரிந்து கொள். ஆனால் எனக்கு அப்போதே ஒன்று தெரிந்திருந்தது. கடிதம் வராதது இந்துவின் தவறு அல்ல; இதில் ஏதோ வேறு சூழ்ச்சி இருக்கிறது என்று நினைத்துக் கொள்வேன்.

"இங்கு வந்த பிறகுகூடக் குங்குமத் துறைக்குச் சென்று உன்னைத் தேடினேன். தங்கபாண்டியனுடைய ஜமீன் மானேஜர் உன் தந்தை மந்திரமூர்த்தி காலமாகி விட்டதாகவும், நீ யாரோ வக்கீலுடன் அந்த ஊரை விட்டுப் போய் விட்டாய் என்பதாகவும் மட்டும்தான் சொன்னார். மற்றப்படி அவருக்கு ஒன்றும் தெரியவில்லை. நான் உடைந்த உள்ளத்துடன் கல்கத்தாவுக்குப் போய் வேலை ஒப்புக் கொண்டேன். வங்காளத்தில் இருந்தபோது தினந்தோறும் 'சீமையிலிருக்கும் போதெல்லாம், இந்தியாவுக்குத் திரும்பிச் சென்றவுடன் என் இந்துவைத் தேடிப் பிடித்து மணந்து கொண்டு விடுவேன். அதன் பிறகு எங்கே வேலை கிடைத்தாலும் இந்த மாதிரி தனிமையில் திண்டாட வேண்டாம். நமக்கு நிரந்தரமான துணை கிடைத்து விடுவாள் என்று நினைத்துக் கொள்வேன். இப்படி அவளைக் கண்டு பிடிக்கவே முடியவில்லையே' என்று ஏக்கமாக இருக்கும். நீ எங்கேயோ ஆபத்தில் மாட்டிக் கொண்டிருப்பது போலத் தோன்றி என்னைச் சித்திரவதை செய்யும்.

"'அமரதாரா என்ற தென்னிந்திய பிரபல நட்சத்திரம் ஒருவர் புதிய வீடு வாங்கியிருக்கிறார். அது 'இந்துமதி' என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது' என்று ஒரு நாள் ஒரு சினிமாப் பத்திரிகையில் தற்செயலாகப் பார்க்க நேரிட்டபோது என் நெஞ்சம் ஆனந்தத்தில் மிதந்தது. நீதான் அமரதாரா என்று என் உள்மனம் சொல்லிற்று. அமரதாராவின் போட்டோவுக்காக நான் கல்கத்தா நகரம் முழுவதும் தேடி அலைந்தேன். அப்பா! அதையெல்லாம் இப்போது உன்னிடம் எதற்காகச் சொல்ல வேண்டும்?" என்று சொல்லி நிறுத்தினார் ரங்கதுரை.

"சொல்லுங்கள். மேலே சொல்லுங்கள். பின் நான் எப்படி இதைப் பற்றியெல்லாம் தெரிந்துகொள்வது?"

"இந்து! இப்படியெல்லாம் சொன்னால் போதாது. நிதானமாகச் சொல்கிறேன். நீ உன் அப்பாவைப் பற்றிச் சொல்" என்றார் ரங்கதுரை.

நானும், நான் விஜயராமபட்டினம் சென்றது, சென்னை வந்தது, அப்பாவுக்கு ஆணி குத்தியது முதலியவற்றைச் சுருக்கமாகச் சொன்னேன். அப்பா கடைசியில், "இந்த உலகம் ரொம்பப் பொல்லாத உலகம். கிராதகர்கள் நிறைந்த உலகம். கடவுள்தான் உன்னைக் காக்க வேண்டும்" என்று கூறியதைச் சொன்னபோது ரங்கதுரையின் கண்கள் கலங்கின.

அதன் பிறகு நான், "நீங்கள் ஏன் நான் சினிமாவில் சேர்ந்து நடிகையானதைப் பற்றி ஒன்றுமே விசாரிக்கவில்லை?" என்று கேட்டேன்.

"இந்து! அதைக் கேட்க எனக்கு என்ன உரிமை இருக்கிறது? உன் அன்னையிடம் உன்னைக் கண்ணின் கருமணியாகப் பாதுகாப்பேன் என்று வாக்குறுதி கொடுத்தேன். உன்னை இங்கே தன்னந் தனியாக இந்த மனித உருக் கொண்ட ராக்ஷஸர்களுடன் போராட விட்டு விட்டு நான் சும்மாயிருந்து விட்டேன். நீ உன்னைக் காத்துக் கொள்ள உனக்கு வேண்டியதைச் செய்து கொண்டாய். அதைப் பற்றி நான் எப்படிக் கேட்கலாம்? நீயாகப் புகழடைந்தாய். உன் திறமை உனக்குப் புகழ் அளித்தது. பணமும் கிடைத்தது. அதைப் பற்றி நான் எப்படிக் கேட்பது?" என்றார் அவர்.

அந்தச் சமயத்தில் திடீரென்று ராஜாராம் உள்ளே பிரவேசித்தார். நான் சடாரென்று ரங்கதுரையின் கைகளில் இருந்து என் கைகளை விடுவித்துக் கொண்டேன். (தொடரும்)

சிங்கப்பூருக்கு

ஏயர்-இந்தியா இன்டர்நேஷனல் மூலம்
செல்லுங்கள்



துரிதமாயும், சுகமாயும் செல்லும்
கான்ஸ்டலேஷன்கள்

துரிதமாயும், சுகமாயும் செல்லும் ஏயர்-இந்தியா இன்டர்நேஷனல் ஸர்வீஸ் மூலம் 12 மணி அவகாசத்திற்கும் குறைந்த நேரத்தில் பம்பாயிலிருந்து சிங்கப்பூர் சேர்ந்து விடலாம். பிரயாண மார்க்கத்தில் குறுகிய ஒரு மணி நேரம் மதராஸில் நிற்கிறது. ருசிக்க சைவ சாப்பாடு, மற்றும் புலால் உணவு இலவசமாக வழங்கப்படுகிறது.

பிரதி வெள்ளிக்கிழமை: பம்பாய் - மதராஸ் - சிங்கப்பூர்

கீழ்நாடுகளுக்கு
ஏயர்-இந்தியா இன்டர்நேஷனல் மூலம்
பறந்து செல்லுங்கள்



ஏயர்-இந்தியா இன்டர்நேஷனல்

13-ஏ, மகாத்மா காந்தி ரோட், பங்களூர் கன்டோன்மென்ட், பங்களூர்
டெலிபோன்: 4158 & 4689

இந்தியா ஹவுஸ், திருச்சி ரோட், கோயம்பத்தூர்
டெலிபோன்: 849

ஜெமினி மான்ஷன்ஸ், 55, மௌண்ட் ரோட், மதராஸ்
டெலிபோன்: 86194

AII. 2079

தேவையானபோது ட்ரெமெக்ஸ் பால் உணவு கிடைக்குமா ?

குழந்தைகளுக்கு அடிக்கடி பால் உணவை மாற்றுவது அவர்களின் ஜீரணசக்தியைக் குறைக்கிறது. ஆகையால்தான் நீங்கள் குழந்தைகளுக்கு பால் உணவைக் கொடுக்க ஆரம்பிக்குமுன் கடைகளில் எக்காலத்தும் எங்கும் எளிதில் கிடைக்கக்கூடிய பால் உணவாகப் பார்த்து வாங்க வேண்டும். இது காரணம் பற்றியே நீங்கள் ட்ரெமெக்ஸ் பால் உணவையே கேட்டு வாங்கவேண்டும். ட்ரெமெக்ஸ் பால் உணவு ட்ரபர் கொலின் டெஸ்டெட் பாலினின்று தயார் செய்யப்பட்டது. ட்ரெமெக்ஸ் உங்கள் குழந்தைக்கு உயர்ந்த, நிர்பயமான பால் உணவு. எப்போதும் எங்கும் கிடைக்கும்.


ட்ரெமெக்ஸ் பால் உணவு


உங்கள் குழந்தைகளுக்கு ட்ரெமெக்ஸ் பால் உணவைக் கொடுத்து அவர்களது வளர்ச்சியைக் கவனியுங்கள்

தேரடி மண்டபம்

எங்கள் ஊரில் பிசாசு உலாவும் இடங்களாகச் சில இடங்களைக் குறிப்பிடுவார்கள். அவைகளெல்லாம் அந்தக் காலத்தில் அபாயப் பிரதேசங்கள். அவைகளில் முக்கியமான ஒரு இடம் சித்திரத் தேரடி. அங்கு சுற்றிக் கொண்டிருப்பதாகச் சொல்லிக் கொள்ளப்படும் தேரடியானின் மகிமை குறைந்ததற்குக் காரணம் ஊரெங்கும் மின்சார வெளிச்சம் ஏற்பட்டு ஜன நடமாட்டம் அதிகமாகி விட்டதுதான். தேரடியானின் மகத்துவம் மிக மிகக் குறைந்து விட்டாலும், அந்த இடம் எங்கே போய் விட்டது! தேரடியை ஒட்டினாற் போல் ஜீம்ப்புலமாக இருக்கும் மண்டபத்தடியில் ஒரு கொட்டகை. அதில் சுமார் இரண்டடி உயரமுள்ள கற்சிலை இருக்கிறது. கண், மூக்கு எதுவுமே தீர்க்கமாயிருக்காது. இரண்டு கைகளும் ஏதோ ஆயுதத்தைத் தாங்கியிருப்பது போலக் காட்சியளிக்கும். இதுதான் தேரடியானின் சிலை.


பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்னால் இரவு வேளைகளில் அங்கு ஒரு அகல் விளக்கு எரிந்து கொண்டிருக்கும். இப்பொழுதெல்லாம் அங்கு விளக்கு இல்லை. என்ன செய்வது! பேயாய் இருந்தாலும் கூடத் தன் விஷமத்தை உலகத்தில் சிறிது காட்டினால்தானே மனிதர் ஏதாவது செய்வார்கள்! முன்பெல்லாம் தேரடியானுக்கு வருடத்துக்கு ஒரு தடவை பெரிதாகப் பொங்கலிட்டுப் பிரமாதமாகப் பூசை செய்வார்கள்.





கி.ரா.கோபாலன்

ஊரில் அது ஒரு முக்கியமான பெரிய வீதியாக இருந்தாலும், கோயில் உற்சவ நாட்களைத் தவிர அந்த வழியாக இரவு ஒன்பது மணிக்கு மேல் யாரும் தனிமையாகச் செல்ல மாட்டார்கள். சாதாரண நாட்களில் அந்த இடத்துக்குத் தனியாகப் போனவர்கள் பட்ட அனுபவங்களையெல்லாம் பற்றி நான் கதை கதையாகக் கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால் நான் தேரடியானைப் பார்த்ததே கிடையாது. எப்படிப் பார்க்க முடியும்! விளக்கு வைத்த பின் தான் தேரடிப் பக்கம் போகக் கூடாது என்று என் பெற்றோர்கள் எச்சரிக்கை செய்த வண்ணம் இருந்தார்களே! ஆனால் இவ்வளவு நாட்களுக்குப் பிறகு, அதாவது பதினைந்து வருடங்களுக்குப்பிறகு நான் ஒரு நாள் தேரடியானைப் பார்க்கும்படியாக நேர்ந்து விட்டது.



நான் இரண்டாவது காட்சி சினிமா பார்த்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். இரவு மணி ஒன்று இருக்கும். தேரடி வழியாக வந்து கொண்டிருந்தேன். அதிக ஜன நடமாட்டம் இல்லை. நான் அதி வேகமாக நடந்து வந்து கொண்டிருக்கும் போது 'ராஜு' என்று குரல் கேட்டுத் திரும்பினேன். சிறிது தூரத்தில் என் பால்ய நண்பன் சாரங்கன் நின்று கொண்டிருந்தான். அவனைப் பார்த்து நெடு நாட்களாகி விட்டன. இப்பொழுது அவன் ஹைதராபாத்திலோ எங்கோ நல்ல உத்தியோகத்தில் இருப்பதாகக் கேள்விப்பட்டிருந்தேன். அந்த வேளையில் எதிர்பாராத வண்ணம் அவனைக்கண்டது எனக்கே ஆச்சரியமாக இருந்தது. "என்னப்பா சௌக்கியமா!" என்றேன்.

"சௌக்கியந்தான். நீ இப்பொழுது சன்னதித் தெருவில் இல்லையா!" என்று கேட்டுக் கொண்டே என்னோடு நடக்க ஆரம்பித்தான்.

"இல்லை. இப்பொழுது பேட்டைத் தெருவில் இருக்கிறேன்."

"பேட்டைத் தெருவிலா! ரொம்ப தூரமாயிற்றே! எனக்குத் தூக்கம் வரவில்லை. யாராவது பால்யத்தில் பழகியவர்களைப் பார்த்து அவர்களோடு நெடு நேரம் பேசி மனக் குறையைத் தீர்த்துக் கொள்ள வேணும் போலிருக்கிறது. நான் வேண்டுமானால் உன்னோடு உன் வீட்டு வரையில் வரட்டுமா!" என்று கேட்டான்.

"தாராளமாக வா. வீட்டுத் திண்ணையில் போய் உட்கார்ந்து நிம்மதியாக விடிய விடியப் பேசுவோம்" என்றேன்.

இருவரும் நடந்தோம். நான் ஊரில் பத்து வருடங்களுக்குள் ஏற்பட்ட மாறுதல்களைப் பற்றியும், இளமையில் நாங்கள் விளையாடியதைப் பற்றியும் சொல்லிக் கொண்டே வந்தேன். சாரங்கன் எல்லாவற்றுக்கும் 'உம்' போட்டுக் கேட்டுக் கொண்டு வந்தான்.

இருவரும் எங்கள் வீட்டுத் திண்ணையில் வந்து அமர்ந்தோம். "உனக்குத் தண்ணீர், வெற்றிலை, பாக்கு ஏதாவது வேண்டுமா!" என்று கேட்டுக் கொண்டே சாரங்கனின் முகத்தைப் பார்த்தேன்.

ஹா! அப்படியே திகைப்படைந்து விட்டேன். சிறிது தூரத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்த விளக்கின் ஒளி எங்கள் வீட்டு வரை பரவி இருந்ததால் அந்த முகத்தை நான் சரியாகப் பார்க்க முடிந்தது. அது சாரங்கனின் முகம் அல்ல. நல்ல கறுப்பு, பரட்டைத் தலை, கூரிய மீசை, குழிந்த கண்கள், பள்ளம் விழுந்து ஒட்டிப்போன கன்னங்கள், பார்ப்பதற்குப் பயங்கரமாகத்தானிருந்தது. எனக்குக் குலை நடுக்க மேற்பட்டது.

"பயப்படாதே. நான் சாரங்கனில்லை. ஆனால் அவனைப் போல் உனக்குச் சிநேகிதன்தான்" என்றான் அவன் பல்லை இளித்துக் கொண்டு.

"எனக்குச் சிநேகிதனா...! இப்படி ஒரு சிநேகிதன் எனக்கு இல்லையே!" என்றேன் நான் தடுமாற்றத்துடன்.

"உன்னோடு நான் பழகியதில்லை. ஆனால் பால்யத்தில் உன்னை நான் ரொம்பப் பார்த்திருக்கிறேன். உன்மீது எனக்கு ஒரு அலாதி அன்பு" என்றான் அவன்.

"எனக்கு ஒன்றும் புரியவில்லையே!"

"என் பெயரைச் சொன்னால் உனக்கு நினைவு வரும்."

"உன் பெயரென்ன......!"

"என் பெயரா......! தேரடியான்!"

"தேரடியானா......!"

நான் துள்ளிக் குதித்தேன்.

"நான்தான் ஆரம்பத்திலேயே உனக்குச் சொன்னேனே, பயப்படாதே என்று! உட்காரு" என்றான் அவன்.

நான் தயங்கினேன்.

"நான் பிசாசு என்று பயப்படுகிறாய், இல்லையா! உலகத்தில் துர் மரணம் எய்தியவர்களெல்லாம் ஆவியாகி மனிதர்களைக் கொல்வதென்றால் உலகத்தில் மனிதக் கூட்டத்தை விடப் பேய்க் கூட்டம்தான் அதிகமாக இருக்கும். எனக்கு யாரையும் கொல்ல வேண்டுமென்றோ இம்சிக்க வேண்டுமென்றோ எண்ணமில்லை. அப்படி நான் செய்யவுமில்லை. என்னை நினைத்துப் பீதி அடைந்து செத்தவர்களையெல்லாம் நான் கொன்றேன் என்று உலகம் பழி சாற்றுகிறது" என்றான் தேரடியான்.

எனக்கு அப்பொழுதுதான் நிமிர்ந்து உட்கார்ந்து அவன் முகத்தை நோக்கச் சிறிது தைரியம் ஏற்பட்டது.

மறுபடியும் தேரடியான் பேசத் தொடங்கினான்: "உன் சிறு வயதில், நீ சன்னதித் தெருவில் குடி இருந்தபோது பகல் வேளையில் உன் சிநேகிதர்களுடன் தேரடிக்கு விளையாட வருவாய். பார்த்திருக்கிறேன். உன் பெயர் ராஜு" என்று எனக்குத் தெரியும். நீ தேரடிக்கு வந்தபோதெல்லாம் அந்தத் தேரின் சிற்ப வேலைப்பாடுகளை எல்லாம் பார்த்து மகிழ்ந்து ருசித்துப் போவாய். ஒவ்வொரு பதுமையையும் கண்டு 'ஆஹா! ஆஹா' என்று சொல்லி உன் நண்பர்களை எல்லாம் கூப்பிட்டுக் காட்டுவாய். ஆனால் அவர்களுக்கெல்லாம் அவ்வளவு ரசிக உள்ளம் இல்லை. விளையாடுவதில் தான் அதிகப் பிரியம் இருக்கும். பதினைந்து வருடங்களுக்குப் பிறகு இப்பொழுது நீ ஒரு எழுத்தாளனாய் இருக்கிறாய் என்று கேள்விப் பட்டேன். நீ இப்படித்தான் ஆக முடியுமென்று பதினைந்து வருஷங்களுக்கு முன்னாலேயே நான் முடிவு கட்டி வைத்திருந்தேன். அந்தக் காலத்தில் நீ தேரிலுள்ள பதுமைகளை யெல்லாம் பார்த்துப் பார்த்துப் புகழும் போது எனக்கு எவ்வளவு பூரிப்பு ஏற்படும். அதனால் உன்மீது எனக்கு நாளுக்கு நாள் அன்பு பெருகியது" என்று சொல்லி நிறுத்தினான் தேரடியான்.



அவனுடைய உணர்ச்சி நிறைந்த வார்த்தைகளில் பிரமை அடைந்துபோய் நான் உட்கார்ந்திருந்தேன். "என்னுடைய கதை உனக்குத் தெரியுமா!" என்ற கேள்வியைப் போட்டு என் பிரமையைத் தெளிய வைத்தான் தேரடியான்.

"ஏதோ கொஞ்சம் தெரியும்...... அந்த அழகான தேரைச் சிருஷ்டித்தவன் நீதான் என்பார்கள். தேரைக் கட்டி முடித்த பிறகு ஒரு நாள் தேர்மேலிருந்து தவறிக் கீழே விழுந்து, நீ இறந்து விட்டதாகவும் கேள்விப்பட்டிருக்கிறேன். அதிலிருந்து பிசாசாக......" என்று சொல்லிக் கொண்டு வரும்போதே குறுக்கிட்டு, "ஆமாம்! என் ஆவி அந்தத் தேரடியில் சுற்றிக் கொண்டு தானிருக்கிறது. இருட்டில் அவ்வழி வரும் மனிதர்களை அறைந்து கொலை செய்வதற்காக அல்ல; நான் உளி கொண்டு அற்புதமாகச் செதுக்கிச் சிருஷ்டித்த சித்திரத் தேரைப் பாதுகாப்பதற்காக. என் வாழ்வின் முழு உழைப்பு அது. என் வாழ்வின் லட்சியம்.

"இருநூறு வருடங்களுக்கு முன்னால் நடந்தது. அதைப் பற்றித் தெரிந்தவர்கள் இப்பொழுது யார் இருக்கப் போகிறார்கள்! சொல்கிறேன், கேள். இந்த ஊருக்குத் தென் மேற்கே ஹரித்துவார மங்கலம் என்று ஒரு கிராமம் இருக்கிறதே, தெரியுமா! அந்தக் கிராமத்தில் கோவிந்த ஆசாரியின் மகனாகத்தான் நான் பிறந்தேன். மரத்தில் அழகு அழகான பதுமைகளெல்லாம் செய்ய வேணும் என்றுதான் எனக்கு ஆசை ஏற்பட்டது. எங்கிருந்தாவது நல்ல மரத் துண்டுகளைத் தேடி எடுத்து வந்து பொம்மைகள் செய்வதில் காலத்தைச் செலவிடுவேன்.

இது என் தாய்க்கும் தகப்பனுக்கும் அடியோடு பிடிக்க வில்லை. இம்மாதிரி வீண் வேலையில் ஈடுபடுவதைவிட ஒரு முக்காலி, தயிர் மத்து, அகப்பைக் கூடு ஏதாவது செய்து போட்டாலும் நாலு காசு கிடைக்கும் என்பது அவர்கள் எண்ணம். அவர்கள் என்னைத் திருத்துவதற்கு எவ்வளவோ முயற்சி செய்தார்கள். ஒன்றும் முடிய வில்லை.

நான் செய்யும் மரப் பதுமைகளைப் பார்த்துப் புகழ்ந்து, என்னுடைய காரியங்களுக்கு ஊக்க மளித்தவள் என் அத்தை மகள் குஞ்சலம் ஒருத்திதான். அவளுக்கு என் மீது உயிர். எனக்கும் அப்படித்தான். முறைப்படி அவள் எனக்கு மனைவியாக வேண்டியவள் அல்லவா! ஒரு நாள் நான் வீட்டுக்குச் சாப்பிடச் சென்ற போது, என் தாயார் மிகக் கோபமாக, 'வீட்டை விட்டு வெளியே போ! உனக்கு இனி மேல் இங்கு தண்டச் சோறு போட முடியாது' என்றாள். 'நான் என்ன காரணம், அம்மா!' என்றேன். 'உன்னைப் பிள்ளையாகப் பெற்றதினால் இந்த ஊரில் நான் எவ்வளவு இளக்காரமாகப் போய்விட்டேன், தெரியுமா! உன்னைப் போல வயசான பிள்ளை ஏதாவது உருப்படியான தொழிலாகச் செய்து வீட்டுக்கு நாலு காசு சம்பாதித்துக் கொண்டு வந்தால் தான் ஊருக்கு மதிப்பாக இருக்கும். பெண்ணைக் கட்டிக் கொடுக்கிறவர்களுக்கும் மதிப்பாக இருக்கும்' என்றாள்.

என் தாயாரின் வார்த்தையிலிருந்து, கல்யாண விஷயமாகப் பேச்சு வந்த போது அத்தை ஏதோ தாழ்மையாகப் பேசி இருக்கிறாள் என்று எனக்குத் தெளிவாக விளங்கியது. நான் எதையும் விவரமாக அப்பொழுது கேட்டுத் தெரிந்து கொள்ள விருப்ப வில்லை. எனக்கு அப்பொழுது வீட்டில் சாப்பிடவும் பிரியமில்லை. நான் எதுவும் பேசாமல் வெளியே வந்து விட்டேன்.

நான் என் பசியை மறந்து, என் தாயாரின் கடுமையான மொழிகளையும் மறந்து பொம்மை செய்வதில் ஈடுபட்டிருந்தேன். குஞ்சலம் வந்தாள். நான் தலை நிமிர்ந்து அவள் முகத்தைப் பார்த்த பொழுது அவள் கண்கள் கலங்கியிருந்தன.

'அத்தான், நாம் கல்யாணம் செய்து கொண்டு சரியாகக் குடித்தனம் நடத்தனு



மென்றால் காசு சம்பாதிக்கிற வேலையாக ஏதாவது செய்யுங்கள். இல்லாவிட்டால் என்னை மறந்து விடுங்கள்' என்று சொல்லி விட்டு வேகமாகப் போய் விட்டாள் குஞ்சலம். நான் கையில் பிடித்திருந்த உளியை அப்பால் எறிந்து விட்டு யோசனையில் ஆழ்ந்தேன்.

'கும்பகோணத்திலே பெரிய தேர் எரிந்து போய் விட்டதாம். அதைப் போல வேறு தேர் கட்டப் பிரயாசைப் படுகிறார்களாம். அது முடியுமா! அப்படிச் செய்ய இந்தக் காலத்திலே யார் பிறந்திருக்கிறான்!' என்று யாரோ இருவர் ரஸ்தாவில் பேசிக் கொண்டு போனது என் காதில் விழுந்தது. சட்டென்று எழுந்தேன். என்னுடைய ஆயுதங்களை யெல்லாம் மூட்டையாகக் கட்டி எடுத்துக் கொண்டு நடந்தேன்.

ஆயுத மூட்டையைச் சுமந்த வண்ணம் பதினேந்து மைல் நடந்து கும்பகோணம் போய்ச் சேர்ந்தேன். தீயில் எரிந்து சாம்பல் குவியலாகக் கிடக்கும் தேரைச் சுற்றி ஜனங்கள் நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். நான் அங்கு அதிக நேரம் நிற்கவில்லை. கோயிலுக்குள் சென்றேன். அங்கு ஒரு இடத்தில் கோயில் பஞ்சாயத்தார்கள் உட்கார்ந்து ஆலோசனை செய்து கொண்டிருந்தார்கள். சற்றுத் தூரத்தில் எதற்கோ காத்திருப்பவர்கள் போல் பத்துப் பன்னிரண்டு பேர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களெல்லாம் தேர் வேலை செய்ய வந்திருக்கும் ஆசாரிகள் என்று எனக்கு எளிதாக விளங்கியது. நானும் போய் அவர்கள் கூட்டத்தோடு கலந்து நின்றேன்.

அவர்களில் ஒருவன் என்னைப் பார்த்து, 'நீயும் தேர் வேலைக்குப் பெயர் கொடுக்கப் போகிறாயா!' என்றான். அதற்கு மேல் அவன் ஒன்றும் பேசவில்லை. சிறிது நேரத்தில் அங்கு கூடி ஆலோசனை செய்து கொண்டிருந்த பஞ்சாயத்தார்களில் ஒருவர் கையில் ஒரு புத்தகத்தோடு வந்து 'நீங்களெல்லாம் உங்கள் பெயரைக் கொடுங்கள். நாளைய தினம் நீங்களெல்லாம் கோயிலுக்கு வந்து இங்கு இருக்கும் துண்டு மரங்களில் தேர்ப் பொம்மை ஏதாவது செய்து பஞ்சாயத்தார்களிடம் காட்டணும். அவைகளைப் பார்த்துத் தகுதியை நிர்ணயித்து அதற்கு மேல்தான் வேலை, சம்பளம் எல்லாம் சொல்லுவோம்' என்றார். எல்லோரும் அதற்குச் சம்மதித்துத் தங்கள் பெயரைச் சொன்னார்கள். நானும் கடைசியாக என்னுடைய பெயரைச் சொன்னேன். அவர் எழுதிக் கொண்டு போய் விட்டார்.

அன்று இரவு கோயில் வாசலில் உள்ள மண்டபத்தில் படுத்துத் தூங்கிவிட்டு மறுநாள் கோவிலுக்குப் போனேன். மற்றவர்களும் வந்திருந்தார்கள். எல்லோருக்கும் கோவிலிலே வேண்டிய அளவு சாப்பாடு போட ஏற்பாடு செய்திருந்தார்கள். முதல் நாள் முழுவதும் பருக்கைச் சோறுகூடச் சாப்பிடாமல் வாட்டமுற்று இருந்த எனக்கு அது ஊக்கம் அளிப்பதாக இருந்தது. எல்லோரும் சிறு சிறு மரத் துண்டுகளைப் பொறுக்கி எடுத்துக் கோவிலில் சௌகரியமான இடங்களில் உட்கார்ந்து கொண்டு பதுமைகள் செய்யத் தொடங்கினோம்.

மாலை மணி ஆறும் விட்டது. எல்லோரும் அவரவர்களுடைய வேலையைச் செய்து முடித்து விட்டார்கள். கோவில் பஞ்சாயத்தார்கள் வந்து எல்லோரும் செய்த பதுமைகளை எடுத்துக் கொண்டு வரும்படி கட்டளை இட்டார்கள். எல்லாப் பதுமைகளையும் வரிசையாக


வைத்துப் பார்த்தார்கள். எல்லோருடைய பதுமைகளையும்விட என்னுடைய பதுமைதான் வேலைப்பாடு நிறைந்து சிறந்ததாக இருக்கிறது என்று ஏகமனதாக முடிவு செய்தார்கள். உடனே என்னைத் தேரைச் சிருஷ்டிக்கும் தலைமைச் சிற்பியாக அமைத்து எனக்குக் கீழ் இருந்து பணி செய்ய ஒப்புக் கொள்ளும் மற்றவர்களையும் சேர்த்துக் கொண்டார்கள். நான் தைரியத்தோடும் ஊக்கத்தோடும் அந்தத் தேரைச் சிருஷ்டிக்கும் முயற்சியில் இறங்கினேன். எனக்குக் குறைவில்லாமல் கோவிலில் பணம் கொடுத்தார்கள். தேர் வேலை ஜரூராக நடந்து கொண்டிருந்தது.

நான் கும்பகோணத்தில் புகழோடும் உன்னத நிலையோடும் இருக்கிறேன் என்பதை அறிந்த என் தகப்பனாரும், அத்தை புருஷனும் பெருமையோடு என்னைப் பார்க்க வந்தார்கள். நான் என் தகப்பனாருக்கு வேண்டிய அளவு பணத்தைக் கொடுத்து ஊருக்கு அனுப்பினேன். சில நாள் கழித்து எனக்கும் குஞ்சலத்துக்கும் கல்யாணம் செய்து விட வேண்டுமென்று நாள் பார்த்து வைத்து என்னைக் கூப்பிட்டார்கள். நான் தேரைக்கட்டி முடித்து வெள்ளோட்டம் விட்ட பிறகு தான் எதைப் பற்றியும் யோசிக்க முடியும் என்று சொல்லி அனுப்பி விட்டேன்.

இந்தத் தேரைக் கட்டி முடிக்க மூன்று வருடம் ஆயிற்று. இதிலுள்ள உன்னதமான சிற்பங்களெல்லாம் நான் செய்தவைதான். நான் கட்டிய தேரைப் பார்த்து ஊரே பிரமித்தது. ஜமீன்தார்களும் பிரபுக்களும் வந்து பார்த்து உள்ளம் பூரித்து எனக்கு எவ்வளவோ விலை மதிக்க முடியாத சன்மானங்களெல்லாம் செய்தார்கள். எனக்கு இவ்வளவு பெருமை எல்லாம் ஏற்பட்ட போது இதையெல்லாம் என் காதலி குஞ்சலம் அறிந்தால் எவ்வளவு பூரிப்பு அடைவாள் என்று எண்ணினேன். தேரைக் கட்டி முடித்த பின் தான் என் மனம் நிம்மதி யடைந்தது. அதற்கு அப்புறம் என் நினைவெல்லாம் குஞ்சலத்தின் பேரிலேயே இருந்தது. எப்பொழுது அவளைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறோம் என்ற துடிப்பிலேயே இருந்தேன்.

மறு நாள் தேர் வெள்ளோட்டம் விடப் போகிறார்கள், தேரின் மேல் தளம் சரியாகப் பொருத்தப் பட்டிருக்கிறதா என்று கடைசியாகப் பரிசோதனை செய்து பார்ப்பதற்காக மேலே ஏறினேன். நான் தேரில் தொத்திப் பிடித்து ஏறி ஒவ்வொரு மூலையும் சரியாகப் பொருத்தப்பட்டிருக்கிறதா என்று பார்த்துக் கொண்டு வரும் போது எனக்குக் கீழ் வேலை செய்யும் பையனொருவன் வந்து 'உங்கள் ஊரிலேயிருந்து ஆள் வந்திருக்கிறது. உங்கள் அத்தை மகள் குஞ்சலமாமே. அது நேற்று ராத்திரி திடீரென்று இறந்து போய் விட்டதாம்...' என்றான்.

இந்தச் செய்தியைக் கேட்டதும், நான் எந்த நிலையில் நிற்கிறேன் என்பதை மறந்து விட்டேன். என் கைப் பிடிப்பைத் தளர விட்டு விட்டேன். நிலை தவறிச் சிதறி அடித்துக் கொண்டு மேலேயிருந்து பூமியில் விழுந்தேன். பூமியில் விழுந்த சில வினாடிகளுக்குள் இந்த உலக வாழ்வைத் துறந்து விட்டேன். அப்புறம் எல்லாம் உனக்குத் தெரியும். இத்தகைய உன்னதமான தேரைச்சிருஷ்டித்த என்னைத் தெய்வமாகக்கொண்டாட எண்ணி என்னைப்போல் ஓர் கற்சிலை வடித்துத் தேரடியிலேயே வைத்தனர்.



பம்பாய் டெலிபோன்ஸ் ஒர்க் ஷாப்பைச் சேர்ந்த ஸ்ரீ ஜி. ராமரத்தினம் அவர்களின் தகப்பனார் ஸ்ரீ குருசாமி அவர்களுடைய ஷஷ்டியப்த பூர்த்தி பம்பாய் மாதுங்காவில் ஆகஸ்டு 10-ந்தேதி வெகு சிறப்பாக நடந்தது.

நூறு வருட காலம் வரையில் என்னைத் தெய்வமாகவே மதித்துப் பூஜை எல்லாம் செய்து கொண்டாடி வந்தார்கள். அதற்கு அப்புறம் அந்தப் பெருமை கொஞ்சம் கொஞ்சமாக மறைந்தது. ஊரில் என்னைப் பிசாசு என்று புரளி செய்து அதன் பலனைத் தாங்களே அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது அப்படி நினைப்பவர்கள் கூடக் குறைந்து விட்டார்கள்...'' என்று சொல்லி நிறுத்தினான் தேரடியான்.

அவ்வளவு நேரமும் கதை கேட்டுக் கொண்டிருந்த நான் சுய உணர்வு பெற்று, ''உன் கதை கேட்க மிகவும் பரிதாபமாய்த்தானிருக்கிறது'' என்றேன்.

''நீ பரிதாபப் படுவாய் என்று எனக்குத் தெரியும். பரிதாபப்படும் ஜீவன் ஒன்று இருக்கிறதை அறிந்து எனக்கும் ஆறுதல் தான். கடைசியாக உன்னிடம் சொல்ல ஆசைப்பட்டு வந்த விஷயம் ஒன்று...''

''என்ன அது !''

''இந்தத் தேர் கட்டி முடிந்த பின் ஐந்தாறு திருவிழாக்களில் தான் ஓடி யிருக்கிறது.''

''என்ன செய்வது ! இவ்வளவு பெரிய தேரை ஓட்டுவதென்றால் எவ்வளவு கஷ்டம் ! லக்ஷம் லக்ஷமாக அல்லவா பணம் வேண்டியிருக்கிறது ! அதுவும் தவிர தேர் இழுக்க வேண்டும் என்பதில் முன்னைப் போல் ஊரில் அவ்வளவு கட்டுப்பாடும் இல்லை. இவ்வளவு பெரிய தேரை இழுப்பதென்றால் வீதியில் புதிதாகக் கட்டடம் கட்டி இருப்பவர்களுக்கும் கடைகள் கட்டி இருப்பவர்களுக்கும் ஏராளமான நஷ்டம் ஏற்படும்...!''

''அதெல்லாம் சரிதான். தேர் இழுக்க வேண்டாம். ஆனால் இன்னொரு விஷயம் தான் என் மனத்தைக் கலக்குகிறது...!''

''என்ன !''

''அன்றொரு நாள் வெளியூரான் யாரோ வெற்றிலை பாக்குக் கடையில் நின்று கொண்டிருந்த வாலிபன் ஒருவனைப் பார்த்து 'பெரிய தெருவுக்கு எப்படிப் போகணும் !' என்று கேட்டான். அதற்கு அந்த வாலிபன் 'அதோ ஒரு கட்டை கிடக்குது, பார்! அதற்கு வடக்காலே போனால் கிழக்கு மேற்காக ஒரு தெரு போகுது. அது தான் பெரிய தெரு' என்றான். வெளியூர்க்காரர் ஒன்றும் புரியாதவராகக் 'கட்டையா ! எங்கே கிடக்குது !' என்றார். 'அதோ பாரய்யா! இவ்வளவு பெரிசாகக் கிடக்குதே, தெரியல்லே !' என்று தேரைச் சுட்டிக் காட்டினான். அதற்கு வெளியூர்க்காரர் 'அது தேரல்லவா ! அது உங்களுக்குக் கட்டையாயிடுச்சா!' என்று சொல்லிக் கொண்டே நடந்தார் 'ஆமாம்! இவ்வளவு பெரிய இடத்தை அடைச்சிக்கிட்டு அது எதற்காகக் கிடக்கணும். பிளந்து போட்டாலும் விறகாக உபயோகப் படும்'' என்றான் அவ்வாலிபன்.

இதைக் கேட்டதும் என்னுடைய ரத்தம் எப்படிக் கொதித்தது, தெரியுமா ! இவன் வீட்டிலிருக்கும் கட்டிலையோ, மேஜையையோ, தயிர் மத்தையோ இவன் கட்டை என்று சொல்லுவானா ! என்னைப் பேய் என்று ஒரு காலத்தில் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது நான் உண்மையாகவே ஒரு பேயாகி அந்த வாலிபனை அறைந்து அவன் ரத்தத்தை உறிஞ்சிக் கொன்றுவிட மாட்டோமா என்று தான் தோன்றியது. வெளிநாடுகளிலிருந்து வருகிறவர்களெல்லாம் இந்தத் தேரைச் சுற்றிச் சுற்றிப் பார்த்துப் புகழ்ந்து புகைப் படங்களெல்லாம் எடுத்துக் கொண்டு போகிறார்கள். ஆனால் இந்த நாட்டில் பிறந்தவன், இந்த ஊரில் பிறந்தவன், தன் முன்னோர்களின் பெருமையை உணர்ந்தவன், அவர்கள் கலைத் திறனைக் கண்ணெதிரே கண்டு கொண்டிருக்கிறவன் இந்தக் கலைத் தேரைக் 'கட்டை' என்று சுட்டிக் காட்டி வெட்டித் தீயில் போட ஆசைப்படுகிறேன் என்கிறானே...!'' தேரடியானின் ஆவேசப் பேச்சு சிறிது நின்றது.

''இதற்காக நீ கவலைப்படாதே. கலையில் ஆர்வமுள்ள வாலிபர்களும், அதைக் கண்காணித்துக் காப்பாற்ற வேண்டும் என்று எண்ணுகிற வாலிபர்களும் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்கள் உயிரைக் கொடுக்கச் சித்தமாயிருப்பார்கள். எதையும் அழிக்க விட மாட்டார்கள். பயப்படாதே !'' என்றேன்.

''பதினைந்து வருடங்களுக்கு முன்னிருந்தே உன்னைப் பற்றித் தெரிந்துகொண்டிருந்த நான் உன்னிடமிருந்து இந்த ஆறுதலான வார்த்தையைப் பெறலாம் என்ற நம்பிக்கையோடுதான் உன்னை நாடி வந்தேன். இந்தத் தேரடியான் ஆசாரியின் பெயர் ஊரில் பெருமையாக அடிபட வேண்டுமென்று நான் விரும்ப வில்லை. இந்தத் தேரின் பெருமை குலையாது இருந்தால் போதும். அதில்தானே என் உயிர், என் மூச்சு எல்லாம் இருக்கிறது. சரி, நாழிகையாகி விட்டது. பொழுது விடியும் தருணம் நெருங்கி விட்டது. நான் போகிறேன்'' என்று சொல்லி விட்டு அவன் கிளம்பினான்.

அந்த உருவம் கண்பார்வையிலிருந்து மறையும் வரையில் பார்த்துக் கொண்டிருந்தேன். இவ்வளவு நேரம் என்னிடம் உணர்ச்சி வசப்பட்டுப் பேசிக் கொண்டிருந்த ஒரு மனிதனைப் பிசாசாக மதிக்க என் மனம் கூசியது.



மேலும் மலிவானது!
PROTEX
All Purpose
TOILET POWDER
குடும்பம் முழுவதற்கும்
ஒரே டால்க்
ரம்மியமணம் கொண்ட ப்ரோடெக்ஸ் உயர்ந்தரக சர்வ பிரயோக வாசனைப் பௌடர்; மிக மிகக் குறைந்த விலையில் மிக மிகப் பெரிய டப்பா! இந்தியா வெங்கும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் ப்ரோடெக்ஸ் டால்கம் பௌடரைவிரும்புகின்றன—அதன் வசீகரமான வாசனையினாலும் எல்லாவற்றிற்கும் உபயோகப்படும் பரிமள டால்கம் பௌடர் என்பதனாலும்......
இன்று ப்ரோடெக்ஸ்
உபயோகித்தீர்களா?
குணம் உத்தரவாதம்
கால்கேட் பாமாலிவ்
அளிக்கிறது
PROTEX
All Purpose
TOILET POWDER
ப்ரோடெக்ஸ்
சர்வப்பிரயோக
வாசனைப்பௌடர்

உடலும் உள்ளமும்



மொழிபெயர்ப்பு : ஜெயமணி

3

பிரதீப் சொல்லுகிறான் :

ராஷ்மியை மறந்துவிட வேண்டும் என்று நான் செய்த முயற்சிகள் எல்லாம் வீணாகி விட்டன. அவளை மறந்து நான் ஒரு வரி கூட எழுத முடியவில்லையே! நான் எழுதும் ஒவ்வொரு வரியிலும் அவளது பிரதிபிம்பத்தைக் காண்கிறேன்.

ராஷ்மியை மறக்க நான் செய்த முயற்சியெல்லாம் வீணாகிவிட்டதால், என் மனத்துக்கு இசைந்த ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டேன்.

அதற்குப் பிறகு கூட என்னால் ராஷ்மியை மறக்க முடியவில்லை.

இந்த இரகசியத்தை என் மனதிற்குள்ளேயே எவ்வளவு காலம்தான் மறைத்துக் கொண்டிருப்பது? யாரிடமாவது சொல்லித் தீர்த்தால் மனத்துக்குச் சிறிது ஆறுதல் ஏற்படலாம் என்று தோன்றியது.

கடைசியாக என் கதையை என் மனைவி நீரஜாவினிடமே சொல்லி விட்டேன்.

கதையைக் கூறி முடித்தபின், "இது ஓர் அசாதாரண சம்பவம் அல்லவா?" என்று கேட்டேன்.

"அப்படிச் சொல்லுவதற்கு இதில் என்ன இருக்கிறது?" என்று ஆரம்பித்தாள் நீரஜா.

"அவள் வேறு ஒருவரின் மனைவியாக இருந்தும் கூட உங்களைக் காதலித்ததில் ஆச்சரியம் எதுவும் இல்லை. அவள் மனத்தில் உருவாகியிருந்த ஆதர்ச புருஷரை அவள் உங்களிடத்தில் கண்டாள். உங்களுக்கும் அவள் சகல அம்சங்களும் பொருந்திய பெண் அவதாரமாகத் தோன்றியது. இவ்விதம் இருவரது மனமும் பூரணமாக ஒன்றி விட்ட பிறகு, உடலுக்கு இடம் ஏது? உங்கள் மனத்தில் அவள் உறைந்து விட்டாள்; அவள் மனத்தில் நீங்கள் ஸ்தானம் பெற்று விட்டீர்கள். இதைத்தானே நீங்கள் அசாதாரணமானது என்று கூறுகிறீர்கள்."

மற்றொரு பெண்ணைத் தன்னால் மறக்கவே முடியவில்லை என்று கூறும் கணவனிடம் எந்தப் பெண்ணாவது இப்படிப் பேசுவாளா? நீரஜாவின் வார்த்தைகள் இருளைக் கிழித்துக் கொண்டு வரும் ஒளி போல் இருந்தன.

நீரஜா ஓவியக் கலையில் திறமை வாய்ந்தவள். அதனாலேயே விகற்பமின்றி அவள் மற்றொரு கலைஞனின் உள்ளத்தை அறிந்து கொள்ள முடிந்தது.

மேற்படி சம்பவம், நீரஜாவை நான் மணம் செய்து கொண்ட மூன்று வருஷங்களுக்குப் பிறகு நடந்தது. அப்போது அவள் ஒரு குழந்தைக்குத் தாயாக இருந்தாள். என் விஷயத்தில் அவள் காட்டிய அநுதாபம் என் மனத்தை உருக்கிவிட்டது.

என் இருதயத்தில் மற்றொரு பெண் இடம் பெற்றிருக்கிறாள் என்பதை நீரஜா வித்தியாசமாக நினைக்காதது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. இவ்விஷயம் எனக்கும் நீரஜாவுக்கும் உள்ள உறவுக்கு அனு

வளவு குந்தகத்தையும் உண்டாக்கவில்லை. அதற்கு மாறாக, நீரஜா என்மீது இன்னும் அதிக அன்பு காட்டத் தொடங்கினாள்! நீரஜாவின் மனம் அவ்வளவு பரிசுத்தமானதாக இருந்தது.

நான் எழுதும் நூலை நீரஜாவுக்கு வாசித்துக் காட்டுவேன். அதில் உள்ள விஷயங்களைப் பற்றி நாங்கள் விவாதிப்போம். அது போலவே அவள் எழுதும் சித்திரங்களை என்னிடம் காட்டி, அவற்றின் உணர்ச்சிகளையும் பாவங்களையும் பற்றி என் அபிப்பிராயத்தைக் கேட்பாள்.

இவ்வாறாக நீரஜா என் ஹிருதயத்தையே ஆகர்ஷித்து விட்டாள். அப்படியிருந்தும் கூட நான் ராஷ்மியை ஒரு விநாடிகூட மறக்க முடியவில்லை.

மற்றொரு தடவை ராஷ்மியைப் போய்ப் பார்த்துவிட்டு வந்தாலொழிய என் மனத்தில் அமைதி ஏற்படாது என்று தோன்றியது. எது எப்படியானாலும் அவள் ஊருக்குச் சென்று அவளை ஒரு தடவையாவது பார்த்து விட்டு வருவதென்று உறுதி கொண்டேன். அதற்குப் பிறகாவது மன அமைதி ஏற்படாதா?

அவ்விதம் ராஷ்மியைப் பார்த்து வருவதற்குத் திட்டம் போட்டுக் கொண்டிருந்த எனக்கு, ஒரு நாள் திடீரென்று அவளுடைய கணவன் சுரேஷ் என் வீட்டு வாசற்படியில் வந்து நின்றதைக் கண்டதும் 'திக்' என்றது. என் கண்களையே நான் நம்ப முடியவில்லை. என்னிடம் அவனுக்கு என்ன வேலை இருக்க முடியும்?

என் மனக் குழப்பத்தை அவன் அறிந்து கொள்ளாமல் மறைக்க நான் மிகவும் கஷ்டப்பட்டேன்.

"நான் இப்போதுதான் ஊரிலிருந்து வருகிறேன்" என்றான் சுரேஷ்.

"ஏதாவது உத்தியோக விஷயமாக இங்கு வந்தீர்களா?"

"இல்லை. உங்களைச் சந்திப்பதற்காகத்தான் வந்தேன்" என்றான்.

சுரேஷின் முகத்தில் சோகம் ததும்பியதால், அவன் என்ன விபரீதச் செய்தி கொண்டு வந்திருக்கிறானோ என்று என் மனம் அடித்துக் கொண்டது. எனினும், அவனாகச் சொல்லட்டுமே என்று என் ஆர்வத்தை அடக்கிக் கொண்டேன்.

நான் அவனுடன் பேச முயற்சித்தேன். ஆனால், ராஷ்மியைப் பற்றி அவன் என்ன சொல்லப் போகிறான் என்பதையே என் மனம் ஏக்கத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. இருந்தாலும், முதலில் நானாக ராஷ்மியைப் பற்றி அவனிடம் கேட்பதற்கு விரும்பவில்லை.

அச் சமயம், துரதிர்ஷ்டவசமாக நீருவும் வீட்டில் இல்லை. எனவே, என் நிலைமை இன்னும் அதிக மோசமாகியது.



"ராஷ்மி காலமாகி விட்டாள்" என்றான் சுரேஷ் திடீரென்று.

அந்தத் துக்கச் செய்தியைக் கேட்டதும் காலிலிருந்து தலை வரையில் என் தேகம் நடுங்கியது.

"அவள் நோய்வாய்ப்பட்டு இரண்டு வருஷங்களுக்கு முன் இறந்து விட்டாள்" என்றான் சுரேஷ் தொடர்ந்து.

"என்ன, என்ன! இரண்டு வருஷங்களுக்கு முந்தியா?" என்று என்னையறியாமல் உரக்கக் கத்தி விட்டேன்.



உறுதி, நம்பிக்கை மற்றும் நீடித்த மைல்கள் ஓடி உழைப்பதற்கு சூப்பர் இந்தியா ஜ்யாண்ட் டயர்களுக்கு* (லாரி, பஸ் டயர்கள்) ஈடு இணையில்லை. அனுபவசாலிகளான ரஸ்தா போக்குவரத்து வாகன முதலாளிகள் பெரும்பான்மையோர் தங்கள் லாரிகளுக்கும் பஸ்களுக்கும் இப்பிரசித்தி பெற்ற டயர்களையே வெகுகாலமாக உபயோகித்து வருகின்றனர்.



* இந்த டயர்களுக்கு இப்பொழுது ரேயான் லைனிங் உள்ளதனால், ஓடும் போது டயர்கள் அதிகமாக சூடாகாது . . . அதிக மைலேஜும் கிடைக்கிறது.

"சிவப்பு வட்டமுள்ள டயர்கள்"

IT. 9492 (s)

"ஆமாம். நான் அச் செய்தியை உங்களுக்கு முன்பே தெரிவிக்காததற்காக மிகவும் வருந்துகிறேன். எனினும்வேண்டுமென்று தான் உங்களுக்கு நான் அதை அறிவிக்காமல் இருந்து விட்டேன்.

இதைக் கேட்டதும் என் மனம் என்னபாடு பட்டது என்பதை வர்ணிக்க இயலாது. என் காலடியில் பூமியே படீரென்று வெடித்து விட்டது போல் தோன்றியது.

"இந்த உலகத்தில் ராஷ்மிக்கு இடமில்லை. அதனால்தான் அவளை நான் கொன்று விட்டேன். அவளைக் கொன்ற இரக்கமற்ற பாவி நான்தான்" என்றான் சுரேஷ்.

"அவளைக் கொன்றது நீங்களா?"

"ஆமாம். நான்தான். என் சந்தேகமும் பொறுமையும் கொடும் வார்த்தைகளும் அவளைக் கொன்று விட்டன."



கடலூர், திருநெல்வேலி, ராமநாதபுரம், மதுரை, தஞ்சை, தென் ஆற்காடு ஆகிய ஐந்து ஜில்லாக்களில் உள்ள போலீசாருக்கென ரேஞ்சு போட்டி விளையாட்டுகள் நடந்தன. அந்த ரேஞ்சு டிபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு கிருஷ்ணமேனன், மற்றும் அந்த ஐந்து ஜில்லா போலீஸ் சூப்பிரின்டெண்டெண்டுகள், உதவி சூப்பிரின்டெண்டெண்டுகள் எல்லாரும் விஜயம் செய்தனர். அதை யொட்டி, கடலூரிலுள்ள போலீஸ் ரிஸர்வ் படையைச் சேர்ந்தவர்கள் சிலர், 'அமலன்' எழுதிய கட்டபொம்மன் நாடகத்தைத் திறமையாக டவுன் ஹாலில் நடத்தினர். நாடகக் குழுவினரைப் படத்தில் காணலாம்.

இவ்விதம் சுரேஷ் சொல்லிக் கொண்டே தன் பையிலிருந்து சில கடிதங்கள் அடங்கிய ஒரு கட்டை எடுத்தான்.

அவை ராஷ்மியால் எழுதப்பட்ட அருமைக் கடிதங்கள்!

"அன்பார்ந்த நண்பருக்கு, உங்கள் கல்யாணத்தை நான் என் அகக் கண்ணால் பார்த்தேன். உங்களுடைய ஒவ்வொரு நடவடிக்கையையும்தான் நான் கவனித்து வருகிறேனே! அப்படியிருக்க நீங்கள் என் கண்ணில் படாமல் ஓடி மறைந்து விட முடியுமா?"

மற்றொரு கடிதத்தில் அவள் குறிப்பிட்டிருந்ததாவது:

"உங்களுடன் இன்று நான் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தேன். நீங்கள் எழுதியுள்ள 'விஷேத்' என்ற கதையில் நான்தான் சாரதா, நீங்கள்தான் விநோத்! நான் கூறுவது சரி அல்லவா? இவ்விஷயமாக நான் உங்களுடன் மானசீகமாக வெகு நேரம் விவாதித்தேன். விவாதிப்பது பலவீனத்துக்கு அறிகுறி அல்லவா? இருந்தாலும் நாம் இப்பூமியில் பிறந்த மனிதர்கள்தானே? தங்கள் கதாபாத்திரமான சாரதா இந்த உலகத்தில் ஏன் வாழக் கூடாது? அவள் பரிதாபமாக இறக்கும்படி ஏன் விட்டீர்கள்? அவளைப் போல் நானும் அகாலத்தில் இறக்க வேண்டுமென்பதுதான் அதன் அர்த்தமா?"

இதுதான் அவள் எழுதி யிருந்த மூன்றாவது கடிதம்:

"அன்பார்ந்த நண்பருக்கு, இப்போதெல்லாம் என் கணவர் படுத்த படுக்கையாக இருக்கிறார். அவருக்கு நான் பணிவிடை செய்து வருகிறேன். அவருக்கு இப்போது உங்கள்மீது மிகுந்த பிரியம் ஏற்பட்டு விட்டது. நான் உங்களைச் சந்திக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார்! உங்களைச் சந்திக்க நான் எந்த ஊருக்கும் போக வேண்டியதில்லை என்று அவரிடம் எப்படிச் சொல்வது? உங்களைத்தான் நான் எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கிறேனே. ஒரு வேளை நானும் சாரதாவின் வழியைப் பின்பற்ற வேண்டியதுதானோ......?"

இதுதான் ராஷ்மி எழுதிய கடைசிக் கடிதம் என்று தோன்றுகிறது. தான் அதிக காலம் இந்த உலகில் இருக்கப் போவதில்லை என்று ராஷ்மிக்குத் தெரிந்து விட்டது என்பதை அக்கடிதம் காட்டியது.

சுரேஷ் என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றான். அவன் கண்களில் நீர் ததும்பி நின்றது.

அதே சமயம், வெளியில் சென்றிருந்த என் குழந்தை மீனா உள்ளே வந்தாள்.

அந்தக் குழந்தையைக் கண்டதும் சுரேஷுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை.

"இது யாருடைய குழந்தை?" என்றான்.

"என் குழந்தைதான்."



டில்லி ராஜ்ய சபை அங்கத்தினர் திரு எச். டி. ராஜாவும், அவர் குமாரர் திரு உதயகுமாரும், இந்தியா சிமெண்ட்ஸ் கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் திரு டி. எஸ். நாராயணசாமி அவர்களும் சமீபத்தில் அமெரிக்காவுக்குச் சென்றிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏராளமான நண்பர்கள் மலர் மாலை சூடி வழியனுப்பி வைத்து மகிழ்ந்தார்கள்.

"ராஷ்மியும் குழந்தையாக இருந்தபோது இவளைப் போலவேதான் இருந்திருக்க வேண்டும்."

ஆம், மீஹர் ராஷ்மியையே உரித்து வைத்தது போல் இருந்தாள்!

அப்போது உள்ளே வந்த நீரு, ராஷ்மியின் மரணத்தைப் பற்றிக் கேள்விப்பட்டதும், எங்களையே சிறிது நேரம் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கடைசியில், "ராஷ்மி இறக்கவில்லை. அவளுக்கு இறப்பு கிடையாது. அவள் என்றென்றும் நம் மனத்தில் இருந்து வருவாள்" என்றாள்.

ஆனால், அவள் வார்த்தையை சுரேஷ் இலட்சியம் செய்யவில்லை. அவன் அப்போது வேறு என்னவோ சிந்தித்துக் கொண்டிருந்தான். பிறகு அவன் திடீரென்று, "இங்கு வந்து உங்களுடன் சிறிது காலம் தங்கியிருக்க விரும்புகிறேன்" என்றான்.

"உங்களை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அப்படியே செய்யுங்கள்" என்று அவனுக்குப் பதில் சொன்னேன்.

இச் சந்தர்ப்பத்தில் சுரேஷ் சித்தப்பிரமை கொண்டவன் போல் எங்களிடம் விடைபெற்றுக் கொள்ளாமலேயே வெளியே சென்று விட்டான். அவனைத் தடுத்து நிறுத்த நான் செய்த முயற்சியெல்லாம் வீணாயின.

அச் சம்பவத்துக்குப் பின் நான் சுரேஷைப் பல மாதங்கள் சந்திக்கவே யில்லை.

பல மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் நான் சுரேஷைப் பம்பாயில் பார்த்தேன். அப்போது மாலை ஐந்து மணி இருக்கும். அவன் கடற்கரைக்கு அருகில் ஒரு மோட்டாரிலிருந்துகீழே இறங்கினான். அவனைத் தொடர்ந்து ஒரு யுவதியும் இறங்கினாள்.

சிறிது தூரத்துக்கு அப்பால் நின்று கொண்டிருந்த என்னை அவன் கவனிக்கவில்லை.

எனினும் அவர்கள் பரஸ்பரம் கையைப் பிடித்துக் கொண்டு உல்லாசமாகச் சென்றதிலிருந்து, அவளை அவன் கல்யாணம் செய்து கொண்டிருக்க வேண்டும் என்று ஊகித்துக்கொண்டேன்.

அதாவது சுரேஷ் சம்பந்தப்பட்ட வரையில் ராஷ்மி ஸ்தானத்தில் வேறு ஒருத்தி வந்து விட்டாள். எனினும் அவள் அழகில் ராஷ்மிக்கு ஈடாக முடியுமா?

ராஷ்மியின் அழகும் அறிவும் படிப்பும் சுரேஷின் மனத்தில் பொறாமையையும் அவநம்பிக்கையையும் தூண்டி விட்டன. அதனால் அவர்களுடைய இல்லற வாழ்க்கை வேம்பாகி விட்டது.

ராஷ்மியின் உடல் அவனிடம் சிறைப்பட்டிருந்தது. ஆனால் அவளது உள்ளத்தைச் சிறைப்படுத்த, அவளது மனத்தை ஆகர்ஷிக்க அவனால் முடியவில்லை.

என்ன உலகம்? இந்தப் பெண்ணைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு உயர்ந்த ராஷ்மியுடன் சுரேஷ் ஒருநாளாவது இவ்விதம் உல்லாசமாகச் சென்றிருப்பானா?

இல்லற இன்பத்தைப் பூரணமாகப் பருக வேண்டும் என்று விரும்பினாள் ராஷ்மி. ஆனால் சுரேஷோ வெளியில் சதா காலமும் தன் காரியாலயத்தில் காலம் கழித்தான். ராஷ்மியின் உள்ளத்தை, இதயதாபத்தை அறிந்து கொள்ள முடியாமல் அவளது அழகைக் கண்டு பொறாமைகொண்டு, அவளை இம்சித்தான்.

ராஷ்மியின் வாழ்க்கையை எண்ணிய போது என்னை அறியாமல் என் கண்களில் நீர் ததும்பியது.

விஷ்ணுபிரபாகர் எழுதிய இக் கதை ஹிந்தியில் முதல் பரிசு பெற்ற கதையாகும்.



பூரண வாய் சுத்தத்திற்கென தயாரிக்கப் பட்டது

- கிருமிகள் அகற்றப்பெற்ற நைலான் முடிகள்.
- அழகிய பிளாஸ்டிக் பிடியில் நன்கு இணைக்கப்பட்ட முடிகள்.
- உங்கள் பற்களுக்கான உருப்பெற்றது; சுலபமாக சுத்தம் செய்கிறது.
- மிருதுவான சுத்தி—பல்லின் எனுமலை பாதிக்காது.
- மெதுவான முறையில் ஈறுகளை பலப் படுத்துகிறது.

அதிக பலனுடன்!

பற்களைப் பூரணமாக சுத்தம் செய்கிறது. ஈறுகளை மிருதுவாக தடவி விடுகிறது.

மூன்று அளவுகள்; பெரியவர்களுக்கு, சிறியவர்களுக்கு, குழந்தைக்கு
• ஹார்ட் • மீடியம் • ஸாப்ட்

கால்கேட்

நைலான் டூத் பிரஷ்

மலிவு–நீடித்த உழைப்பு

நீண்டு பெருகும் கூந்தல் வேண்டுமானல்

கேசவர்த்தினி

தடவுங்கள்



தலை அரிப்பைப் போக்குங்கள். மயிர் கொட்டுவதை நிறுத்துங்கள். அகால நரையைத் தடுங்கள். நரையைத் தாமதிக்கச் செய்யுங்கள். பளபளப்பான கேசத்தைப் பெருக்கிக் கொள்ளுங்கள். மறைந்துள்ள கூந்தலழகை எடுத்துக் காட்டுங்கள் கேசவர்த்தினியின் உதவியால்.



ஷாம்புவின் உதவியால்

தலையை சுத்தமாகவும் பரிமளமுள்ளதாகவும் ஆக்குங்கள்

கேசவர்த்தினி அணு 14. ஷாம்பு அணு 14. தபால்செலவு வேறு. எங்கும் கிடைக்கும்.

கேசவர்த்தினி ப்ராடக்ட்ஸ், கோயமுத்தூர்

No. 2


நான்தான் டீ
தொழில்கள் நடக்க
நான் உதவுகிறேன்
நான்தான் டீ — நான் தொழிலாளிக்கு ஊக்கம் அளிக்கிறேன்
TEA BOARD
INDIA

வட்ட மேஜை

பி. ஸி. ஜி தமிழ்ப் புத்தகம்

பி. ஸி. ஜி ஊசிக் குத்தினால் மக்களுக்கு ஏற்படும் தீங்குகளை யெல்லாம் ராஜாஜி அவர்கள் தெளிவாக எடுத்துக் கூறி வருகிறார்கள். மக்களின் நலனைப் பாதுகாப்பதற்காக அவர் அரசாங்கத்தின் பிடிவாதத்துக்கு எதிராகவே அறப்போர் தொடங்கி யிருக்கிறார். பி. ஸி. ஜி ஆங்கிலப் புத்தகம் படித்தேன். அதில் அவர் கைதேர்ந்த டாக்டர்களின் ஆதாரங்களோடு பி. ஸி. ஜி வேண்டாமென்பதற்குரிய சான்றுகளை யெல்லாம் விளக்கி யிருக்கிறார். ஆனால், தமிழ் மட்டும் தெரிந்த மக்கள் இந்த அரிய உண்மைகளைத் தெரிந்துகொள்ள இயலாமலிருக்கிறது. ஆகவே தமிழிலும் ராஜாஜி அவர்கள் பி. ஸி. ஜி புத்தகத்தை வெளியிட்டால் அதைத் தமிழ் மக்கள் அனைவரும் படித்துப் பயன் அடைவார்கள்.

திருச்சி
9—9—55 சங்கர்

[பி. ஸி. ஜி சம்பந்தமான தமிழ்ப் புத்தகத்தைப் பற்றிய அறிவிப்பை செப்டம்பர் மீ 11உ இதழில் பார்த்திருக்கக்கூடும். ராஜாஜி ஆங்கிலத்தில் எழுதிய 'B. C. G - Why I oppose it' என்ற ஆங்கில நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு வெளியாகிவிட்டது. விலை அணா ஆறு. கிடைக்குமிடம்: தமிழ் நூல் பிரசுராலயம், 2, மெமோரியல் ஹால் தெரு, சென்னை—3. —ஆசிரியர்]

●

பர்மா ரமணி

எங்களுக்கு மிகவும் ருசியான தொடர்கதையான "பர்மா ரமணி" 'கல்கி'யில் வெளிவருகிறது. எங்களுக்காகவே பல வருடங்களாகப் பாடுபட்டு வரும் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் எது எழுதினாலும் நன்றாக இருக்கும். வள்ளியப்பா வாழ்க!

சென்னை ம. கோவிந்தராஜன்
4—9—55 (ஜோதி சிறுவர் சங்கம்)

●

இந்துமதி

'கல்கி'யின் "அமரதாரா" பெண்களின் மனத்தை அப்படியே 'எக்ஸ்ரே' பிடித்துக் காண்பிக்கும் ஒரு அருமையான கதை. இந்துமதியின் நிலை மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. இத்தனை நாட்களாக, ஒரே சீராய், அவளுடைய வாழ்வின் ஏற்றத் தாழ்வுகளையே விளக்கி விட்டு, சென்ற இரண்டு வாரங்களாக, திடீரென்று ஒரு திருப்பத்தில் இறங்கி இருப்பது மிகவும் சுவாரஸ்யமாக இருக்கிறது. கதையின் சம்பவங்களை ஒட்டிச் சித்திரிக்கப்படும் 'மணியம்'த்தின் படங்கள் அபாரமாய் அமைந்து விடுகின்றன. தந்தையின் நடையை அப்படியே பின் பற்றுவதுடன், விறுவிறுப்புக் குறையாமல் அழகான எளிய நடையில் எழுதும் 'ஆனந்தி' அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

கும்பகோணம்
22—8—55 மீனாட்சி

"ஆனை உண்ட அருங்கனி"

நீங்கள் 'ரவி சந்திரிகா'வைத் தொடர்ந்து படித்து வரும் பல்லாயிரக் கணக்கான நேயர்களில் யானும் ஒருவன். இந்த வாரம் 11-9-55 'கல்கி' இதழில் வந்துள்ள ரவிசந்திரிகா தொடர் கதைப் பகுதியில் ஓரம்சம் என்னைப் பெரிதும் கவர்ந்தது.

கந்தப்பன், டாக்டர் சுரேஷ், அப்புலிங்கம் மூவருடைய உரையாடலின் மூலமாக 'வேழமுண்ட விளங்கனி' என்ற அருந் தொடருக்கு நல்ல விளக்கம் தந்திருக்கின்றீர்கள். சீவக சிந்தாமணி - நாமகளிலம்பகம் 'தூம்புடை நெடுங்கை வேழம்' (203) என்று தொடங்கும் பாட்டும் அதற்கு நச்சினார்க்கினியர் எழுதியுள்ள உரையும் 'வேழம்' என்பது விளங்கனிக்கு வருவதோர் நோயின் பெயரே' என்னும் கருத்தை வற்புறுத்துகிறது. ஆனால் ஒன்று! 'வேழநோய்' என்பதல்லது மொழியின் பரியாய சப்தமாக மாற்றி 'யானை நோய்' என்று இதனைக் கூறுவது இலக்கிய வழக்கன்று.

கதை கதைக்காகவே என்றிராமல் இம்மாதிரி அரும் பெரும் கருத்துக்களையும் இடையிடையே விவரிக்கும் தங்கள் சீரிய பணிக்கு என் நன்றி, வாழ்த்து. வணக்கம்.

மதுரை வித்வான் பண்டித
12—9—55 ந. பார்த்தசாரதி

['வேழ நோய்' என்பது குறித்துத் தமிழ் இலக்கியத்தில் எத்தனையோ பாடல்கள் உள்ளன. 'வெருவரு வேழமுண்ட வெள்ளில் போல் வறியனாகி' என்று தொடங்கும் திருவிளையாடற் புராணப் பாடலுக்குப் பொருள் எழுதும் உரைகாரரின் குறிப்பு:

"வேழம்: விளங்கனிக்கு வருவதோர் நோய். அஃது இளநீர்க்குத் தேரை என்னும் நோய் போல விளாங்கனியை உள்ளீடு இல்லாததாகச் செய்வது. இது வேழம் என்னும் பெயர் ஒற்றுமையால் 'யானையுண்ட விளாங்கனி' எனவும் வழங்கும்."

தவிர, யானை நோயின் வகைகள் பல என்று தமிழ் நூல்கள் கூறும். மனிதர்களுக்கும், மரம், செடி, கொடி, பழங்களுக்கும் வருகிற யானை நோய்களிற் சில: ஆனைத் தீ நோய் அல்லது வேழ வெந்தீ, யானைக் கை, யானைக் கால், யானைச் சொறி, யானைக் கண், யானைக் கொம்பு முதலியன.

பரியாயச் சொற்களை (ஒரே பொருள் குறிக்கும் பிரதி பதங்களை)ச் சாதுர்யமாகக் கையாண்டு, மருந்துப் பெயர்களையும் நோய்ப் பெயர்களையும் வழங்குவது தமிழ் நாட்டுச் சித்தர்களின் இலக்கிய வழக்கு. கல்லாடத்தில் அபினுக்கு 'எட்டு பின்' என்றும், பஞ்ச காவிய நிகண்டில் Arsenic இன் வகைகளான அரிதாரம் என்பதை மால்தேவி (அரி - திருமால்; தாரம் - தேவி) என்றும், கௌரி பாஷாணத்தை அரன்தேவி என்றும், வெள்ளைப் பாஷாணத்தை அயன்தேவி யென்றும் வழங்குவது காண்க. முசுமுசுக்கை என்னும் மருந்துச் செடியை "இரு குரங்கின் கை" (முசு-குரங்கு) என்று சொல்வதுண்டு.

'விளங்கனி' என்ற சொல்லுக்கு 'வேழம்' என்னும் சொல் மோனையாக அமைவதால் 'வேழ நோய்' என்ற வழக்கு அதிகமாயிற்று.

கதையில் தாங்கள் காட்டியுள்ள சிரத்தைக்கும் பரிவுக்கும் மிக்க நன்றி. —ஆசிரியர்]


SANDOW
ஸாண்டோ
உறுதிக்கும்
சரியான நேரத்திற்கும்
விவரங்களடங்கிய கேட்லாகிற்கு கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதவும் :
பேவர்லூபா & கோ., தபால் பெட்டி நெ. 845, பம்பாய். அல்லது த. பெ. நெ. 474, கல்கத்தா
FAVRE-LEUBA & CO. LTD.
பேவர்லூபா & கோ., லிமிடெட்
பம்பாய் - கல்கத்தா

ராஜராஜ சோழன்

பகீரதன்



வான் புகழ் கம்பனையும், வள்ளுவனையும் உலகுக்குத் தந்த தமிழன்னை, செஞ்சை அன்னும் சிலப்பதிகாரத்தையும் இன்னும் பல சங்க கால இலக்கியங்களையும் மணி யாரமாகச் சூடிக் கொண்டு கையிலே செங்கோல் ஏந்திக் கம்பீரமாக வீற்றிருக்கிறாள். கருணை பொழியும் கண்களால் நம்மைப் பார்க்கிறாள். அவள் பார்வையில் என்னதான் மந்திர சக்தியோ, மாய ஜாலமோ! தெரியவில்லை. அடுத்த கணம் கால வெள்ளத்திலே பின்னோக்கி யாத்திரை செய்யத் தொடங்கி விடுகிறோம். பின்னால், பின்னால், பின்னால் விரைந்து செல்கிறோம். நூறு வருஷம், இருநூறு வருஷம், ஐந்நூறு வருஷம் என்று தொள்ளாயிரம் வருஷங்கள் சென்று விடுகின்றன.

இன்றையத் தமிழ் நாட்டின் சூழ்நிலை திடீர் என்று மறைந்து விடுகிறது.

முத்துமாலைகளும், நவரத்தின கிரீடங்களும் அணிந்த அரசர்களும், மகாராணிகளும், இளவரசிகளும், மந்திரி பிரதானிகளும், சபா மண்டபங்களும், நடன மன்றங்களும், கோயில்களும், கோபுரங்களும், சிற்பங்களும், சித்திரங்களும், புலவர்களும், அவர்களுடைய விவாதங்களும், ஒற்றர்களும், ராஜ தந்திரிகளும், அவர்கள் சூழ்ச்சிகளும், பாதாளச் சிறைகளும், பளிங்கு மேடைகளும், பூங்காக்களும், அதில் பாடும் புள்ளினங்களும் நிறைந்து விளங்கும் ஒரு அதிசய உலகத்துக்குப் போய் விடுகிறோம்.

"ராஜராஜ சோழன்" நாடகத்தைப் பார்க்கும்போது நமக்கு இத்தகைய உணர்ச்சிதான் உண்டாகிறது. தற்காலத் தமிழகத்தை விட்டு நீங்கிப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னே தமிழ் அரசர்கள் ஆட்சி புரிந்த தமிழ் நாட்டில், கலைகளிலும், நாகரிகத்திலும், பொருள் வளத்திலும், அருள் செல்வத்திலும், வீரத்திலும், தீரத்திலும் சிறந்து விளங்கிய தமிழகத்தில் இருப்பதாகவே தோன்றுகிறது.

திரு டி. கே. எஸ். சகோதரர்களும், அவர்கள் நாடகக் கம்பெனியும் தமிழ்நாட்டு நாடகக் கலை வளர்ச்சிக்கு எத்தனையோ சிறந்த தொண்டுகள் செய்திருக்கிறார்கள். "ராஜராஜ சோழன்" என்னும் நாடகம் திரு டி. கே. எஸ். சகோதரர்களின் தமிழ்த் தொண்டுகளுக்கெல்லாம் சிகரம் என்று சொல்ல வேண்டும்.

திரு டி. கே. எஸ். சகோதரர்கள் 1944-ம் ஆண்டு ஒரு நாடகக் கதைப் போட்டி நடத்தினார்கள். அதில் "ராஜராஜ சோழன்" என்ற நாடகக் கதையைத் தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்கினார்கள். ஆனால் அந்த நாடகம் அரங்கேறாமலே இருந்து விட்டது. அப்படியே அவர்கள் இதயத்தில் ஊறி வந்தது.

'கல்கி' ஆசிரியர் திரு சோமு அவர்கள் அகில இந்திய ரேடியோவின் நாடக இலாகா அதிகாரியாகப் பொறுப்பேற்றுக் கொண்ட புதிதில், "ராஜ ராஜ சோழன்" நாடகத்தைச் சென்னை அகில இந்திய ரேடியோவில் ஒரு மணி நேர நாடகமாகத் திரு ஷண்முகம் குழுவினரை நடிக்கும்படி ஏற்பாடு செய்தார். நாடகத்தைக் கேட்ட ரஸிகர்களின் பலத்த பாராட்டுதலைக் கேட்டதும் "இந்த நாடகத்தை மேடையில் ஏன் அரங்கேற்றக் கூடாது!" என்று திரு ஷண்முகம் சிந்தித்தார். உடனே நாடகம் மேடையில் அரங்கேறியது. "ராஜராஜ சோழன்" நாடகத்தை இப்பொழுது திரு டி. கே. ஷண்முகம் குழுவினர் பொது மக்களின் அமோக ஆதரவுடன் தமிழ் நாட்டின் பல இடங்களில் வெற்றிகரமாக நடித்துக் காட்டி வருகின்றனர்.


நாடகக் கதையும் கதையை நாடகமாக அமைத்திருக்கும் பாணியும், கட்டுக் கோப்பும், காட்சி அமைப்புகளும், சம்பாஷணைகளின் சிறப்பும் ஒன்றுக்கு மேல் ஒன்று சிறந்து விளங்கித் திணற அடித்து விடுகின்றன. ஒவ்வொரு காட்சியும், கற்பனைகளும், ஜோடனைக் கட்டங்களும் திரு டி. கே. ஷண்முகத்தின் முத்திரை பெற்று ஒளி விட்டு மின்னுகின்றன.

"ராஜராஜ சோழன்" நாடகத்தின் கதை-வசன ஆசிரியர் திரு அரு. ராமநாதன். நாடகத்துக்குப் பாடல் இயற்றிக் கொடுத்தவர் புத்தனேரி திரு ரா. சுப்பிரமணியம்.

நாடகத்தில் வரும் சம்பாஷணைகள் சக்தி வாய்ந்த தமிழ் நடையில் அமைந்திருக்கின்றன.

சம்பாஷணைகளைக் கையாளும் பாத்திரங்கள் மிக அற்புதமாகக் கையாளுகிறார்கள். கதா பாத்திரங்கள் ஒருவரை ஒருவர் குறுக்கிட்டு வாதப்போர் இடும்போது 'பளீர்' 'டளீர்' என்று வானத்தில் மின்னல் வெட்டிப் பாய்வது போலிருக்கிறது. தமிழ் நடையின் சக்தியும், சம்பாஷணைத் திறனும், பாவபூர்வமான நடிப்பும் நாடகத்தின் வெற்றிக்கு முக்கிய காரணங்களாகத் திகழ்கின்றன.

இந்த நாடகத்தைப் பார்த்த போதும், பார்த்த பிறகும் என்ன தோன்றுகிறது என்றால், தமிழ் மக்கள் எல்லாருமே இந்த நாடகத்தைப் பார்த்துவிட வேண்டும்; அப்படிப் பார்ப்பதால் பழந் தமிழ் நாட்டின்



பின்னர் இளவரசன் ராஜேந்திரன் ஏற்பாட்டின்படி சக்கரவர்த்தி ராஜ ராஜ சோழன் பிறந்த தின விழாவின் போது விமலாதித்தன் விடுதலை பெறுகிறான். மன்னர் மன்னரின் சபையில் கவி பாடி இளவரசி குந்தவியைப் பரிசாகப் பெறுகிறான்.

ராஜ தந்திரியின் சூழ்ச்சி அம்பலமாகிறது. சக்கரவர்த்தி ராஜ ராஜ சோழன் ராஜதந்திரியை எதிரியின் கையாள் என்று தெரிந்தே அவனுடன் நாடகம் நடித்திருக்கிறார் என்ற உண்மை வெளியாகிறது.

ராஜராஜ சோழனின் வார்த்தைக்குக் குந்தவியைப் போலவே ராஜேந்திரனின் வெற்றி வாளும் விளக்கம் கேட்கத் துடிக்கிறது!

உயர்ந்த பண்பாடு, கலை, நாகரிகம், வீரம், அன்பு, அறம் எல்லாம் எத்தகையவை என்பதை நன்றாக அறிந்து கொண்டு விடுவார்கள்.

** ** **

ராஜ ராஜ சோழன் நாடகம், ராஜராஜ சோழன் அருமை மகள் குந்தவி தான் காதலித்த காதலன் விமலாதித்தனை மணம் செய்து கொள்ள முயலுவதும், அதற்கு ஏற்படும் பல இடையூறுகளையும் கொண்டு அற்புதமாக அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் நாடகத்தில் சோழ மன்னர்களின் உயர்ந்த பண்பும், தமிழ் நாட்டின் சிறப்பும் சரித்திர வரலாற்றுடன் காண்பிக்கப் படுகின்றன.

ராஜராஜன் அன்புக்கு உரிய ராஜ தந்திரியாக எதிரியின் கையாள் ஒருத்தன் இருக்கிறான். அவனுடைய சூழ்ச்சியால் ராஜ ராஜனும் விமலாதித்தனும் விரோதியாகிறார்கள். ராஜராஜன் தஞ்சையில் பெரிய கோயில் கட்டி, அக் கோயிலில் தம் அருமை மகள் குந்தவியின் நடனத்தை அரங்கேற்றுகிறார். அங்கு வந்த விமலாதித்தன் நாட்டியத்தில் குற்றம் கண்டு ராஜராஜனின் கடும் எதிர்ப்புக்கு ஆளாகிறான். போர் மூளுகிறது. போர்க்களத்தில் ராஜராஜனின் குமாரன் இளவரசன் ராஜேந்திரனால் விமலாதித்தன் தோற்கடிக்கப்பட்டுச் சிறைப் படுகிறான். சிறைப்பட்ட விமலாதித்தனை ராஜ தந்திரி பல கொடுமைக்கு உள்ளாக்குகிறான். புலிக் கூண்டில் அடைத்து அவமானப் படுத்துகிறான். பாதாளச் சிறையில் தள்ளிப் பழி தீர்த்துக் கொள்கிறான்.

இளவரசி குந்தவி பாதாளச் சிறையில் விமலாதித்தனைச் சந்திக்கிறாள். சுரங்க வழியாகக் காதலர்கள் தஞ்சை பெரிய கோவிலுக்கு வருகிறார்கள். இறைவன் முன்னிலையில் திருமண ஒப்பந்தம் செய்து கொள்ள முயலும் போது மன்னர் வந்து விடுகிறார். விமலாதித்தன் மீண்டும் சிறைப்படுகிறான்.

விரு விருப்பும் வேகமும் குறையாமல் சுமார் நாலு மணி நேரம் கண் கொட்டாமலும், கவனத்தை அப்பால் இப்பால் செலுத்தாமலும் பார்க்கும்படி இந்த ராஜ ராஜ சோழன் நாடகத்தை நடத்துகிறார்கள் என்றால் எவ்வளவு தூரம் நாடகப் பண்பை உணர்ந்து நாடகக் கலைத் திறமையோடு நாடகம் நடத்துகிறார்கள் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

நடிப்புத் திறமையைப் பொறுத்த வரையில் நாடகத்தில் இளவரசன் ராஜேந்திரன், சக்கரவர்த்தி ராஜராஜ சோழன், விமலாதித்தன், குந்தவி ஆகியவர்களுக்குப் பரிசுகள் வழங்கிப் பாராட்டுக் கூற வேண்டும்.

ராஜேந்திரனாக வந்த திரு டி. கே. ஷண்முகம் மிகவும் எக்கச்சக்கமான மனப் போராட்டங்கள் நிறைந்த பாத்திரத்தை ஏற்றுக் கொண்டு திறமையாக நடித்திருக்கிறார். வேஷம், பேச்சு, நடையுடை பாவனை எல்லாம் மிகப் பொருத்தம். நடிப்போ அபாரம்! தந்தையோடும், அத்தை குந்தவி பிராட்டியோடும் அருமைத் தங்கை குந்தவி வாதாடும் இடத்தில் ராஜேந்திரன் உணர்ச்சியை அடக்கிக் கொண்டு கண்கலங்கி நிற்கும் போதும், வீரமாதேவியுடன் பேசாமல் பேசிக் காதல் புரியும் போதும், தந்தையின் முன்னிலையில் பயபக்தியுடன் நிற்கும் போதும் ராஜேந்திரனின் முக பாவங்கள் நடிப்புக் கலையின் சிகரமாக விளங்குகின்றன. அவர் சரளமான பேச்சையும், இனிமையான பாட்டையும் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. எல்லாம் பிரமாதம்!

சக்கரவர்த்தி ராஜராஜ சோழனாக வரும் திரு டி. கே. பகவதி நாடகத்தின் ஆரம்பத்திலிருந்து கடைசி வரையில் எல்லாக் காட்சிகளிலும் வருகிறார். அவரது கம்பீரமான தோற்றமும், கணீர் என்ற பேச்சும், ராஜ கம்பீரமான மிடுக்கு நடையும், மோகனச் சிரிப்பும், புரிந்து கொள்ள முடியாத இதயங் கொண்ட மலர்ந்த முகமும் அவரைச் சிறந்த குணசித்திர நடிகர், ரஸிகர், கனவான்—ஏன்!

ராஜராஜசோழனே என்று எடுத்துக் கூறிக் கொண்டிருக்கின்றன. தம்முடைய பிறந்த நினைவிழாவின் போது விமலாதித்தனுக்கு இளவரசி குந்தவியைத் தானமாகக் கொடுக்கும் கட்டத்தில் அவருடைய நடிப்பு, பலே பேஷ்!

விமலாதித்தனாக வந்த திரு கே. ஆர். சீதாராமனின் நடிப்பை எப்படிப் பாராட்டுவது! அவர் விமலாதித்தனாகவே மாறி விடுகிறார் என்றுதான் சொல்ல வேண்டும். எதிர்காலத்தில் மிகச் சிறந்த நடிகராக விளங்குவார் என்பதற்கு வேண்டிய எல்லா அறிகுறிகளும் அவர் நடிப்பில் துடிக்கின்றன. முதல் முதலில் நாடக மேடையில் வரும் போதே புலிக்குட்டி போல் பாய்ந்து வருகிறார். கடைசி வரையில் அந்த வேகத்துடன் நடிக்கிறார், பேசுகிறார், பாடுகிறார். நடன மண்டபத்திலும், புலிக் கூண்டுக்குள்ளும், ராஜ சபையிலும் அவர் நடிப்பு, ஜோர்!



''பழைய தமிழகத்தைப் பார்த்த மகிழ்ச்சியில் பேசுகிறேன்'' என்கிறார் திருப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார்.

குந்தவியாக வந்த ஹேமலதாவைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். ஒரு கண நேரமாவது ஒரு இடத்தில் நில்லாமல் பரபரப்போடும், துடிதுடிப்போடும் அற்புதமாக நடிக்கிறார். அரங்க மேடையில் குந்தவை முன்னும் பின்னும் ஓடித்திரிவது ஆகாச வெளியில் அங்கும் இங்கும் நட்சத்திரம் பாய்வது போலிருக்கிறது. குறுகுறுப்பான இளவரசி என்பதை அற்புதமாகச் சித்திரித்து முழு வெற்றி பெறுகிறார். ''முன்னம் அவனுடைய'' என்ற பாடலுக்கு அவருடைய நடனம் பேஷாக இருக்கிறது.

அடுத்தபடியாக, புலவர்களாக நடித்த இரு ஹாஸ்ய நடிகர்களிடமும் மிகச் சிறந்த ஹாஸ்யத் திறமை காணப்பட்டது. குற்றமற்ற ஹாஸ்ய நடிப்பினாலும், இடக்கரடக்கலான பேச்சுக்களினாலும் அவர்கள் சபையோரை அடிக்கடி குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்துக் கொண்டிருந்தார்கள். ஹாஸ்ய நடிகர்கள் திரு டி. என். சிவதாணுவும், திரு எஸ். கருப்பையாவும் 'குபீர்' 'குபீர்' என்ற சிரிப்பொலி மூலம் ரஸிகர்களின் பாராட்டுதலைப் பெற்றுக் கொண்டே இருந்தார்கள்.

இதர துணை நடிகர்கள் எல்லாரும் நாடகத்தின் சிறப்புக்குத் துணையாகச் சிறந்த முறையில் நடித்தனர். அவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியே பாராட்ட வேண்டும்.

நடிகர்கள் மட்டும்தானா சிறந்த முறையில் நடிக்கிறார்கள், பேசுகிறார்கள்! நாடகத்தின் ஒவ்வொரு காட்சியும் உணர்ச்சியுடன் பேசுகிறது. தமிழ்த் தெய்வம் பேசுகிறாள். தஞ்சை பெரிய கோயில் பேசுகிறது. அதில் உள்ள சிற்பங்கள் நடனமாடுகின்றன. அரண்மனை, அந்தப்புரம், பூந்தோட்டம் எல்லாம் பேசுகின்றன. வீர வாள்கள் பேசுகின்றன. ராஜேந்திரன் கையில், வீரமா தேவியின் கையில், குந்தவியின் கையில், விமலாதித்தன் கையில் பேசுகின்றன. அந்தக் கத்தி பிடித்த எல்லாக் கரங்களும் பேசுகின்றன. ராஜராஜனின் காவி உடையோ அறம் வளர்க்கின்றது. சூழ்ச்சிக்குச் சூழ்ச்சி செய்கிறது. குங்குமச் சிமிழ் வீரத்தையே ஊட்டி விடுகிறது. புலிக் கூண்டு பேசுகிறது. பாதாளச் சிறை பேசுகிறது. ராஜ சபை கவிதை பாடுகிறது. சொத்தைப் பற்கள் முத்துப் பற்கள் போல் நகைச்சுவையை அள்ளிக் கொட்டுகின்றன. ஒற்றனின் குத்துவாள் சதியைக் காட்டிக் கொடுத்துக் களீர் என்று சிரிக்கிறது. பக்க வாத்தியங்கள் கிண்கிணி நாதத்துடன் பேசிப் பாடி, பேசாத காட்சிகளுக்கு விளக்கம் சொல்கின்றன.

** ** **

செப்டம்பர் மாதம் 10உ ஸ்ரீ கலாநிகேதன் ஆதரவில் அண்ணாமலை மன்றத்தில் நடந்த இந்த நாடகத்துக்குக் குன்றக்குடி அடிகள் தலைமை வகித்தார். ''நான் துறவியாக இருந்த போதிலும் நாடகத்தின் பல இடங்களில் பரவசமாகி விட்டேன். குந்தவிக்கும் அவள் தந்தைக்கும் நடந்த வாதத்தின்போது கண்ணீர் விட்டு விட்டேன். அந்த இடத்தில் கண்ணீர் விடாமல் நடித்த ராஜராஜசோழனின் நடிப்பை எப்படிப் பாராட்டுவேன்! நாடகத்தை வீரம் செறிந்த நாடகம் என்பதா! காதல் நிறைந்த நாடகம் என்பதா! சமயம் ததும்பும் நாடகம் என்பதா என்று திகைக்கிறேன். பொதுவாகச் சொன்னால் தமிழ் நாட்டையும் தமிழர்கள் வாழ்க்கையும் உயர்த்தக்கூடிய உயர்ந்த பண்புகள் நிறைந்த நாடகம் என்றுதான் சொல்ல வேண்டும். கலையைத் தொழிலாக்காமல், கலையாகவே பாராட்டி வரும் திரு டி. கே. ஷண்முகத்தைப் பாராட்டுகிறேன்'' என்று அவருக்குப் பொன்னாடை போர்த்தி வாழ்த்தினார். அப்போது சபையில் ஏற்பட்ட கரகோஷ ஆரவாரம் மன்றத்தையே அசைத்து விடும் போலிருந்தது. தமிழ் நாடு நாடகக் கலையில் புத்துணர்ச்சி பெற்றுத் துலங்கப் போகிறது என்பதற்கு இது ஒரு அறிகுறியல்லவா! திரு டி. கே. ஷண்முகம் சகோதரர்களுக்கு இதை விட வேறு என்ன வேண்டும்!

டி. கே. சி. யின் கடிதங்கள்

மீனம்பாக்கம்
3—2—41

பாஷாஞானம் என்பது ரொம்பவும் அபூர்வமான காரியம். இது விஷயமாக மேல் நாட்டாரும் ரொம்ப ரொம்பத் திண்டாடி இருக்கிறார்கள்.

ஆங்கில பாஷை இன்னது என்று தெரிய ஜான்ஸனுக்கு அநேக வருஷம் ஆயிற்று. பல வருஷங்கள் கழித்துத்தான் ஆங்கில பாஷையின் உண்மையான பாவம் அடிசன் எழுதிய கட்டுரைகளில் இருக்கிறது என்று தெரிய வந்தது. தான் எழுதியது எல்லாம் 'கக்கர புக்கர' பாஷைதான் என்றும் தெரியவந்தது. முன்னாலே போகிறவன் அடி பிசகிக் கீழே விழுந்தால் பின்னால் போகிறவனுக்குத் திவர்த்தி பிடித்த கணக்கு என்று சொல்லுவார்கள். ஆனால் ஆங்கில பாஷை சம்பந்தமாக அப்படிச் சொல்ல இடமில்லை. ஏனென்றால் பின்னால் வந்த ஜக்ஸனும் அடி பிசகி விழுந்தார். செடி, கொடி, களிமண் எல்லாவற்றையும் வாரிப் போட்டுக் கொண்டு தன்னை இன்னார் என்று காட்ட முன் வந்தார். கடைசியில் இதெல்லாம் தவறு, '**பேசுகிற பாஷையில்தான் எழுதவேண்டும்: பாஷையின் நயம் பாவம் எல்லாம் அப்போது தான் கைவரும்**' என்று அழுத்தமாய்ச் சொல்லி விட்டார்! இப்படியாக ஜான்ஸனும் ரஸ்கினும் வாக்குமூலங்கள் கொடுத்தும் ஆங்கிலேயருக்கு அவ்வளவாகப் பிரயோசனம் இல்லாமல்தான் போயிற்று! பத்து வருஷமாகத்தான் பேச்சு முறையிலே எழுத வேண்டும் என்று எழுத்தாளர் எல்லாரும் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். என்றாலும் யூனிவெர்ஸிடிகளில் பழைய சொக்கனே, சொக்கன் தான் என்று பெர்னார்ட்ஷா சொல்லுகிறார்.

ஆகவே பாஷையின் நயத்தை பாவத்தை எல்லாம் சரியான முறையில் பார்த்து அனுபவிப்பவர்கள் ரொம்ப சொற்பம் மேல் நாட்டில்: இங்கே அதைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்.

தமிழ் பாஷையைப் பற்றி யாராவது பேசும்போது எனக்குப் படுவது, அடடா இவர்களுக்குத் தமிழை அனுபவித்த பழக்கமே இல்லாமல் போய் விட்டதே என்றுதான். 'தமிழ் பாஷையானது, அதைச் செய்து விடும்! இதைச் செய்து விடும்!' என்றெல்லாம் விண்ணுக் கேற்றிப் புகழ்வார்கள். ஆனால் தமிழை அனுபவித்ததாகச் சொல்ல மாட்டார்கள். படைப்படை கைகள் சம்பந்தமாகவும் இப்படித்தான் சொல்லவேண்டியிருக்கிறது. அவர்களுக்கெல்லாம் பாஷையின் உணர்ச்சியில்லைதான்.

நேற்று சாயங்காலம் பி. எஸ். ஹைஸ்கூலில்......அவர்கள் தமிழ் பாஷை என்னும் நைந்து போன விஷயத்தை எடுத்துக் கொண்டு பேசினார்கள். தமிழைப்பற்றி இதுவரை இப்படி உண்மையான உணர்ச்சியோடு யாரும் பேசக் கேட்டதாக ஞாபகம் இல்லை; எல்லாம் அனுபவத்திலிருந்தே உணர்ந்த உண்மைகள். தமிழ் பாஷையை ரொம்ப அனுபவித்து இதயத்தில் வைத்துப் பாராட்டியிருக்கிறார்கள் என்பது அவர்களுடைய சரஸமான இயல்பான பாவமான பாஷையிலேயே தெரிய வந்தது. இதயத்தை ஒட்டவைத்து பாஷையை அனுபவித்து வந்ததால் பாஷையின் நயம் வேகம் எல்லாம் அவர்களுக்குத் தெரிய வந்திருக்கிறது. அவர்கள் சொன்ன ஒவ்வொரு உண்மையையும் ஆர்வத்தோடு கூடிய வார்த்தையையும் நான் ரொம்ப உணர்ந்தேன்; அனுபவித்தேன். உண்மை அனுபவத்தோடு பேசுகிற பேச்சைக் கேட்பது தற்காலம் ரொம்ப அரிதாய்ப் போய்விட்டதால் அவர்கள் பேசிய பேச்சு தேனாததை யெல்லாம் கேட்டதாகத் தோற்றியது. ரொம்ப அனுபவிக்கத் தக்கதாயும் வியக்கத் தக்கதாயுமே இருந்தது.

அவர்களுக்கு ஏற்பட்ட ஹிதப் போக்கிலேயே பேச்சு வந்து கொண்டிருந்த போதிலும், அபூர்வமான ஒரு காரமும், ஆசியமும் ஊடாடிக்கொண்டே வந்தது. கேட்க வந்தவர்களில் அநேகர் தமிழ் என்றாலே கண்ணடித்துப் பேசுகிறவர்கள் தான். அவர்களுக்கும் விஷயம் மனத்தில் தைத்திருக்கும், யோசனை பண்ணுவார்கள், தர்க்கிப்பார்கள்; ஆனால் மறந்து விடக் கச்சை கட்டுவார்கள். பூர்வவாசனை போகாதல்லவா! சரஸ்வதி தேவிதான் மறந்து போகாதபடி அருள் செய்ய வேணும்.

சங்கராந்திக்காக வீட்டை ஒட்டரையடிக்கிற மாதிரி நம்மவர் மண்டைக்குள் அடைந்திருந்த ஒட்டரையை எல்லாம் அப்புறப் படுத்தினார்கள்; புண்ணிய தினந்தான்.

அன்புள்ள

டி. கே. சிதம்பரநாதன்


உங்கள் வாழ்க்கையை
மலச் சிக்கல்
ஒரு பாரமாக்க வேண்டாம்.
தங்கரோகங்கள், உடம்பெரிச்சல், பசி மந்தம், ஜீவசக்தியின்மை, மேனியழகு மங்குதல், இவையெல்லாம் ஜீரண உறுப்புகளில் அசுத்தமிருப்பதன் நேரடியான விளைவாகும். மலச் சிக்கல் உங்கள் வாழ்க்கையை ஒரு சுமையாகக் கருதும்படி செய்ய விடக்கூடாது. ப்ருக்லாக்ஸை உட்கொண்ட மாத்திரத்தில் புதிய ஜீவசக்தியுண்டாகும். ருசியிருந்த இந்த சாக்லேட் பேதிமருந்து குடலின் வேலையை சகஜமாக்கி கழிவுப் பொருள்களை நிச்சயமாக வெளியேற்றுகிறது. இன்றிரவே ஒரு சாக்லேட் சாப்பிட்டு, காலை எவ்வளவு புத்துணர்ச்சியுடன் சக்தியுடன் விளங்குகிறீர்களென்பதை பாருங்கள்.
ஆகவே ப்ருக்லாக்ஸ் என்று கேட்டு கவனித்து வாங்குங்கள்!
FOR CONSTIPATION
TABLETS OF PHENOLPHTHALEIN B.P.
BROOKLAX
THE BRITISH
CHOCOLATE LAXATIVE
ப்ருக்லாக்ஸ்
ஒரே இரவில்
உங்களை குணமாக்கும்
(லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் லாபரேட்டரீஸ் லிட். தயாரிப்பு)
ஏஜண்டுகள்: ஓரியண்டல் மார்க்கன்டைல் ஏஜன்ஸி
99.A, அரமனைக்காரத் தெரு,
மதராஸ்-1
BMA 19


நீண்ட, அடர்ந்த
ஒளிக்கூந்தலுக்கு
இளமையின் ஒளியும் அற்புத ஜ்வலிப்பும் பெற கூந்தலுக்கு கால்கேட் பெர்ப்யூம்டு காஸ்டர் ஹேர் ஆயிலே தடவுங்கள். கூந்தலின் இயற்கை அழகை அது எடுத்துக் காட்டி எல்லோரையும் பிரமிக்கச் செய்யும்.
எக்கானமி சைஸை வாங்கி பணத்தை மிச்சப் படுத்துக.
கால்கேட்
பெர்ப்யூம்டு காஸ்டர்
ஹேர் ஆயில்
CHOA/1



தெளிந்த இதயம்

ர. சு. நல்லபெருமாள்

"டணர் ... டணர் ... டணர் ..." என்று கன்னிகா மடத்துக் கோயிலிருந்து வந்த மணியோசை திரேசாவின் செவிகளில் விழுந்தது. அந்த மணியோசையில் அவளுக்கு ஒரு பிரியம். ஒவ்வொரு நாள் மாலையும் அந்த வேதக் கோயிலின் மணியோசை கேட்கும் போதெல்லாம் திரேசாவுக்கு உடல் சிலிர்க்கும். அவளுக்கு வயது பதினைந்து இருக்கும். கபடமற்ற அவள் இதயத்தில் அந்த மணியோசை ஒரு முக்கிய இடத்தைப் பெற்று விட்டது.

கன்னிகா மடத்தைச் சேர்ந்த பள்ளிக்கு அவள் போகும் போதெல்லாம் அந்தக் கோயிலுக்கும் போய் வருவாள்.

அன்போடு கவர்ச்சியாகக் கரத்தை நீட்டி அபயம் அளிக்கும் இயேசுநாதரின் உருவத்தில் அவள் மனம் ஐக்கியப் படும்போது, தான் பள்ளிக்குப் போக வேண்டியதைக் கூட மறந்து விடுவாள்.

மாலை நேரங்களில் விளையாடி நேரத்தைப் போக்கும்போது, அந்தக் கோயிலின் மணியோசைதான் அவளைக் கோயிலுக்குப் போக வேண்டியதை நினைவு படுத்தும்.

இதே மணியோசை பிற்காலத்தில் அவளுடைய வாழ்க்கையில் பெரிய மாறுதலை ஏற்படுத்தக்கூடும் என்பது அப்பொழுது அவளுக்குத் தெரியாது.

* * *

"ராஜா, நான் கன்னிகாமடத்தில் சேரப் போகிறேன்" என்று கூறிக் கொண்டே வந்தாள் திரேசா.

ராஜா திகைத்து அவளையே பார்த்தான். முதலில் அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அவளையே வெறிக்கப் பார்த்தான். பார்த்தபடியே அசையாமல் நின்றான். ஏதோ பேச முயன்றான். தொண்டை அசைந்தது. வார்த்தைகள் வெளிவரவில்லை.

"என்ன ராஜா அப்படிப் பார்க்கிறாய்! ஆச்சரியமாயிருக்கிறதா! உண்மையாகத்தான் சொல்லுகிறேன். வருகிற வெள்ளிக்கிழமை கன்னிகாமடத்தில் சேரப்போகிறேன்."

கன்னிகா மடத்தில் சேரப் போகிறேன் என்ற திரேசாவின் வார்த்தை மாத்திரம் அவன் காதுகளில் பேரிரைச்சலாகக் கேட்டுக் கொண்டிருந்தது. ஒரு பெருமூச்சு விட்டான். உள்ளத்தில் நிகழும் உணர்ச்சிகளின் கொந்தளிப்பை எப்படி அவளிடம் கூறுவது! உணர்ச்சிகளையெல்லாம் சொல்லாக மாற்றினாலும் உலகமறியாத அந்த திரேசா புரிந்து கொள்ளவா போகிறாள்!

சரியாக விவரமறியாத பருவத்திலிருக்கும் திரேசாவுக்கு ராஜாவின் நிலை வியப்பை அளித்தது. அவள் சிரித்தாள். விளையாடினாள். வேதனையால் துடித்தான் ராஜா.

வெள்ளிக்கிழமை! திரேசா கன்னிகா மடத்தில் சேர்ந்ததற்காகக் கன்னிகா மடக் கோயிலில் விசேஷ ஆராதனைகள் நடந்தன. மாலையில் அந்த மணி ஒலித்தபோது ராஜா, அந்த ஒலியை உற்றுக் கேட்டான். இதயத்தை இறுக்கிப் பிழியும் வேதனையை உணர்ந்தான்.

இதே மணியோசை அவனுக்கு இன்பத்தைக் கொடுத்தது முன்பு.

முன்பெல்லாம் மணியோசை கேட்ட சிறிது நேரத்துக்கெல்லாம் திரேசா ராஜாவிடம் ஓடி வருவாள்.

"ராஜா! கோயிலுக்குப் போகிறேன்" என்பாள். அவளுடைய கொஞ்சும் குரலில் மெய்சிலிர்த்து நிற்பான், ராஜா.

அதே மணியோசை இன்று ராஜாவின் இதயத்தையே சுக்கு நூறாக நொறுக்கிச் சிதைத்து விட்டதே.

ராஜா, காதலை உள்ளத்திலேயே ஒளித்து வைத்திருந்தான். அவள் உணரச் சொல்லவுமில்லை. அவளைப் பொறுத்த வரையில் ராஜா ஒரு சிநேகிதனாகத்தான் இருந்தான். அவள் அவனைக் காதலனாக எண்ணவுமில்லை. அப்படி எண்ணி இன்புறும் பக்குவத்தை அவள் அந்த வயதிலும் பெறவேயில்லையே. சூது வாது அறியாது கபடமற்று வளர்ந்த திரேசாவுக்குத் தன்னை ஒரு ஜீவன் காதலிக்கிறது என்பது தெரியவே தெரியாது.

காதல் நிறைவேறாது புகைந்து விட்டாலும் காதலியின் பக்கத்திலாவது இருந்து ஓரளவு சாந்தி பெற முயன்றான் ராஜா. கன்னிகா மடச் சொத்துக்களை மேற்பார்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டான். அவனுடைய அலுவலகம் கன்னிகா மடத்துக்குள்ளேயே இருந்தது.

தினமும் திரேசாவைக் கண்டான். அந்தக் காட்சியில்தான் அவன் வேதனை சிறிது குறைந்தது. இல்லை, குறைந்ததாக எண்ணிக் கொண்டான். ஆனால் உள்ளத்தைத் தகிக்கும் காதல் அவனை உருக்கிக் கொண்டே வந்தது.

கன்னிகா மடத்தின் சட்ட திட்டங்களின்படி கன்னிகா மடத்தைச் சேர்ந்த பெண்கள் சரியான காரணமில்லாமல் எந்த ஆணுடனும் பேசவோ பழகவோ கூடாது. இந்த விதிமுறைகள் திரேசாவைப் பாதிக்கவில்லை. ஆனால், ராஜா! ஏக்கத்தின் உருவமாகவே வாழ்ந்து வந்தான்—சாகவில்லை!

மூன்று வருடங்கள் கழிந்தன.

திரேசாவின் போக்கிலே பல மாறுதல்கள்! அவளையே அவளால் சரியாகப் புரிந்துகொள்ள முடியாத ஒரு நிலை! இன்ப நினைவுகளும், ஊறிப் பெருகி உள்ளத்திலேயே அடங்கிச் சுழலும் பருவம். இயேசுநாதரின் முன் மண்டியிட்டுப் பிரார்த்திக்கும்போது; அவர் பக்கத்தில் கொளுத்தி வைக்கப்பட்டிருக்கும் மெழுகு வர்த்தியின் சுடரையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருப்பாள். உதடுகள் பிரார்த்தனை கீதத்தைப் பாடும். கண்கள் ஒளிச்சுடரைப் பார்க்கும். கைகள் கூப்பியே இருக்கும். ஆனால் மனம்! அது நிலை கெட்டு ஓடுகிறதே!

எங்கு ஓடுகிறது! அதுதானே தெரியவில்லை. மனத்தை எதிலும் ஒருமைப்படுத்த முடியாத ஒரு நிலை! தன்னையே உணர முடியாது தவித்தாள். அவள் இதயம் தவித்தது. யாரிடம் சொல்லித் தெளிவு பெறுவது! எப்படிக் கூறுவது! இன்னதென்று தானே தெரிந்து கொள்ளவில்லையே! பிறகு, எப்படி மற்றவர்களிடம் கூறி ஆறுதல் பெறுவது!



எதிலும் சிரத்தை யில்லாமல் எதையோ பறிகொடுத்தவளைப் போல வாடி வதங்கினாள்.

அந்த ஓசையின் கவர்ச்சியிலேயே கோவிலை நோக்கி ஓடி விடுவாள். இயேசுவின் முன் மண்டியிட்டுக் கண்ணீர் வடிப்பாள்.

உலகம் இன்னது, வாழ்க்கை எப்படியிருக்கும் என்பதையெல்லாம் ஓரளவு கூட உணருமுன்னே இயேசுவுக்குத் தன்னை அர்ப்பணித்து விட்ட திரேசாவினால், தன்னுள்ளே ஊறிப் படரும் உணர்ச்சிகளைச் சிறிதும் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

அவள் கண்கள் அடிக்கடி எதையோ நாடியது. எதை! அவளுக்கே தெரியாதே!

மனசை அலைய விடாமல் தன்னுள்ளேயே வைக்க முயன்றாள். கன்னி மடத்தின் அலுவல்களில் அதிகமாகச் சிரத்தை காட்ட முயன்றாள். முடிய வில்லை.

கன்னி மடத்தில் வளரும் அனாதைச் சிறுவர்களிடம் அன்பு செலுத்தினாள். அந்தக் குழந்தைகளின் கபடமற்ற சிரிப்பில் தன்னையே அர்ப்பணிக்க நினைத்தாள். அதிலும் அவள் தோல்வி கண்டாள்.

ஒரு நாள் தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்தாள் திரேசா. ஒரு பூச்செடியின் பக்கத்தில் ஒரு தாள் கிடந்தது. குனிந்து எடுத்தாள். ஏதோ ஒரு புத்தகத்திலிருந்து கிழிந்த தாள் அது. காற்று வாக்கில் பறந்து வந்து கிடந்த அதை எடுத்துப் படித்தாள்.

"படைப்புத் தெய்வத்துக்கு ஓரே ஒரு ஆசை. காதலைப் பூரணமாக அறிய வேண்டும் என்ற ஆசைதான்.

உலகத்தில் எல்லா ஜீவராசிகளையும் படைத்தாகி விட்டது. ஆனால் படைப்புத் தெய்வத்துக்குத் திருப்தியில்லை. யோசித்தது. கடைசியில் தன் சக்தியை யெல்லாம் பிரயோகித்து மனிதனைப் படைத்தது.

மனிதன் பிறந்து இயற்கையிலேயே வளர ஆரம்பித்தான். இயற்கைதான் அவனுக்கு எல்லாவற்றையும் கற்றுக் கொடுத்தது.

மனிதன் வாலிபப் பருவத்தை அடைந்தான். அவன் நெஞ்சிலே புரிந்துகொள்ள முடியாத ஒரு உணர்ச்சி உதயமாகியது. அவன் மனம் அமைதியை இழக்க ஆரம்பித்தது. எதிலுமே பற்றற்ற நிலையிலிருந்தான்.

இளந் தென்றல் அவன் உடலிலே ஒரு புல்லரிப்பை உண்டாக்கியது. நிலவொளியை வெறித்துப் பார்த்தவாறே யிருப்பான். இனிமையான சத்தம் கேட்டால் ஆவலோடு செவி கொடுத்துக் கேட்பான். குயிலிசையும், மரங்களினூடே சீட்டியடித்துக் கொண்டு வரும் இளம் தென்றலின் ஓசையும் அவனுடைய உள்ளத்திலே ஒரு வெறியைக் கிளப்பும். இரண்டு பறவைகள் ஆணும் பெண்ணுமாக உட்கார்ந்து கொஞ்சுவதை ஆச்சரியத்துடன் பார்ப்பான்.

அந்த ஆதி மனிதன் வசித்து வந்த காட்டுக்குப் பக்கத்துக் காட்டில் ஆதிப் பெண் வசித்து வந்தாள். படைப்புத் தெய்வம் இருவரையும் பிரித்தே வைத்திருந்தது. திடீரென்று இருவரையும் சந்திக்க வைக்க வேண்டும் என்பது தான் அந்த தெய்வத்தின் நோக்கம். அவளும் கன்னிப் பருவத்தை அடைந்தாள். அவள் இதயத்தில் தீராத ஒரு தாகம் ஏற்பட்டது. அந்தத் தாகத்தின் கொடுமையிலே அவள் திணறினாள். நிலவை வெறிக்கப் பார்த்தாள். உணர்ந்து கொள்ள முடியாத அந்த இதயதாகம் பெருகிக் கொண்டே வந்தது. அதன் வேகத்தைத் தாங்க முடியாது கண்ணீர் வடித்துக் கரைந்தாள்.

ஒருநாள் பூர்ண சந்திரன் வானத்திலே வந்து கொண்டிருந்தான். அந்த ஒளி ஆதி மனிதனுக்கும், ஆதி பெண்ணுக்கும் வெறியை ஊட்டிக் கொண்டிருந்தது. இருவரும் தங்களை மறந்த நிலையில் தாங்கள் இருந்த காட்டை விட்டுப் புறப்பட்டு விட்டார்கள்! எங்கே போகிறோம் என்று இருவருக்கும் தெரியாத ஒரு பயணம்! ஆணும் பெண்ணும் ஒருவரை நோக்கி ஒருவர் வந்து கொண்டிருந்தார்கள்.

ஒரு திறந்த வெளி. நிலவு காய்ந்து கொண்டிருந்தது. படைப்புத் தெய்வம் ஆர்வத்தோடு அந்த இடத்தில் காத்துக் கொண்டிருந்தது. அதுவரை காண ஆசை கொண்ட ஒரு பெரும்

பல்டாக்டர் அங்கீகரித்த இவ்வழியில் பற்சிதைவைத் தடுக்க முயலுங்கள்

2-நிமிஷ கால்கேட் பழக்கத்தை 4,000க்குமேல் பல் டாக்டர்கள் அங்கீ கரிக்கின்றனர்





✔ இனிய சுவாசம்!

✔ ஒளிவீசும் பற்கள்!

✔ சொத்தை குறைகிறது!


...ஆம், இம்மூன்றையும் பெற கால்கேட் டூத் பவுடரை, வழக்கமாக உபயோகியுங்கள்!

- சாப்பிட்டவுடன் கால்கேட் டூத்பவுடரால் பிரஷ் கொண்டு 2-நிமிஷம் தேய்க்கவும்.
- பல்லின் முன்புறம், பின்புறம் நுனிபாகம் மூன்றையும் தேய்க்கவும்.
- எப்பொழுதும் ஈறிலிருந்து எதிர்த் திசையில் தேய்க்கவும்.

ஜயண்ட் சைஸ் லாபகரம்

கால்கேட் டூத் பவுடர்

TPG/15



'அனசின்'

விஞ்ஞான முறையில்


நான்கு மருந்துகளின்

ஒரு கலப்பு.



'அனசின்' விஞ்ஞான முறைப்படி சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். அவை நரம்புகளின் முக்கிய சேர்க்கை பாகங்களில் கூட்டாக வேலை செய்து விரைவில் வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, மற்றும் தசை நார்களில் நோவு இவற்றை நீக்கும். அனசினில் அடங்கிய சில நான்கு மருந்துகள் —

1. கொயினா: ஜுரத்தடுப்புகுணமும், பலவிருத்தி செய்வதற்கும் பிரசித்தி பெற்றது. ஜுரத்தை குறைப்பதில் மிகத் துரிதமானது.
2. காப்பின்: பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் மிதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப்பட்டிருக்கிறது.
3. பினஸிடின்: ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத் தன்மைகளுக்கு பெயர் பெற்றது.
4. ஆஸிடில் ஸாலிஸிலிக் ஆஸிட்: தலைவலி அது போன்ற மற்ற வலிகளையும் போக்குவதற்கு மிகவும் உபயோகமுள்ளது.



அனசினிலுள்ள இந்த நான்கு மருந்துகளும் ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். 'அனசின்' ஹிருதயத்திற்கு தீங்கு விளைவிப்பதோ அல்லது வயிற்றுக்கு கோளாறு உண்டாக்குவதோ கிடையாது. வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி மற்றும் தசைகளில் வலி முதலியவற்றிலிருந்து விரைவிலும், பத்திரமாகவும், நிச்சயமாகவும் நிவாரணம் பெற எப்பொழுதும் அனசினையே கேட்டு வாங்குங்கள்.

லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது.

A-41

சம்பவத்தைக் காணத்தான் காத்திருந்தது. அந்தத் திறந்த வெளியில் ஒரு மூலையில் பெண் வந்து கொண்டிருந்தாள். எதிர்த் திசையில் ஆண் வந்து கொண்டிருந்தான். இருவருக்கும் இடையே உள்ள தூரம் குறைந்து கொண்டே வந்தது. திடீரென்று ஒருவரை நோக்கி ஒருவர் ஓடி வந்தனர்! இருவரும் நெருங்கி விட்டார்கள்! இருவரும் பார்த்தார்கள். வேறு எதையும் பார்க்கவில்லை. இருவர் கண்களுமே ஒன்றை யொன்று பார்த்துக் கொண்டன. இருவர் உதடுகளும் பேசத் துடித்தன. ஆனால் என்ன பேசுவது! அவர்களுக்குப் பேசவே தெரியாதே. இயற்கை அவர்களுக்குப் பேசக் கற்றுக் கொடுக்க வில்லையே!

இருவரும் பேசாமல் பேசினார்கள்! ஆம்! பேசினார்கள்! இருவர் கண்களும் பேசிக் கொண்டன. பேசினதைப் புரிந்து கொண்டு பதிலும் கொடுத்தன. அது என்ன மொழி! விழி மொழி பேசுமா! முதன் முதலில் அன்று பேசியது! வாய் பேச வேண்டியதை யெல்லாம் கண்கள் பேசி விட்டன. படைப்புத் தெய்வம் அந்தக் காட்சியைக் கண்டு உள்ளம் சிலிர்த்து நின்றது. அவர்கள் கண்கள் பேசிய பாஷையை உற்றுக் கேட்டது. அந்த பாஷை நயத்தை அந்தத் தெய்வத்தாலே வர்ணிக்க முடியவில்லை. அந்த தெய்வத்தின் மனம் நிறைந்து விட்டது. இனி அதற்கு அங்கு என்ன வேலை! அந்த ஆணையும் பெண்ணையும் அங்கேயே விட்டு விட்டுச் சென்று விட்டது."

ஆர்வத்தோடு திரும்பிப் பார்த்தாள் திரேசா. அதற்குமேல் ஒன்றுமே இல்லை—அந்த ஆணும் பெண்ணும் சந்தித்தார்கள். பிறகு...பிறகு... அவளுக்கும் புரியவில்லை.

சுற்று முற்றும் பார்த்தாள். அதோடு சேர்ந்த தாள் ஏதாவது கிடக்கிறதா என்று தேடினாள். தோட்டம் முழுவதும் தேடினாள். வேறு தாள் இல்லை. பக்கத்திலிருந்த பாறையின் மேல் உட்கார்ந்தாள். திரும்பவும் கையிலுள்ள தாளைப் பார்த்தாள். படித்தாள். நிலைகொள்ளாமல் தவித்தாள்.

அன்று இரவு இயேசுவின் பெருமையை வழக்கம் போல் பாடிக் கொண்டு சயன அறைக்குள் நுழைந்தாள். உறங்க வில்லை. அந்தத் தாளைப் படித்தாள்; மடித்துத் தலையணைக்கு அடியில் வைத்தாள்.

வாழ வேண்டிய பருவத்தில் வாடுகிறேனே. பரமண்டலத்திலிருக்கும் பிதா நான் இப்படித் துடிக்க வேண்டும் என்றுதான் நினைக்கிறாரா! அதற்காகத்தான் என்னைப் படைத்திருக்கிறாரா! அகில உலகங்களைப் படைத்து அதோடு உணர்ச்சி அலைகளையும் கூடவே சேர்த்துப் படைப்பதின் பொருள் என்ன!— இந்த எண்ணங்களைச் சுழல விட்டவாறே படுக்கையில் புரண்டாள்; உறங்க வில்லை.

"டணர்......டணர்......டணர்..." அதிகாலையில் கோயிலின் மணியோசை கேட்டது. இல்லை, இல்லை. இயேசுவின் அழைப்பு கேட்டது. எழுந்து வேகமாக ஓடினாள், இயேசுவின் சன்னதிக்கு.

கோயிலை விட்டு வெளியே வந்த பொழுது திரேசாவின் மனம் தெளிந்திருந்தது. நெஞ்சை விட்டுப் பெரிய பாரம் ஒன்று இறங்கியதைப் போன்ற ஒரு உணர்ச்சி. தன் அறைக்குப் போகாமல் தென் திசையை நோக்கி நடந்து தோட்டத்துக்குள் நுழைந்தாள். மாமரத்தடியில் கன்னிகா மடச் சொத்துக்களின் மானேஜர்—ராஜா—உட்கார்ந்திருந்தான். பல நாட்களுக்குப் பிறகு அன்றுதான் சந்திக்கிறாள். அவன்! தினமும் அவளைப் பார்த்திருக்கிறான். தூரத்திலிருந்தே பார்த்துக் கொள்வான். பெண்கள் வசிக்கும் இடத்துக்கு அவன் வரக் கூடாது. இது கன்னிகா மடத்தின் விதிகளில் ஒன்று. தோட்டத்துக்குள்ளும் அவன் வரக் கூடாதுதான். ஆனால் மன வேதனையின் அழுத்தத்தினால் தன் நிலை மறந்து அந்தத் தோட்டத்துக்குள் அவன் வந்து விட்டான்.

எதிர்பாராமல் தான் ராஜாவைச் சந்தித்தாள். அவனைக் கண்டவுடன் அவள் முகம் மலர்ந்தது. பேசத் துடித்தாள். ஆசையோடு "ராஜா" என்று அழைக்க ஆவல் கொண்டாள். ஆனால் சற்றுத் தள்ளிப் போய்த் திரும்பிப் பார்த்தாள். ராஜா அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவள் ஏன் திரும்பிப் பார்த்தாள்! அவளை மீறிய செய்கை அது; அவள் பார்வையில் அந்த உணர்ச்சியும் இல்லை.

ஐயோ! ராஜாவின் கவர்ச்சி மிகுந்த பார்வை எங்கே! ஏன் இப்படி எலும்பும் தோலுமாக இருக்கிறான்! எதுவுமே அவளுக்கு விளங்க வில்லை. போய் விட்டாள்.

அன்று இரவு அவள் நினைவெல்லாம் ராஜாவையே சுற்றி வந்தது.

எவ்வளவு நல்லவன்! எவ்வளவு அழகாயிருந்தான்! எவ்வளவு அன்பு வைத்திருக்கிறான்! அவனைப் பார்க்க வேண்டும் போலிருக்கிறதே!

மறு நாள் காலையில் கோயிலுக்குப் போய் விட்டுத் திரும்பும் போது தோட்டத்துக்குள் நுழைந்தாள் திரேசா. ராஜா! அவன் அங்கு இல்லை. ஏமாற்றம் உள்ளத்தை வாட்டியது.

தினமும் தோட்டத்துக்குப் போனாள். ஆனால் ராஜாவைக் காண முடிய வில்லை. ராஜாவின் அலுவலகத்துக்கே போய்ப் பார்த்தால்!... அது சட்ட விரோதமாயிற்றே!

தலையணைக்குக் கீழ் வைத்திருந்த அந்தத் தாளை—அதுதான் காதல் தோன்றிய கதை இருந்ததே அந்தத் தாள்தான், தினமும் படித்தாள். வேதனைக்குக்கேட்கவா வேண்டும்!

ராஜா என்னைக் காதலிக்கிறானா! எப்படிக் காதலிப்பான்! கன்னிகா ஸ்திரீயை யார் காதலிப்பார்கள்! தெய்வமே, இந்த உலகத்தில் நான் காதலையே பெற முடியாதா! இதுதான் உன் முடிவா!

அழுதாள். அழுகையால் உள்ளம் ஒடுங்க வில்லை. வேதனையும் கரையவில்லை.

அன்று வியாழக்கிழமை. மாலை தோட்டத்தில் சுற்றிக் கொண்டிருந்தாள் திரேசா. மறுநாள் கிறிஸ்துமஸ் பண்டிகை. கையில் அந்தத் தாள் இருந்தது. அவளைத் தேடிக் கன்னிகா மடத்துத் தலைவி அங்கு வந்தாள். அவள் வருவது தெரிந்ததும் கையிலிருந்த தாளைக் கைக்குள்ளேயே மடக்கி ஒளித்து வைத்துக் கொண்டாள்.

"திரேசா, நீ உடனே கீழ் கட்டடத்துக்குப் போ. நம்ம மானேஜர், ராஜா உடல் நலம் சரியில்லாமல் படுக்கையிலிருக்கிறான். அவனுக்குத் துணைக்கு யாருமே இல்லை. எல்லோரும்

நாளைப் பண்டிகைக்காகப் பல வேலைகளிலிருக்கிறார்கள். போ. நீ போய் அவனுக்குத் துணை இரு" என்றான் வந்தவன்.

திரேசாவுக்கு உடல் சிறிது நடுங்கியது. ராஜா படுக்கையிலிருக்கிறான் என்று கேட்டதுமே திரேசாவின் கண்களில் நீர் குளமாக நிறைந்து விட்டது.

"போ. தாமதிக்காதே. இன்னும் கொஞ்ச நேரத்தில் டாக்டர் வருவார். சீக்கிரம் போ" என்று துரிதப்படுத்தினான்.

ராஜா படுத்திருந்த அறையினுள் நுழையும் போது திரேசாவுக்கு உடலெல்லாம் வியர்த்தது. அப்பொழுதும் அவள் கையில் அந்தத் தாள் இருந்தது. ராஜா படுத்திருப்பதைக் கண்டதும் அவனிடம் ஓடிச் செல்ல வேண்டுமென்று நினைத்தாள். நினைத்து முடிப்பதற்குள் அவள் கால்களை விரைந்து விட்டன!

"ராஜா......ராஜா......"

அவள் கூப்பிட்டாள். அந்தக் குரலில் தான் எவ்வளவு ஏக்கம்! எவ்வளவு கனிவு! அவள் அவனை அப்படிக் கூப்பிடுவானேன்!

ராஜா கண்களைத் திறந்தான். பரக்கப் பரக்க விழித்தான்.

"ராஜா.........ராஜா........." அவள்தான் கூப்பிட்டாள். அவளை உற்று நோக்கினான்.

"திரேசா......" அவன் முனகினான்.

பல வருடங்களுக்குப் பிறகு அவளை ஒரு ஆண் அப்படிக் கூப்பிடுவதை அப்பொழுது தான் கேட்டாள்.

"திரேசா......"

அந்தக் குரலில் திரேசாவின் உடல் சிலிர்க்க ஆரம்பித்தது.

"என்ன வேண்டும் ராஜா!" இதை ஏனோ அவள் கேட்டாள். ராஜாவினால் பேச முடியவில்லை. பல வருடங்களாக உள்ளத்திலேயே போட்டுப் புதைத்து வைத்திருந்த ஒரு இரகசியத்தை அவளிடம் சொல்ல முயன்றான். முடியவில்லை. தன் சக்தியை யெல்லாம் ஒன்று திரட்டிப் பேசினான்.

"திரேசா......உன்னை......உன்னைக் காதலிக்கிறேன்." அந்த வார்த்தையைக் கேட்ட திரேசா ஒரு கணம் நடுங்கினாள். உணர்ச்சி அவள் உச்சியிலிருந்து பாதம் வரை ஒரு கணம் பரவி ஓடியது. "ராஜா..." அவள் தொண்டையிலிருந்து சொற்கள் வெடித்தன. அவள் குரல் கேட்கு முன்னே ராஜாவின் உயிர் பிரிந்து விட்டது. உள்ளத்திலிருந்தே உறுத்திய இரகசியத்தை வெளியிட்டுவிட்டுத் தன் கடமை தீர்ந்து விட்டது என்ற மன நிறைவில், அவன் மண்ணை விட்டே போய் விட்டான். அவன் தலைமாட்டிலிருந்த மெழுகுவர்த்தி மாத்திரம் ஆடாமல் அசையாமல் எரிந்துகொண்டிருந்தது.

திரேசாவினால் உணர்ச்சிகளின் கொந்தளிப்பைத் தாங்கவே முடியவில்லை.

கதறினாள். அழுதாள்.

தன்னைக் காதலித்த அந்த ஒருவனை—ராஜாவின் உயிரற்ற உடலை — அணைக்கக் கைகளை நீட்டினாள். நெருங்கினாள்! அவன் முகத்தை உற்று நோக்கினாள். அவள் கண்களில் பெருகிய கண்ணீரின் வழியாக அவன் முகத்தைப் பார்த்தாள். அவன் முகத்தருகே குனிந்தாள். அவள் கண்ணீர் அவனுடைய கன்னத்தில் விழுந்து சிதறியது.

"டணார்......டணார்......டணார்......"

கோயிலின் மணியோசை கேட்டது. மின்சார அதிர்ச்சி பெற்றவளைப் போல் நிமிர்ந்தாள். அவள் உடல் வியர்த்து விட்டது. உணர்ச்சிகளின் கொந்தளிப்புக்கு ஆளாகி விட்ட அவள் மேனி நடுங்கிக் கொண்டிருந்தது.

"டணார்.........டணார்......"

உற்றுக் கேட்டாள். மணியோசை — இல்லை. இயேசுவின் அழைப்பு கேட்டது.

"வா............வா......"

சற்று நேரம் அசையாமல் அந்த ஓசையைக் கேட்டாள். ராஜாவைத் திரும்பிப் பார்த்தாள். மூடியே இருந்த தன் இடது கையை விரித்தாள். அந்தத் தாள் கசங்கி அவள் கையிலேயே இருந்தது.

"டணார்......டணார்......"

மணியோசை கேட்டுக்கொண்டே யிருந்தது.

அலறித் துடித்த அவள் இதயம் அந்த மணியோசையில் அடங்கி விட்டது. கண்களில் தேங்கி வழிந்த கண்ணீர் வற்றி விட்டது. பெருமூச்சுக்கூட நின்று விட்டது.

கசங்கியிருந்த அந்தத் தாளும் அவள் கையிலிருந்து நழுவியது. அவளது காலடியில்விழுந்து கிடந்த அந்தத் தாளை அவள் கவனிக்கவே இல்லை. அவளுக்கு இனி அது அவசியமும் இல்லையே.

அவள் இதயத்தைக் கலக்கியதே அந்தத் தாள்தானே!

எதையுமே உள்ளத்தில் அலைய விடாமல் தெளிந்த இதயத்தோடு இயேசுவின் சன்னிதியை நோக்கித் திரேசா நடந்தாள்!

ஸ்போர்ட் அண்டு பாஸ்டைம்

விளையாட்டு என்பது பார்ப்பதற்கும் ஆடுவதற்குமே உகந்த விஷயம் என்று எண்ணி வந்தோம். அதைவிட நடந்த ஆட்டத்தைப் பற்றியும், பெரிய விளையாட்டுக்காரர்களின் 'டெக்னிக்கு'களைப் பற்றியும் படிப்பதில் மக்கள் மிகுந்த ஆர்வம் கொள்ளத் தொடங்கியிருக்கின்றனர். இப் புது வகை இலக்கியத்துக்கு ஸ்போர்ட் அண்டு பாஸ்டைம் பத்திரிகை ஆங்கிலத்தில் அருந்தொண்டு புரிந்து வருகிறது. செப்டம்பர் 10-ம் தேதி, ஒரு விசேஷ மலர் வெளியிட்டிருக்கின்றனர். அதில் பல விளையாட்டுக்களைப் பற்றிய ருசிகரமான கட்டுரைகள் இருப்பதுடன், பிரான்ஸிஸ், நிருபால் ஸிங் முதலிய பிரபல விளையாட்டுக்காரர்களின் மூவர்ணப் படங்களும், சந்தஉல்மாலி, சாவித்திரி, தேவ் ஆனந்த், நர்கிஸ் போன்ற பல சினிமா நட்சத்திரங்களின் மூவர்ணப் படங்களும் இடம் பெற்றிருக்கின்றன. இம் மலர் கண்ணுக்கும் கருத்துக்கும் நல்ல விருந்தாய் அமைந்துள்ளது. விலை ரூ. 1—4—0

பர்மா ரமணி

அழ. வள்ளியப்பா

11. கண்ணாடி அறை!

போலீஸார் பிடித்துவந்த பையன் ரமணி இல்லை என்று தெரிந்ததும், முதலாளி மோகன ரங்கம், "நல்ல வேடிக்கை! புலியைப் பிடிக்கப் புறப்பட்டுப் போனவன், எலியைப் பிடித்துக் 'கொண்டு இறுமாப்போடு வந்தானாம். அந்தக் கதையாகத்தான் இருக்கிறது" என்று கூறிவிட்டு, சப் - இன்ஸ்பெக்டரைப் பார்த்து, "சார், அந்த ரமணிப் பயலை விடக்கூடாது. அவன் மகா அயோக்கியன்! சுலபமாய்க் கிடைக்கமாட்டான்" என்றார்.

"உங்களுக்கு அந்தக் கவலையே வேண்டாம். அவன் எங்கிருந்தாலும் கூடிய சீக்கிரம் கொண்டு வந்து விடுவோம்" என்று தைரியம் சொன்னார் சப் - இன்ஸ்பெக்டர்.

பிறகு மதுரநாயகம் சப்-இன்ஸ்பெக்டரிடம் இருந்த ஆனந்தனின் கைக் கடிகாரத்தையும், பேனாவையும் வாங்கிக் கொண்டு, "நாங்கள் வருகிறோம், சார், கொஞ்சம் கவனம் இருக்கட்டும்" என்று கூறி விட்டுப் புறப்பட்டார். முதலாளி மோகனரங்கமும், ஆனந்தனும் பின்தொடர்ந்தனர்.

மூவரும் காரில் ஏறி நாடகக் கொட்டகைக்குச் சென்றார்கள். அவர்களது வரவை ஆவலோடு எதிர்பார்த்து நின்ற வேலைக்காரர்கள் விஷயத்தை அறிந்ததும் ஏமாந்து போனார்கள்.

காரை விட்டுக் கீழே இறங்கியதும் முதல் வேலையாகத் திருச்சியிலுள்ள அத்தானுக்கு மதுரநாயகம் ஒரு தந்தி கொடுத்தார். அதில், 'ஆனந்தன் சென்னைக்கு வந்திருக்கிறான். இன்று இரவே திருப்பி அனுப்புகிறேன்' என்று அறிவித்தார். அறிவித்தபடி, அன்று இரவு வண்டியிலேயே ஆனந்தனை ரயில் ஏற்றி அனுப்பி வைத்தார்.

• • •

இரண்டு நாட்கள் எப்படியோ ஓடி விட்டன. இன்னும் ரமணியைப் பற்றிய தகவலே இல்லை. மூன்றாவது நாள் காலை மணி பன்னிரண்டு இருக்கும். மானேஜர் மதுரநாயகம் நாடகசபாவை விட்டுப் புறப்பட்டார். நேராக எழும்பூரிலுள்ள போலீஸ்-கமிஷனர் ஆபீசுக்குச் சென்றார்.

என்ன விஷயம்? ரமணியைப் பற்றி ஏதாவது தகவல் வந்ததா? அதெல்லாம் இல்லை. சபா விஷயமாகத் தான் அங்கு சென்றார். நாடகசபாவுக்கு ஒரு வருஷத்துக்குத்தான் முதலிலே 'லைசென்ஸ்' கொடுத்திருந்தார்கள். அதை இன்னொரு வருஷத்துக்குப் புதுப்பிக்க வேண்டுமென்று பத்து நாட்களுக்கு முன்பு மனுக் கொடுத்திருந்தார் மதுரநாயகம். போலீஸ்-கமிஷனர் அநுமதி கொடுத்து விட்டாராம். ஆனாலும், 'லைசென்ஸ்' கைக்கு வரவில்லை. அதை வாங்கிக் கொண்டு வரவே நேராகப் புறப்பட்டார் மதுரநாயகம்.

போலீஸ் - கமிஷனர் ஆபீஸின் வெளி வாயிலைத் தாண்டி உள்ளே சென்றார். சிறிது தூரம் சென்றதும், இடது பக்கமாக இருந்த அறை அவரது கவனத்தைக் கவர்ந்தது. அது ஒரு கண்ணாடி அறை. அதன் உள்ளே சைக்கிள், கடிகாரம், குல்லாய், பூட்டு, புத்தகம் இப்படிப் பல சாமான்கள் இருந்தன. அறையின் வெளிப் பக்கத்தில் ஒரு 'போர்டு' தொங்கிக் கொண்டிருந்தது. அதில் 'காணாமல் போன சாமான்கள் அறை' என்று எழுதப்பட்டிருந்தது.

ஒருவர் வழியிலே ஒரு சாமானைத் தவறுதலாகப் போட்டு விட்டுப் போய் விடுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அது வேறொருவர் கைக்குக் கிடைக்கிறது. அவர் யோக்கியமானவர். சாமானுக்குச் சொந்தக்காரரிடம் கொடுத்து விட நினைக்கிறார். ஆனால், சொந்தக்காரர் யார் என்று தெரியவில்லை. உடனே பக்கத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனில் கொடுத்து அதன் சொந்தக்காரரிடம் சேர்க்கச் சொல்லுகிறார். அங்கிருந்து அந்த சாமான் போலீஸ்-கமிஷனர் ஆபீசுக்கு வருகிறது. அதைக் கண்ணாடி அறையில் வைக்கிறார்கள். சாமானுக்குச் சொந்தக்காரர் கண்ணில் படவேண்டுமென்று தான் அப்படி வைக்கிறார்கள். இதே போல், திருடர்களிடமிருந்து பறிமுதல் செய்த சாமான்களில் சில இங்கே வருவதும் உண்டு. திருடனுக்கு யாரிடமிருந்து எடுத்தோம் என்பது சரியாகத் தெரியாது. சாமானைப் பறி கொடுத்தவரும் போலீஸில் உடனே 'ரிப்போர்ட்' கொடுத்திருக்க மாட்டார். யாரிடம் சாமானைக் கொடுப்பது? கொடுப்பதற்கு வழியில்லாததால், அதையும் கண்ணாடி அறையில் வைத்து விடுகிறார்கள்.

இப்படிப் பல சாமான்கள் வைக்கப் பட்டிருந்த அந்தக் கண்ணாடி அறையின் அருகே சென்று ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டே வந்தார் மதுரநாயகம். இருந்தாற் போலிருந்து, "ஆ! அதோ இருக்கிறதே என் பேனா!" என்று அவர் வாய் விட்டுக் கூறிக் கொண்டே நன்றாக உற்றுப் பார்த்தார்.

ஆம், அது அவருடைய பேனாவே தான்! தங்க மூடி போட்டிருக்கிறது. அடிப்பாகம் கறுப்பாயிருக்கிறது. மேலே 'சேகர் அன்பளிப்பு' என்றும் எழுதப் பட்டிருக்கிறது. சந்தேகமே இல்லை. அவருடையதேதான்! ஆனால், அது எப்படி அங்கே வந்தது? அது தான் மதுரநாயகத்துக்குச் சிறிதும் புரியவே இல்லை.

கண்ணாடி அறைக்குள் பேனாவைக் கண்டதும், முதலாளியின் கைக்கெடிகாரமும் அங்கே இருக்கிறதா என்று தேடிப் பார்த்தார் மதுரநாயகம். அது அங்கே இல்லை. நமது பேனா எப்படி இங்கு வந்தது? ஒருவேளை ரமணியிடமிருந்து பிடுங்கியிருப்பார்களோ! அப்படியானால், அது ஏன் இங்கு வர வேண்டும்? என்றெல்லாம் யோசனை செய்தார். சரியாக விளங்கவில்லை.

'சரி, எதற்கும் உள்ளே போய் விசாரித்துப் பார்க்கலாம்' என்று எண்ணித் திரும்பினார். அப்போது, அங்கே ஒரு போலீஸ்காரர் வந்தார். "ஒரு விஷயம்" என்று தமது ஆள்காட்டி விரலை நீட்டிக் கொண்டே அந்தப் போலீஸ்காரரின் அருகே சென்றார்.

"என்ன விஷயம்?" என்று கேட்டார் போலீஸ்காரர்.

"காணாமல் போன என்னுடைய பேனா ஒன்று இந்தக் கண்ணாடி அறையில் இருக்கிறது. இது சம்பந்தமாக நான் யாரைப் பார்க்க வேண்டும்?" என்று கேட்டார் மதுரநாயகம்.


உடனே அந்தப் போலீஸ்காரர் மதுரநாயகத்தை அழைத்துக் கொண்டு ஓர் அறைக்குள்ளே சென்றார். அங்கிருந்த அதிகாரியைக் காட்டி, "இவரிடம் தான் கேட்க வேண்டும்" என்றார்.

மதுரநாயகம் அந்த அதிகாரியின் முன்னால் போய், "நமஸ்காரம்" என்றார். உடனே அவர் எதிரிலே இருந்த நாற்காலியில் உட்காரச் சொன்னார். மதுரநாயகம் உட்கார்ந்ததும், "என்ன விஷயமாக வந்தீர்கள்?" என்று அதிகாரி கேட்டார்.

"போன செவ்வாய்க்கிழமை சாயங்காலம் என்னுடைய 'எவர்-ஷார்ப்' பேனா காணாமல் போய் விட்டது. அது இப்போது இங்குள்ள கண்ணாடி அறையில் காணாமல் போன சாமான்களுடன் இருக்கிறது. அது எப்படி இங்கே வந்தது என்பது தெரியவில்லை. அதை நான் திரும்பப் பெற வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்? தயவு செய்து சொல்ல முடியுமா?" என்று கேட்டார் மதுரநாயகம்.



"எப்போது காணாமல் போனது, எங்கிருந்து காணாமல் போனது, அது உங்களுடையதுதான் என்பதற்கு ஏதாவது ஆதாரம் காட்ட முடியுமா என்பதையெல்லாம் விவரமாக எழுதிக் கொடுங்கள். நான் உடனே எந்தப் போலீஸ் ஸ்டேஷனில் இருந்து அந்தப் பேனா வந்ததோ, அங்கு உங்கள் மனுவை அனுப்புகிறேன். அவர்கள் விசாரிக்க வேண்டியவர்களை விசாரித்துத் தகவல் அனுப்புவார்கள். பிறகு உங்களுக்குக் கடிதம் அனுப்புவோம். நீங்கள் வந்து பேனாவைப் பெற்றுக் கொள்ளலாம்" என்றார் அதிகாரி.




எல்லோருக்கும் தெரியும்—
காற்றுப் புகாமல் நன்றாக பாக் செய்யப் படுவதால் ப்ரூக் பாண்ட் தேயிலை களங்கமற்று மெத்தவும் சுத்தமாக உங்களுக்குக் கிடைக்கிறது
நீங்கள் செலவழிக்கும் பணத்திற்கு ப்ரூக் பாண்ட் தேயிலை அதிகப்படியான, ருசியான தேநீரை அளிக்கிறது
ஒவ்வொரு நாளும் 24,90,496 ப்ரூக் பாண்ட் தேயிலை பாக்கெட்டுகள் வாங் கப்படுகின்றன
FINEST TEA
ஆகையால்தான் மற்றெந்தத் தேயிலையையும் விட அதிகப்படியான ஜனங்கள்
ப்ரூக் பாண்ட் தேயிலையையே
அருந்துகிறார்கள் !

"இப்போதே மனு எழுதித் தரலாமா?" என்றார் மதுரநாயகம்.

"எழுதிக் கொடுங்களேன். வெள்ளைக் காகிதம் வேண்டுமா?"

"வேண்டாம் சார், என்னிடம் 'லெட்டர் பேப்பர்' இருக்கிறது. அதில் எழுதித் தருகிறேன்" என்று கூறிவிட்டு, கையிலிருந்த தோல் பையைத் திறந்தார் மதுரநாயகம். உள்ளேயிருந்து அவருடைய பெயர், விலாசம் அச்சிட்ட கடிதக் காகிதத்தை எடுத்தார். அதில் பேனாவின் அடையாளம், அது எங்கிருந்து எப்போது காணாமல் போனது என்ற விவரம், திருடிப்போன ரமணியின் அங்க அடையாளங்கள் முதலியவற்றைக் குறிப்பிட்டார். அத்துடன், அந்தப் பேனா சிங்கப்பூரிலிருந்து பார்சலில் வந்தது என்றும் சேகர் என்பவர் பேனாவைப் பற்றி எழுதிய கடிதம் தம்மிடம் இருக்கிறது என்றும் எழுதிக் கொடுத்தார்.

மதுரநாயகம் கொடுத்த மனுவை அதிகாரி ஒரு முறை படித்துப் பார்த்தார். பிறகு, அங்கிருந்த ஒரு புஸ்தகத்தை எடுத்துப் புரட்டிப் பார்த்தார். அதில் பேனா எந்தப் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து வந்தது என்ற விவரம் இருந்தது. உடனே அவர், "சரி, இதை நான் இன்றைக்கே அந்தப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பிவைக்கிறேன். நாளைக் காலையில் இது அங்கே போய்ச் சேரும். நாளை சாயங்காலம் நீங்கள் அங்கே போய்ப் பாருங்களேன். அந்தப் போலீஸ்-ஸ்டேஷன் எங்கே இருக்கிறது என்று தெரியுமோ? உங்கள் நாடகக் கொட்டகைக்குச் சிறிது தூரத்தில் ஒரு போஸ்ட் ஆபீஸ் இருக்கிறதே, அதன் பக்கத்தில்தான் இருக்கிறது. நீங்கள் நேரில் போனால், மேலும் ஏதாவது விவரம் கேட்டுத் தெரிந்து கொள்வார்கள்" என்றார்.



நெல்லூர் டாக்டர் ஸ்ரீ எம். கே. ராஜகோபாலாச்சாரி அவர்களின் குமாரி சௌ. **கனகம்**, பி.எஸ்ஸி., பி.டி.க்கும் சிகந்திராபாத் ரெயில்வே சீப் கண்ட்ரோலர் ஸ்ரீ கே. பி. ராஜகோபாலாச்சாரி அவர்களின் குமாரர் சிரஞ்சீவி **சி. கே. ஆர். சந்தானம்**, எம்.ஏ.க்கும் சென்ற ஆகஸ்டு மாதம் 31ம் தேதி நெல்லூர் ஸ்ரீ ஸாயி குமாரத்தில் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.

வாழ்க, மணமக்கள்!

"சரி, சார்! நான் வருகிறேன்" என்று கூறி அவரிடம் விடைபெற்றுக் கொண்டு, 'லைசென்ஸ்' விஷயத்தையும் முடித்துக் கொண்டு நேராக நாடக சபைக்கு வந்தார் மதுரநாயகம்.

சபாவுக்கு வந்ததும், போலீஸில் மனு எழுதிக் கொடுத்திருப்பதை முதலாளியிடம் மதுரநாயகம் கூறினார். உடனே முதலாளி, "புரிந்து விட்டது" என்றார்.

"என்ன புரிந்து விட்டது?" என்று மோகனரங்கத்திடம் வியப்புடன் கேட்டார் மதுரநாயகம். (தொடரும்)

தமிழில் போட்டோக் கலை நூல்கள்

போட்டோப் படம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசை யாருக்குத்தான் இல்லை. இப்பொழுதெல்லாம் படித்தவர்களும் படிக்காதவர்களும் எல்லாருமே கையில் காமிரா எடுத்துக் கொண்டு போட்டோ எடுக்க முனைகிறார்கள். ஆனால் அவர்களுக்கு நல்ல போட்டோக்கள் எப்படி எடுப்பது என்று பொதுவாகத் தெரிவதில்லை. ஆங்கிலம் தெரிந்தவர்களாக இருந்தால் போட்டோக் கலையைப் பற்றி ஆங்கிலத்தில் வரும் புஸ்தகங்களைப் படித்துத் தெரிந்து கொள்ளுகிறார்கள். இப்பொழுது ஆங்கிலம் தெரியாதவர்களுக்காகத் தமிழிலேயே கொடாக் கம்பெனியார் 'நல்ல போட்டோக்கள் எடுப்பது எப்படி!' என்ற ஒரு நூலை வெளியிட்டிருக்கிறார்கள். இதன் விலை ரூ. 4.

இதுதவிர 'சாதாரணக் காமிராவை உபயோகிப்பது எப்படி!' என்றொரு சிறு புஸ்தகத்தையும் வெளியிட்டிருக்கிறார்கள். இதன் விலை: அணா 12

இப்புத்தகங்கள் போட்டோ சாமான்கள் வியாபாரிகளிடம் கிடைக்கும்.



ரவிசந்திரிகா

முன் கதை

இமயமலைச் சாரலில் உள்ள அபூர்வ மூலிகைச்செடியான சர்ப்பகந்தி, கொடிய பாம்புக் கடிக்கும் அருமருந்தாகப் பயன்படும் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனால் நாகரத்தினம் என்னும் கொடிய விஷப் பாம்பின் தீண்டுதலினால் பலவித தொல்லைகளுக்கு உள்ளாகும் சங்கீதக் கலைஞன் ரவீந்திரன் அந்தக் கொடிய விஷத்திலிருந்து மீள வழி தெரியாமல் தவிக்கிறான்.

திருச்சி மலைக்கோட்டையில் சந்திரிகாவின் நடனம் பிரமாதமாக நடந்து கொண்டிருக்கிறது. இச் சமயத்தில் திடீரென்று எழுந்து செல்கிறான் ரவீந்திரன். உயிருக்குயிரான புல்லாங்குழலையே அப்புலிங்கம் என்னும் வாலிபனிடம் அடகு வைத்து விட்டு அந்தப் பணத்தில் பாதசரம் ஒன்றை வாங்குகிறான். அதைக் குருவின் வெகுமதியாகத் தனது சிஷ்யை சந்திரிகாவுக்கு அளிக்கிறான். ரவீந்திரனின் அன்புப் பரிசு அவன் மனைவி கல்யாணியின் மனத்தில் விபரீதத்தைப் புகுத்தி விடுகிறது. அவள் உள்ளத்தில் ஏற்பட்ட சந்தேகத்துக்கு அவள் தம்பி நாகரத்தினம் விஷ தூபம் போடுகிறான். நிம்மதியுடனிருந்த குடும்பத்தில் கலகம் மூள்கிறது.

கல்யாணியின் தந்தை கனகசுந்தரத்தின் அழைப்புக்கிணங்க, கல்யாணி தன் தங்கையின் திருமணத்துக்குச் செல்கிறாள். ரவீந்திரன் கல்யாணத்துக்கு வர மறுத்ததால் அவள் நிம்மதி யில்லாத உள்ளத் தவிப்பினால் மறுநாளே மூதூர் பிராகதாருடன் தன் கணவன் வீட்டுக்குப் புறப்பட்டு விடுகிறாள். அப்பொழுதான் அந்தக் கார் விபத்து நேர்கிறது. அந்த விபத்தினால் கல்யாணி திருச்சி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படுகிறாள். அப்பொழுது திருச்சி தேவர் ஹாலில் சந்திரிகாவின் நடனக் கச்சேரியில் ஈடுபட்டிருந்த ரவீந்திரன், கல்யாணியை ஆஸ்பத்திரியில் உடனே வந்து காண முடியாமல் போய் விடுகிறது. இதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு நாகரத்தினம் கல்யாணியின் மனத்தில் துவேஷ விஷத்தைப் புகுத்தி விடுகிறான்.

கல்யாணிக்குச் சிகிச்சை செய்யும் வைத்திய அதிகாரி டாக்டர் சுரேஷ், ரவீந்திரனின் விசித்திர இயல்புகளைப் பற்றிக் கேள்விப்பட்டு அவன் மனத்தை ஆராய முற்படுகிறார். வீணையை லாகவமாகக் கையாண்டு இசை எழுப்புவது போல ரவீந்திரனது மனத்தை இசைத்து அவன் வாழ்க்கையை அறிகிறார்.

ரவீந்திரன் ஒரு கச்சேரிக்குச் செல்லும் போது, ரயிலில் சந்தித்து அழைத்து வந்த அநாதைச் சிறுமிதான் இன்று நடனமணியாக விளங்கும் சந்திரிகா என்று தெரிந்து கொள்கிறார் சுரேஷ். சந்திரிகாவுக்கும் ரவீந்திரனுக்கும் முள்ள பிரியத்துக்குக் காரணம் என்ன என்று எல்லாம் டாக்டர் சுரேஷ் அறிந்து கொள்கிறார். அதன் பயனாக, டாக்டர் சுரேஷ் ரவீந்திரனை நண்பனாக வரித்து அவனுக்கு உதவி செய்யவும் முனைந்து விடுகிறார்.

சோமு

ஆஸ்பத்திரியில் தன் மனைவி கல்யாணியைப் பார்த்துவிட்டு வர ரவீந்திரன் சென்றிருந்த போது இரவு ரவீந்திரன் வீட்டில் சந்திரிகா மட்டும் தனியாக இருக்கிறாள். அப்பொழுது மாடியில் திடீரென்று ஒரு திருடன் குதித்து விடுகிறான்.

சந்திரிகா திடுக்கிடுகிறாள். அச் சமயத்தில் எதிர் வீட்டிலிருக்கும் ராமநாதன் உதவி புரிகிறான். ஆனால் ராமநாதன் உதவி செய்யப்

போன கொஞ்ச நேரத்தில் அங்கே வந்த ரவீந்திரனுக்குச் சந்திராவிடம் சந்தேகம் உண்டாகும்படி ஏற்பட்டு விடுகிறது. இதைத் தெளிவு படுத்துகிறார் டாக்டர் சுரேஷ்.

ரவீந்திரனுக்குத் திருடன் வந்த விஷயமும், நாகரத்தினம்தான் அதற்குக் காரணம் என்பதும் புலப்பட்டதும் அவன் மனம் சமாதானமடைகிறது. டாக்டர் சுரேஷ், ராமநாதன், அப்புலிங்கம், ரவீந்திரன் அனைவரும் உஸ்தாத் மீரானின் உதவியை நாடுவது என்று தீர்மானிக்கின்றனர்.

உஸ்தாத் மீரான் பாலக்கரையிலே மிகுந்த வாக்கு நாணயம் உள்ளவர். நல்லதுக்கும் கெட்டதுக்கும் அவர் உதவியை நாடாதவர் இல்லை. அவருக்குச் சிலம்பப் பள்ளிக்கூடம் ஒன்று இருக்கிறது. அதில் விஷப் பாம்பு நாகரத்தினமும் (கலாசாலையில் படிக்கும்பொழுது) சிலம்ப வித்தை பயின்றிருக்கிறான்.

ரவீந்திரன் தன் அக்காள் கல்யாணியின் வாழ்க்கையைப் பாழ்படுத்துகிறான் என்று எண்ணிக்கொண்டிருக்கும் நாகரத்தினம், அவனைப் பழிக்குப் பழி வாங்க உஸ்தாத் மீரானின் தயவை நாடுகிறான். ஆனால் உண்மையான செய்தி என்ன என்று அறியாமல் உதவிசெய்ய உஸ்தாத் மீரான் மறுக்கவே, நாகரத்தினம் சிலம்பப் பள்ளிக்கூடத்திலிருந்த குப்புசாமியின் உதவியைப் பெறுகிறான். குப்புசாமி அவனுக்கு முன்பே பழக்கமானவன். நாகரத்தினம் கலாசாலையில் படித்துக் கொண்டிருக்கும் பொழுது டெலிபோன் ஆப்பரேட்டர் லீலி என்ற பெண்ணின் மீது காதல் வலை வீசுகிறான். அந்த வலை வீச்சுக்கு ஒத்தாசை செய்யக் குப்புசாமி முன்வந்தான்! அந்தப் பழைய பழக்கத்தினால் நாகரத்தினம் குப்புசாமியை இலகுவில் மசிய வைத்து விட்டான். ரவீந்திரன் வீட்டில் இல்லாத பொழுது வீட்டுக்குள்ளே குதித்து ஓடிய திருடன் வேறு யாருமில்லை; குப்புசாமியேதான்!

இதற்கிடையிலேதான் அப்புலிங்கம் உஸ்தாதின் உதவியை நாடி வருகிறான். ஆனால் அப்பொழுது அவர் நிலை என்ன? உஸ்தாத் மீரானுக்கு ஒரு பெண் ஆமினா; அவள் அவருக்கு அறியாமல் மஜீத் என்ற வாலிபனிடம் காதல் கொண்டு விடுகிறாள். இதைக் கண்டு உஸ்தாத் அவனைப் பழி தீர்த்துக் கொள்ள முற்பட்டபொழுது மசூதியின் காஜியார் அவரைத் தடுக்கிறார். ஆமினா — மஜீத் காதல் விவகாரத்தை அன்பு வழியில் தீர்ப்பதாகக் காஜியார் சொல்லவே அதற்கு உஸ்தாத் மீரான் உடன்படுகிறார். இத்தகைய அவதியில் சூழ்ந்திருந்த உஸ்தாதுக்கு அப்புலிங்கத்தின் மூலமாக நாகரத்தினம் — குப்புசாமி இவர்களின் சதித்திட்டமும் திருட்டு விஷயமும் தெரிகின்றன. தமது சிஷ்யர்கள் தமக்கு விரோதமாக நடந்து கொள்வதைக் கண்டு கடுங்கோபமுற்று ரவீந்திரன் கட்சியில் நின்று அவ்விரு விஷப் பூண்டுகளையும் அழிக்க மீரான் சபதமெடுக்கிறார்.

உஸ்தாத் மீரானின் கடுங் கோபத்துக்கு இலக்கான நாகரத்தினமும், குப்புசாமியும் அவருக்கு விரோதமாக ஒரு சிலம்பப் பள்ளிக்கூடம் ஆரம்பிக்க முடிவு செய்கின்றனர். அதற்கு மெஸ்மரிசத்தில் தலைசிறந்தவனும், உஸ்தாத் மீரானின் பிரதம சீடனுமான பகேசரனின் உதவியையே நாடுகிறார்கள்.

ஆஸ்பத்திரியில் ரவீந்திரனின் மனைவி கல்யாணி பூரண குணமடைந்ததும் வீட்டுக்கு வருகிறாள். நாகரத்தினம் மறுபடியும் அவள் மனத்தைக் கெடுக்க முயற்சித்த போது சினத்துடன் அவனை விரட்டி விடுகிறாள்.

ரவீந்திரனின் புல்லாங்குழல் அடகுவைக்கப்பட்ட விவரத்தை அப்புலிங்கத்தின் வாயிலாகத் தெரிந்து கொண்ட டாக்டர் சுரேஷ், அவனுக்கு நீண்ட கடிதமெழுதி அவனுக்குப் பரிசாக ஒரு புல்லாங்குழலும் அனுப்பிவைக்கிறார்.

அந்தப் புல்லாங்குழலை வாசித்தவாறு இவ்வுலகையே மறந்திருக்கிறான் ரவீந்திரன். இச்சமயத்தில் அந்த இசையில் மதிமயங்கிய பாம்பு ஒன்று பெரிதாகப் படமெடுத்தாடிக் கொண்டிருக்கிறது. ரவீந்திரனின் புல்லாங்குழல் இசையில் மனத்தைப் பறிகொடுத்து விட்ட செண்ட் ஜோசப் கல்லூரி மாணவன் ஒருவன் அந்த இசையை வாசிப்பவர் யார் என்று அறிய அந்த வீட்டினுள் வந்து விடுகிறான். பாம்பு படமெடுத்தாடுவதைக் கண்டதும், அதைத் தன் கையால் பிடிக்க முயன்ற போது அவனை அது தீண்டி விடுகிறது. இதற்குள் ரவீந்திரனின் மனைவி கல்யாணி 'பாம்பு! பாம்பு!' என்று கூச்சலிடுகிறாள். சந்திராவும் பதறியடித்துக் கொண்டு வருகிறாள். யாரோ புதிய வாலிபன் தன்னைக் காப்பாற்றியதைக் கண்டு ரவீந்திரன் அவன் அருகில் சென்று, உதவி செய்கிறான். 'எனக்கு ஒன்றும் ஏற்படவில்லை. பாம்பு இறந்துவிடும்' என்று அந்த வாலிபன் கூறுவது அவர்களுக்கு வியப்பையளிக்கிறது. அவன் யார் என்று தெரிந்து கொள்கிறார்கள். பாபநாச மலை ஓரத்திலுள்ள பளிஞர் வாழும் சொக்கி குடியைச் சேர்ந்தவன் என்பதும், அம் மலைப் பளிஞர் தலைவனின் மருமகன் கந்தப்பன் என்பதும், சர்ப்பகந்தியின் விவரமும் தெரிய வருகின்றன.

டாக்டர் சுரேஷும், அப்புலிங்கமும், ரவீந்திரனின் வீட்டுக்கு வருகிறார்கள். கந்தப்பனின் அறிமுகம் ஆகிறது.

கல்யாணியோ பாம்பு வந்த அந்த வீட்டிலிருந்து உடனே வேறு வீட்டுக்குப் போய்விட வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறாள். ஆனால் ரவீந்திரன் அதற்கு மறுக்கிறான். டாக்டர் சுரேஷும் அப்புலிங்கமும் ரவீந்திரன் மனத்தை மாற்றி அப்புலிங்கம் பங்களாவிலுள்ள முற்றத்து வீட்டுக்குக் குடிபோக ஏற்பாடு செய்கிறார்கள்.

தன்னைக்கடித்த நாகம் இறந்து விட்ட தோஷத்துக்காக மலைப் பளிஞரின் ஆசாரப்படி சொக்கி குடியிலே நாகர் பூஜை நடக்க ஏற்பாடு செய்கிறான் கந்தப்பன். சர்ப்பகந்திச் செடியை ஆராய்வதற்கும், நாகர் பூஜையைக் காணவும் டாக்டர் சுரேஷ் அப்புலிங்கத்துடனும் கந்தப்பனுடனும் சொக்கிகுடிக்குப் புறப்படுகிறார்.

சொக்கி குடி மலைப் பளிஞர்கள் வாழுமிடம். அவர்களின் தலைவன் சொக்கப்பன். அவன் மகள் சொக்கி, செயற்கை அலங்காரமும் வெளிப் போர்வைகளும் இல்லாத ஒரு கோயிலின் சிற்பக் கன்னியைப்போல அந்த மலைக்காட்டிலே யானையுடன் ஒய்யாரமாக வளைய வரும் வனதேவதை. அவளுடைய மேற்பார்வையில் பளிஞர் தலைவன் நாகர் பூஜைக்காகப் பிரமாதமாக ஏற்பாடுகள் செய்கிறான்.

* * *

பீலி ஓட் அவுஸின் அண்ணன் ஜான் நாடி சோதிடத்தில் பற்றுக் கொண்டு இருந்தவனைத் தந்தை கல்கத்தாவில் ரயில்வே 'பயர்மன்' வேலையில் அமர்த்தி விடுகிறார். அவரது மற்றொரு மகள் ஜெனிபரை மெஸ்மெரிஸத்தைப் படிக்க வேண்டுமென்று முன்பே பகேசரனிடம் விட்டிருக்கிறான் ஜான்!


நூற்றில் ஒரு
வார்த்தை ...
பணத்தின் மதிப்புக்கேற்ற
மிகச் சிறந்த டூத் பிரஷ்
டெக்
டூத் பிரஷ்ஷை
வாங்குங்கள்
ஜான்ஸன் அண்டு ஜான்ஸனின் ஒரு உயர்தர தயாரிப்பு



ப்ளிட்டை உபயோகித்து உங்கள் குடும்பத்தைப் பாதுகாருங்கள்!
1 வீட்டிலுள்ள பூச்சிகள் அனைத்தையும் கொல்லுகிறது.... ஒரு சில பூச்சிகளைத் தான் கொல்லும் என்றில்லை
2 நீங்கள் செலவழிக்கும் ஒவ்வொரு அணுவுக்கும் அதிகமான பூச்சிகளைக் கொல்லுகிறது
FLIT
"D.D.T." KILLS
ESSO
மலேரியா, டைபாயிட், காலரா முதலிய பல வியாதிகளைக் கொண்டுவரும் பூச்சிகளை இது கொல்லுகிறது
சிவப்பு, வெள்ளை, நீல நிறமும் கொண்ட டின்னில் கிடைக்கும்
ஸ்டாண்டர்ட்-வாக்குவம் ஆயில் கம்பெனி

ஹென்ரி நிமர் திடீரென்று காணாமற்போய் விடுவதைக் கண்டு தந்தை ஓட் அவுஸ், வினி ஓட் அவுஸ் இருவரும் அவன் எங்கே செல்கிறான் என்பதைக் கண்டு பிடிக்க பகோரான் வீட்டுக்கு வருகிறார்கள். அங்கே வந்த உஸ்தாத் மீரானுடன் கலந்து பையனைத் திருத்த வழி தேட முற்படுகிறார்கள். இந்த ஆலோசனையின் விளைவாக, திருச்சி ரயில்வே ஸ்டேஷனில் சொக்கி குடிக்குச் செல்லும் டாக்டர் சுரேஷ், அப்புலிங்கம் கந்தப்பன் மூவரையும் இவர்கள் சந்திக்கிறார்கள். கந்தப்பனிடம் உஸ்தாத் மீரான் சில பொருள்களைச் சொக்கிகுடியிலிருந்து வாங்கி வரக் கோருகிறார்.

அப்பொழுது டாக்டர் சுரேஷ், "பியானோவில் மீநோட் என்கிறார்களே, அப்படிப்பட்ட ஆதார சுருதியே கந்தப்பன்தான். சந்திரிகாவின் வாழ்க்கைப் பாடல், ஜீவகானம், எப்படி எதிர்காலத்தில் ஒலிக்கப் போகிறது என்பதை எண்ணிப் பார்த்தால் எனக்குக் கந்தப்பனை வேறு விதமாக வர்ணிக்கத் தோன்றவில்லை" என்கிறார். அப்புலிங்கம் இதைக் கேட்டுத் திகைத்துப் போகிறான்.

24. இலஞ்சிச் சாமியார்

"இந்த உலகத்தில் அனாவசியம் என்று சொல்லக்கூடிய மனிதர்களோ நடப்புக்களோ எப்பொழுதுமே கிடையாது. உலக வாழ்க்கை என்ற தொடர் கதையில் எல்லா மனிதர்களுமே, எல்லா சம்பவங்களுமே முக்கியந்தான். ஆரம்பத்தில் நமக்கு அது தெரிவதில்லை. கொஞ்சம் தாமதித்துப் பார்த்தால் உரிய காலத்தில் தானாகத் தெரியும்!" என்று பேச ஆரம்பித்தார் டாக்டர் சுரேஷ்.

திருச்சியிலிருந்து புறப்பட்ட ரயில் மிக வேகமாக ஓடிக்கொண்டிருந்தது.

"மிஸ்டர் அப்புலிங்கம்! இந்த அகில உலகத்தையும் ஆராய்ந்து பாருங்கள். எந்த வஸ்துதான் அனாவசியம்? இறைவனுடைய படைப்பில் ஒரு சிறு புல்லுக்குங்கூட அவசியம் இருக்கிறது. இந்த உலகம் என்ற மாபெரும் நாடக அரங்கத்தில், மனித வாழ்க்கை யென்ற நாடகத்தை ஏதோ ஒரு சக்தி நடத்திக் கொண்டு போகிறது. ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், மண் என்ற ஐந்து பூதங்களையும் பின்னணித் திரைகளாகத் தொங்க விட்டு விதி என்ற சூத்திரக் கயிற்றினால் மனிதர்கள் என்ற கதாபாத்திரங்களைத் திரைக்குப் பின்னால் இருந்து இயக்குகிறது ஒரு கை. பின்னணித் திரையும் பாத்திரங்களும் கிமிஷத்துக்கு கிமிஷம் மாறிக் கொண்டே யிருப்பதைப் பார்க்கிறோம். ரவீந்திரனுடைய வாழ்க்கை மட்டும் இதற்கு விதி விலக்கா! இல்லையே!" என்றார் டாக்டர் சுரேஷ்.

அப்புலிங்கம் கேட்டான்: "சந்திரிகா ரவீந்திரன் இவர்களுடைய வாழ்க்கை கீதத்தில் இனிமேல் கந்தப்பன் ஆதார சுருதியாக விளங்குவான் என்று ஜோதிஷம் சொன்னீர்கள். அதே சமயம் ஓட் அவுஸ்கள் இந்த நேரத்தில் ஸ்டேஷனுக்கு வருவார்கள் என்று முன்னதாகவே உங்களுக்குத் தெரியும் என்றும் குறிப்பிட்டீர்கள். இப்பொழுது இப்படி ஒரு தத்துவத்தைப் போடுகிறீர்கள். என்ன டாக்டர், இதன் பொருள்?"

டாக்டர் சுரேஷ் சொன்னார்: "சபாஷ், அப்பு! நீங்கள் இந்தமாதிரி ஒரு கேள்வி கேட்க வேண்டுமே என்றுதான் இப்பொழுது ப்ரார்த்தனை செய்தேன். ஏனென்றால் ரவீந்திரனுடைய வாழ்க்கையில் உஸ்தாத் மீரானும், ஓட் அவுஸும், கந்தப்பனும் எதற்காகத் தோன்ற வேண்டும்? இவர்களுக்கும் ரவீந்திரனுக்கும் என்ன சம்பந்தம் ஏற்படப் போகிறது. இறைவன் ஏன் ரவீந்திரன் வாழ்க்கையில் இவர்களை யெல்லாம் கொண்டுவந்து விட்டிருக்கிறான், என்றெல்லாம் நீங்கள் எண்ணக்கூடும் அல்லவா? அதற்காகத்தான் இந்தத் தத்துவத்தைச் சொன்னேன்."

அப்பு சொன்னான்: "டாக்டர்! நீங்கள் சொல்கிற கருத்து உண்மையானது என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். ஒரு புல்லை அசைத்தால் இந்த உலகமே அசைகிறது. அதுதான் கடவுளுடைய படைப்பு என்று ஒரு ஆங்கிலக் கவிஞன் பாடினனும். அது சரிதான். ஆனால் இப்பொழுது ஓட் அவுஸ்களுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? அதைச் சொல்லுங்கள்!"

"இல்லை அப்புலிங்கம்! கொஞ்சம் இருந்து பார்த்தால் படிப்படியாகத் தெரியும். சம்பவங்கள் நடந்து போவதைப் பார்த்தால் இத்தனை மனிதர்களுமே ரவீந்திரனுடைய வாழ்க்கையோடு பின்னுகிறார்கள் என்றல்லவா அர்த்தம்!"

இப்படி அப்புலிங்கம் கேட்டுக்கொண்டிருந்தபோது, கந்தப்பன் தன்னுடைய கையில் உஸ்தாத் மீரான் கொண்டு வந்து கொடுத்த காகிதத் துண்டைப் பிரித்துப் பார்த்தான். அதில் எழுதியிருந்தது:—

ஆறடி உயரத்தில் இரண்டு அங்குலப் பருமன் உள்ள ஒரே தரமான கல் மூங்கில் நூறு.

வெப்பாலை மரத்தில் சீவி எடுத்த சிறு தடி. ஒரு முழ நீளத்தில், இருபத்தைந்து.

காட்டு மான் கொம்பு, நீளமானது. பன்னிரண்டு.

மிளாவின் கொம்பு ஐந்து.

புலித்தோல் மூன்று.

இவை தவிர டாக்டர் நேரிலும் சொல்லுவார்.

கந்தப்பன் உஸ்தாதின் அந்தக் காகிதத் துண்டை அப்புலிங்கத்திடம் கொடுத்



தான். அதைப் படித்து விட்டு அவன் கேட்டான்: "இதெல்லாம் எதற்குக் கேட்கிறார் உஸ்தாத்! சொக்கி குடிக்காட்டிலேயிருந்து இத்தனை சாமான்களும் அவருக்கு வேண்டுமானால்......"

"சிலம்பப் பள்ளிக்கூடம் தயாராகிறது என்று அர்த்தம்!" என்று வாக்கியத்தை முடித்தார் சுரேஷ்.

இவ்வாறு சொல்லிவிட்டு டாக்டர் சுரேஷ் தமது விளக்கத்தை ஆரம்பித்தார்.

"உஸ்தாத் மீரானுக்குத் தம்முடைய சிஷ்யன் பகேரானிடம் எல்லையில்லாத நம்பிக்கையிருந்தது. எனவே, நாகரத்தினமும் குப்புசாமியும் அவருக்குத் துரோகம் செய்ததை எண்ணியதும், அவர் தம்முடைய எதிர்காலத் திட்டமான சிலம்பப் பள்ளிக்கூடத்தை பகேரானிடம் ஒப்படைக்க விரும்பினார். மகள் ஆமினாவுக்கும் மஜீதுக்கும் ஏற்பட்ட தொடர்பு அவருக்கு ஆரம்பத்தில் எத்தனையோ சீற்றத்தைக் கொடுத்த போதிலும், யோசித்துப் பார்த்ததில் 'லிக்கா'வுக்கு ஒப்புக்கொள்வதென்று தயாராகி விட்டார் உஸ்தாத். இந்த நிலையில் பகேரானிடம் சென்று தம்முடைய திட்டங்களைச்சொல்லியிருக்கிறார். ஆனால் படுமோசச் சூழ்ச்சிக்காரன் நாகரத்தினம் அதே சமயம் பகேரான் வீட்டு மாடியில் நின்றிருக்கிறான். இது உஸ்தாதுக்குத் தெரியாது. பகேரானும் சொல்லவில்லை. போதாத குறைக்கு, ஒட் அவுல்கள் வேறு பகேரான் வீட்டுக்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள். பிறகு மூவருமாகப் பேசிக் கொண்டே வெளியே வந்தபோது ஒட் அவுல்கள் மூலம் உஸ்தாதுக்கு ஒரு பெரிய அதிர்ச்சியே ஏற்பட்டிருக்கிறது. உஸ்தாதுக்குத் தெரியாமல் பகேரான் தனியாக அறைக்குள்ளே ஊதுவத்தியைக் கொளுத்தி வைத்துக் கொண்டு மெஸ்மெரிஸம் செய்வது அவருக்குப் பிடிக்கவில்லை. பொதுவாக மந்திர தந்திரம் செப்பிடு வித்தைகளெல்லாம் உஸ்தாதுக்குக் கட்டோடு பிடிக்காது. நேருக்கு நேரான சண்டைதான் அவருடைய ராஜமார்க்கம்! எனவே ஒட் அவுலின் பையனைத் தனியாகக் கூப்பிட்டுக் கொஞ்சம் பயமுறுத்தி விசாரித்தார் உஸ்தாத். விஷயங்கள் வெட்ட வெளிச்சம் ஆனதோடு, நாகரத்தினம் பகேரானோடு அந்தரங்கமாக இருக்கும் காரியமும் உஸ்தாதுக்குத் தெரிய வந்தது. இந்த உலகில் வேறு எந்த விஷயத்தையும் உஸ்தாதினால் சகித்துக் கொள்ள முடியும். ஆனால் குருத் துரோகத்தை அவரால் தாங்க முடியாது. அளவற்ற சீற்றம் உண்டாயிற்று. ரவீந்திரனுக்கு உதவி செய்வதற்காக, ஒரு நல்ல காவலர் படையே சேர்க்கவேண்டும் என்று நினைக்கிறார். பழைய மாணவர்களில் எந்தச் சீடனையும் நம்புவதற்கில்லை என்று கண்டு கொண்டதில் ஒரு விரக்தி அவருக்கு. இப்போது தானே தனியாக இன்னொரு சிலம்



பக் கோஷ்டி தயாரிக்க எண்ணுகிறார்!'' என்றார் டாக்டர் சுரேஷ்.

அப்பு கேட்டான்: "அப்படியானால் பகேரான், மஜீத் இவர்கள் என்ன ஆவது?''

"பகேரானைக் கூப்பிட்டுக் கண்டிக்கப் போவதாக இருக்கிறார் உஸ்தாத். ஆனால் பகேரான் நாகரத்தினத்தின் போதனையினால் மஜீதையும் தன்னோடு சேர்த்து வைத்துக் 'கொண்டு, தனக்கு எதிராகக் கிளம்பக்கூடும் என்றும் உஸ்தாத் சந்தேகப் படுகிறார். அத்தோடு அப்படி இவர்கள் எல்லாரும் எதிராகப் போய்விட்டால் தன்னுடைய மகன் ஆமீனாவின் கதி என்ன ஆவது? ரவீந்திரன் வீட்டில் நுழைந்து, அதாவது மிஸ்டர் அப்புலிங்கமாகிய உங்கள் வீட்டில் நுழைந்து, இவர்கள் ஏதாவது இடையூறு செய்தால்? பாவம், சந்திரிகாவின் கதி என்ன ஆவது? நாகரத்தினமோ எப்பொழுது என்ன காரியம் செய்வான் என்று சொல்வதற்கில்லை. அந்த ராத்திருடன் குப்புசாமி வேறு அவர்கள் கட்சி! நாம் எல்லாருமே எத்தனைதான் ஜாக்கிரதையாக இருந்த போதிலும், கள்ளன் பெரிதா, காப்பான் பெரிதா? சொல்லுங்கள்!''

இப்படிக் கேட்டு விட்டு டாக்டர் சுரேஷ் அப்புலிங்கத்தையே பார்த்தார். அவன் அப்படியே கண்களை அகலத் திறந்து கொண்டு உட்கார்ந்திருந்தான்.

"என்ன திகைத்துப் போய் உட்கார்ந்து விட்டீர்கள் அப்பு!'' என்றார் டாக்டர்.

"இல்லை, ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்துக் கடைசியில் மனிதனையே கடிக்கிற நிலைமைக்கு வந்து விட்டது விஷயம்! ரவீந்திரன், சந்திரிகா இவர்களுக்கு எதிராக இப்பொழுது ஒரு பெரிய பட்டாளம் அல்லவா மூண்டு வேலை செய்யப் பார்க்கிறது! நல்ல வேளை டாக்டர்! ரவீந்திரன் நம்முடைய வீட்டுக்கு இடம் மாற்றினான். இல்லையென்றால் அந்தத் தாயுமானவர் சந்தில் ஏகாந்தமாக எத்தனை பாடு படுவான்! இதெல்லாம் தெரிந்துதான் நீங்கள் முன் கூட்டியே—''

"அதெல்லாம் இப்பொழுது ஒன்றும் சொல்லாதீர்கள். உங்கள் வீட்டு வளைவுக்குள் அவர்கள் வந்தாயிற்று. இனிமேல்—''

"இனிமேல் அவர்களுக்கு ஒரு தீங்கு ஏற்பட்டால் அது எனக்குத்தான். அதிலென்ன சந்தேகம்!'' என்றான் அப்பு.

"தீங்கா! அப்படியென்றால்?'' என்று கேட்டுக் கொண்டே வியர்த்தான் கந்தப்பன்.

"ஸார்! அத்தனை பெரிய நாகப் பாம்பே ஒன்றும் செய்ய முடியவில்லை. கேவலம் இந்த நாகரத்தினமா கேடு செய்து விடுவான்!'' என்று கேட்டான் கந்தப்பன், அழுத்தமான குரலில்.

"அப்படிச் சொல்லாதே, கந்தப்பா! நாகப் பாம்புக்கும் மனிதனுக்கும் ஒரு முக்கியமான வித்தியாசம் இருக்கிறது. பாம்பின் விஷத்தைக் கொல்லுவதற்கு சர்ப்பசக்தி இருக்கிறது. ஆனால் மனிதர்களுடைய உள்ளத்திலே இருக்கும் விஷத்திற்கு இந்த உலகில் என்ன மாற்று அல்லது மருந்து இருக்கிறது?'' என்றார் டாக்டர்.

"உண்மையான வார்த்தை டாக்டர், உண்மையான வார்த்தை.

துணிவெளுக்க மண்உண்டு
எங்கள் முத்துமாரியம்மா
— எங்கள் முத்துமாரி

தோல்வெளுக்கச் சாம்பர் உண்டு
எங்கள் முத்துமாரியம்மா
— எங்கள் முத்துமாரி

மணிவெளுக்கச் சாணையுண்டு
எங்கள் முத்துமாரியம்மா
— எங்கள் முத்துமாரி

மனம்வெளுக்க வழியில்லையே
எங்கள் முத்துமாரியம்மா
— எங்கள் முத்துமாரி''

என்றான் அப்புலிங்கம்.

"மனம் வெளுக்கத்தானே?'' என்று கேட்ட கந்தப்பனுக்குக் கண் சிவந்தது. இதுவரை பொறுமையும் அமைதியுமாக இருந்த அந்த மலைநாட்டு வாலிபனுக்கு

இப்பொழுது காட்டு ஆவேசமே வந்து விட்டது போல் தோன்றியது.

"மனம் வெளுக்கத்தானே—அந்த நாக ரத்தினத்தின் மனத்தைத்தானே; அதை வெளு வெளு என்று வெளுத்துவிடுவோம். இந்த நிமிஷத்திலிருந்து உஸ்தாதின் சிலம்பப் பள்ளிக்கூடத்துக்கு மலை நாட்டுப் பளிஞர் கூட்டம் அத்தனையுமே பட்டாளம் என்று வைத்துக் கொள்ளுங்கள்! பார்த்து விடுவோம், ஒரு கை!"—இப்படிச் சொல்லும்போது கந்தப்பனுடைய உடம்பெல்லாம் கோபத்தினால் நடுங்கியது.

"தம்பீ! சபாஷ்! மலைநாட்டு வீரத்தை ஸர்வகலாசாலைப் படிப்பினால் மழுக்கி விட முடியவில்லை. ரொம்ப சரி. ஆனாலும் இப்பொழுது அத்தனை வீரத்துக்கு அவசியம் இல்லை என்று தோன்றுகிறது. நிலைமை அவ்வளவு தூரம் மோசமாகி விடவில்லை. எதற்கும் முன் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்றுதான் உஸ்தாத் இந்த லிஸ்ட்டை அனுப்பியிருக்கிறார். நாலைந்து பளிஞரை மட்டும் அவருக்கு இப்பொழுது ஒத்தாசைக்குக் கொடுத்தால் போதும். பகோராவிடம் அவர் இன்னொரு முறை போய் எல்லா விஷயங்களையும் தீர்மானமாக இரண்டில் ஒன்று என்று பேசப் போகிறாராம். அதன் பிறகு என்ன நடக்கிறது என்று பார்க்கலாம். இப்போதே அவசரப்பட வேண்டாம். ஆனால் எதற்கும் தயாராக இருப்போம்!" என்றார் டாக்டர் சுரேஷ். இத்தனையும் சொல்லி விட்டுச் சிரித்துக் கொண்டே கூறினார்: "நாம் என்ன மலைக்காட்டிலா வாழ்கிறோம். அரசாங்கம் ஒன்று நம்மையெல்லாம் காவல் செய்ய இருக்கிறது. போலீஸ்காரர்கள், போலீஸ் ஸ்டேஷன், கோர்ட் என்று எத்தனை இருக்கின்றன! அப்படியெல்லாம் பெண்களை இரவுகளில் தூக்கிப் போய் விடலாம் என்று திருச்சி போன்ற ஊரிலே எண்ணி விட முடியுமா! பார்ப்போம்!" என்றார் டாக்டர்.

* * *

அன்றிரவு மலைநாட்டுப் பூஜைக்குப் பிறகு டாக்டர் சுரேஷும் அப்புலிங்கமும் மலையில் நடந்து வந்த களைப்பினால் சீக்கிரமாகவே படுத்துக் கொள்ளப் போய் விட்டார்கள்.

பாலும் பழமும் மட்டும் சாப்பிட்டு விட்டு, காட்டில் சொக்கி குடிக்கு மத்தியில் தலைவனுடைய குடிசைக்கு எதிரே ஒரு பரண் கட்டி அதில் டாக்டரும், அப்புலிங்கமும் படுத்துக் கொண்டார்கள். எதிரே தலைவனுடைய குடிசைக்கு முன்னால் தீ வளர்த்திருந்தது. மலைநாட்டு அம்மாள் ஒருத்தி அருகில் உட்கார்ந்து அந்தத் தீ அணையாதவாறு அவ்வப்பொழுது சுள்ளிகளை நெருப்பிலே போட்டுக் காவல் காத்துக் கொண்டிருந்தாள். டாக்டர் பரணில் படுத்தவாறு அதைக் கவனித்தார். ஏற்கனவே அவர் வந்த போதும் அந்தத் தீ எரிந்து கொண்டிருந்தது. ஏதோ மலைநாட்டுப் பூஜை சம்பிரதாயமாக இருக்கும் என்று எண்ணிக் கொண்டார். ஆனால் இப்பொழுது தொடர்ந்து அது எரிவதும் அந்த அம்மாள் அங்கேயே உட்கார்ந்திருப்பதும் ஆச்சரியமாக இருந்தன. வனவிலங்குகள் வராதபடி அப்படிக் காவல் செய்கிறார்கள் என்று டாக்டர் யூகித்த போதிலும், அந்த அம்மாளே ஏன் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும் என்று அவருக்குப் புரியவில்லை. அவளைப் பார்த்தாலோ வேலைக்காரி மாதிரித் தெரியவில்லை.

காலையில் டாக்டர் எழுந்தபோது ஆச்சரியம் இன்னும் அதிகமாயிற்று. அந்தத் தீக்குழி இன்னும் அப்படியே இருந்தது. ஆனால் இரவில் இருந்த அம்மாளை இப்பொழுது காணோம். அந்த அம்மாள் இருந்த இடத்தில் இப்பொழுது இன்னொரு அம்மாள்—தோற்றத்தில் முந்திய பெண்மணியைப் போலவே இருந்தாள், ஆனால் அவளை விடச் சற்று வயது குறைந்தவள்—அவள், உட்கார்ந்து தீயைக் கிளறி விட்டுக் கொண்டிருந்தாள்.

டாக்டர் எழுந்ததைப் பார்த்ததும், குடிசைக்குள்ளேயிருந்த கந்தப்பன் அவரை நோக்கி விரைந்து வந்தான்.

"நீங்கள் சீக்கிரம் எழுந்திருக்க வேண்டுமே என்று நினைத்தேன் டாக்டர், எழுந்து விட்டீர்கள். ஏனென்றால் இங்கே நம்முடைய தலைவருக்கு வேண்டிய சாமியார்கள் சில பேர் வந்திருக்கிறார்கள், அவர்களில் ஒருவர் இலஞ்சிச் சாமி. ரொம்ப நல்லமாதிரி. அவர் உங்களைப் பார்க்க வேண்டும் என்று சொன்னாராம். ஒருவேளை அவர்கள் எல்லாரும் வெயில் ஏறுவதற்கு முன்பு இந்த மலையை விட்டுக் கிளம்பி விடக்கூடும்!" என்றான் கந்தப்பன்.

"அந்தச் சாமியாருக்கு என்னைப் பார்க்க வேண்டிய அவசியம் என்ன உண்டு?" என்று கேட்டார் டாக்டர், கண்களைச் சிமிட்டிக் கொண்டே!

"இலஞ்சிச் சாமி சித்த வைத்தியத்தில் பெரிய நிபுணர் என்று சொல்கிறார்கள். இங்கே என் மாமனுக்கு அவரிடம் ரொம்ப மரியாதை. அவரிடம் நீங்கள் மூலிகைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்யலாம். சரியான மனிதர்!" என்றான் கந்தப்பன்.

"அப்படியா!" என்று கேட்டுக் கொண்டே டாக்டர் பரணிலிருந்து ஒரு குதி குதித்தார். அப்புலிங்கமும் கீழே இறங்கினான்.

ஐந்து நிமிஷத்தில் சிற்றோடையிலே சென்று பல் துலக்கினார் டாக்டர் சுரேஷ்.



TAKE THIS DOWN
பெரும் தெறியல்
ஒரு நிமிஷம் கூட, இந்த சேட்ஜிக்கு ஓய்வில்லை. ஆனால் அவர் ஸ்னான அறையில் செய்யும் கடபுடாக்களுக்கு, பங்கு மார்க்கெட்டில் செய்யும் தாம் தூம்கள் உறை போடக் காணாது. காரணம், அவர் சொல்வது: ஹமாம் சோப் தான் வாழ்க்கையை சகிக்கும்படி செய்கிறது!
இதை நாங்கள் நம்பாவிட்டாலும்,
ஹமாம் சோப் ஒரு நல்ல டாய்லட்
சோப் என்பதை யாராலும்
மறுக்க முடியாது.
புத்துணர்ச்சி தருவது
HAMAM
A TATA PRODUCT
டாடாவின்
ஹமாம்
டாய்லட் சோப்
டாடா ஆயில் மில்ஸ்
இந்திய மூலதனத்துடன், இந்திய நிர்வாகத்தில், இந்தியாவிலேயே தயாரிக்கப்படுவது.
SISTA'S TOM-I-TAM.

பையிலே கொண்டு வந்திருந்த ரொட்டித் துண்டுகளை அப்புலிங்கமும் சுரேஷும் சாப்பிட்டார்கள். இதற்குள் குடிசையிலிருந்து ஆட்டுப் பால் வந்தது. அப்புலிங்கம் அதைப் பார்த்து ஒரு மாதிரி விழித்தான்.

“அது வேண்டாம் என்றால் பசும்பால் கொண்டு வருகிறேனே!” என்று கந்தப்பன் கேட்பதற்குள், அப்புலிங்கமும் டாக்டரோடு ஆட்டுப் பால் கோஷ்டியில் சேர்ந்து கொண்டான்!

“மலையிலே நடப்பதற்கு இந்தப் பால் எத்தனை வலுத் தெரியுமா? புறப்படுங்கள் மிஸ்டர் அப்பு!” என்றார் டாக்டர்.

சுரேஷ் தமது காமிராவைத் தோளிலே தொங்கப் போட்டுக்கொண்டு புறப்பட்டார். அப்புவும், கந்தப்பனும் உடன் புறப்பட்டார்கள். சாமியார்கள் தங்கியிருந்த ஆலமரத்தடிக்குச் செல்லும் போதே எதிரே வாழைப்பழச் சாமி வந்தது.

“என்ன சாமி!” என்றான் கந்தப்பன்.

“கட்டைகள் எல்லாம் புறப்படுது. இலஞ்சிச் சாமி மட்டும் இங்கே கொஞ்ச நாள் இருந்துவரப் போகுதாம். அதனாலே ஆல மரத்தடியிலே இலஞ்சிக்கு ஒரு பிரிவு உபசார மகாநாடு நடக்கப் போகுது! உங்களைக் கூப்பிட்டுப் போகலாம்னு வந்தது இந்தக் கட்டை!” என்று சொல்லிற்று வாழைப் பழச் சாமி.

“கந்தப்பா! இலஞ்சிச் சாமியினுடைய யோசனை சரியான யோசனை. நானும் சில விஷயங்கள் அவரிடம் பேச வேண்டும்!” என்று சொல்லிய டாக்டர் சுரேஷ், தம்முடைய திட்டம் சரியான முறையில் உருவாகிக் கொண்டிருப்பது போல எண்ணி மனத்துக்குள்ளே சந்தோஷப்பட்டார். அந்தச் சந்தோஷத்தின் அறி குறி அவருடைய முகத்தில் புன்முறுவலாக மொட்டு விட்டது.

“என்ன டாக்டர்! ஒரு வேளை நாங்கள் உறங்கிய பிறகு நீங்கள்தான் இலஞ்சிச் சாமியைப் பார்த்து இங்கே தங்கும்படி சொன்னீர்களோ? உங்களுடைய புன்சிரிப்பின் காரணம் புரிய வில்லையே!” என்று கேட்டான் அப்புலிங்கம்.

இதற்குள் ஆலமரத்துக்கு அருகே வந்து விட்டார்கள். இலஞ்சிச் சாமி ஆல மரத்தின் திரணையிலே உட்கார்ந்து கொண்டு ஏதோ உபதேச முறையிலே ஒரு பாட்டைச் சொல்லிக் கொண்டிருந்தது. மற்றப் பண்டாரங்களெல்லாம் சுற்றி நின்று கொண்டிருந்தார்கள்.

டாக்டர் சுரேஷ், அந்தக் காட்சியைத் தமது காமிராவில் படம் எடுத்துக் கொண்டார்.

ஆலமரத்தடியிலே இலஞ்சிச் சாமியின் கணீரென்ற பேச்சுக் குரல் கேட்டது:—

“ஏதோ நகரங்களில் எல்லாம் சேவை என்றும், சேவா சங்கங்கள் என்றும் சொல்கிறார்கள். அவற்றையெல்லாம் விட முக்கியம் இந்தமாதிரி மலைஜாதியினரின் குடியிருப்புகளிலே நாம் செய்ய வேண்டிய சேவைதான். இங்கேயுள்ள மனிதர்களிடம் ‘நகர.நாகரிகம்’ இல்லை. ஆனால் அன்பு இருக்கிறது. ஆடம்பரம் இல்லை; ஆனால் பண்பு இருக்கிறது. படிப்பு இல்லை; ஆனால் இங்கிதம் இருக்கிறது. அநேக விஷயங்களில் பிற்போக்காக இருக்கிறார்கள் என்பது உண்மை. என்றாலும் இவர்களை முன்னேற்றுவது கஷ்டமில்லை. அது நம்முடைய கடமையுங் கூட. உண்மையான கிராம சேவை என்பது இதுதான். அதோடு நம்முடைய தமிழ் நாட்டு வைத்திய முறைக்கான மூலிகைகள் இங்கேதான் இருக்கின்றன. உதாரணமாக காலரா என்று நாம் நகரங்களிலே சொல்கிற பயங்கர நோய்க்கு இங்கே அற்புதமான மருந்து இருக்கிறது. இது எத்தனை பேருக்குத் தெரியும் என்று கேட்கிறேன். நம்முடைய சித்தர் சொன்னார்:

“ஆனைக் கன்றின் ஒருபிடியும்
அரச விரோதி இளம்பிஞ்சும்
கானக் குதிரை இளந்தோலும்
மையில் கனிந்த கலிப்பருப்பும்
நாயைக் கொன்ற பூச்சாற்றில்
தானே கலக்கிக் குடித்திடவே”

“எப்படி? ஆனையும் குதிரையும் கலக்கிக் குடிப்பதா! சாமிகளே அப்படிக் குடித்தால் என்ன ஆகும்?” என்று கேட்டுக் கொண்டே அங்கே வந்து நின்றார் டாக்டர் சுரேஷ்! உடனே சாமியார்களின் கூட்டத்தில் கலகலப்பு உண்டாயிற்று.

“வரணும், வரணும். இப்படி வரணும்!” என்று திரணையிலே வந்து உட்காரும்படி டாக்டர் சுரேஷை வரவேற்றார் இலஞ்சிச் சாமியார். உண்மையில் டாக்டர் சுரேஷ் அங்கு வந்தது அவர்கள் எல்லாருக்குமே ஒரே ஆனந்தமாக இருந்தது.

ஆனால் அதே சமயம் திருச்சி ஆண்டார் தெருவில் புதிதாகக் குடிவந்திருந்த வீட்டில் இருந்து கொண்டு, டாக்டர் சுரேஷ் ஊரில் இல்லாமல் போய்விட்டாரே என்று ஏங்கி ஏங்கிக் கண்ணீர் வடிக்கும்படியான நிலை ஒரு அபலைக்கு ஏற்பட்டது. அப்படிப்பட்ட துன்பச் சுழலுக்குள்ளே சிக்கித் தவித்தாள் சந்திரிகா! (தொடரும்)

Printed & Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras - 10. Editor : Mi. Pa. Somasundaram.


ஹிமாலயா
புக்கெ
உபயோகித்து
அதன்
அதிகப்படியான
புதுப்பொலிவை
உணருங்கள்
—நாள்முழுவதும்!
Himalaya Bouquet
ஹிமாலயா
புக்கெ
டால்கம் அண்டு டாய்லெட் பவுடர்ஸ்
சிவப்புக் கோடிட்ட ஹிமாலயா பொக்கே
டாய்லெட் பவுடர் டின் ஒரு பவுடர்
பேடுடன் கூடியது.
HBP. 12A-50 TM இராஸ்மிக் கம்பெனி லிமிடெட்டுக்காக இந்தியாவில் தயாரித்தது.

REGISTERED No. M. 4382
Registered as a Newspaper in Ceylon

பிரவேசக் கட்டணம் கிடையாது!

இந்த அரியதான
டால்டா க்விஸ்
போட்டியில் கலந்துகொள்ளுங்கள்

முடிவு தேதி : 30 செப்டம்பர் 1955

ரூ. 25002

ஜெயிக்க வேண்டும்!!

(மற்றொரு தொகையான ரூ. 20,001 தருமத்திற்கு அளிக்கப்படும்)

முதல் பரிசு
ரூ. 20,001*

இரண்டாவது பரிசு
ரூ. 5,001



* முதல் பரிசு பெற்றவரோ, அல்லது முதல் பரிசைப் பகிர்ந்தவர்களோ ஒன்று சேர்ந்து ஒரு குழந்தைகள் ஆஸ்பத்திரிக்கோ அல்லது வார்டுக்கோ மற்றொரு தொகையான ரூ. 20,001 அளிப்பதற்கான உரிமை யுண்டு.

உங்கள் டால்டா வியாபாரியிடமிருந்து ஒரு பிரவேச பாரத்தைப் பெறுங்கள்!

எல்லோரும் கலந்து கொள்ளலாம் (பம்பாய், ஐதிராபாத், சௌராஷ்டிரா, மைசூர் இராஜதானிகளில் உள்ளவர்களைத் தவிர).

HVM. 252-50 TM